பக்கங்கள்: பன்னிரண்டு + VI

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 05 செவ்வாய்க்கிழமை (19.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 174

# பிரபா உட்பட புலிகளின் தலைவர்கள் அழிக்கப்பட்டனர் என அரசு அறிவிப்பு

## நேற்றுடன் யுத்தம் முடிவடைந்தது என்கிறது பாதுகாப்பு அமைச்சு



பிரபாகரன் | பொட்டு அம்மான் | சூசை | நடேசன் | ரமேஸ் | புலித்தேவன் | சாள்ஸ் அன்ரனி

கொழும்பு, மே 19

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மற்றும் அந்த அமைப்பின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், கடற்புலிகளின் தளபதி சூசை, அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன், முக்கிய தளபதி ரமேஸ் உட்பட புலிகளின் உயர் தலைவர்களை இராணுவத்தினர் கொன்றுவிட்டனர் என்று அரசு நேற்று அறிவித்தது.

வன்னியில் எஞ்சியிருந்த புலிகளின் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களைக் கூண்டோடு கொன்றொழித்ததோடு இலங்கையின் சகல பகுதிகளினதும் அதிகாரம் பாதுகாப்புத் தரப்பினரின் முழுமையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டதாகவும், இதன் மூலம் இதுவரை காலமும் நாட்டில் இடம்பெற்றுவந்த யுத்தம் நேற்றோடு முடிவுக்கு வந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்தது.

எனினும், பிரபாகரன், சூசை ஆகிய பிரதான தலைவர்களின் சடலங்கள் படையினரால் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று இரவு விடுத்த அறிக்கையில் தெரிவித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார் என்கிறார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு, மே 19

விடுதலைப்புலிகளின் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார் அவ்வளவு தான். புலிகளின் உறுப்பினர்கள் பலரும் கொல்லப்பட்டுவிட்டனர்.

இவ்வாறு பி.பி.சி. தமிழோசைக்கு நேற்றிரவு தெரிவித்தார் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வந்தமை நேற்றுமாலை ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டது

### முப்படைத் தளபதிகளுக்கும் பதவி உயர்வுகள்

கொழும்பு, மே 19

வன்னியில் மேற்கொண்டுவந்த இராணுவ நடவடிக்கை முடிவுக்கு வந்து விட்டது என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று மாலை உத்தியோகபூர்வ மாக அறிவிக்கப்பட்டது.

அலரி மாளிகையில் நேற்று மாலை நடைபெற்ற விசேட நிகழ்வில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு அவசியமான தீர்வை தமிழ் மக்களுக்கு முன்வைக்கக் கோருகிறது பாரதம்

புதுடில்லி, மே 19

இலங்கையில் தமிழ் மக்களுக்கு வலுவான அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு அவசியமான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென இலங்கை அரசிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செய்தித் தொடர்பாளர் விஸ்ணு பிரகாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

### பிரபா இறந்ததை மஹிந்த ஊர்ஜிதம்

வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன், இன்று (நேற்று) இலங்கை ஜனாதிபதி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.செயலாளர் நாயகம் வெள்ளியன்று கொழும்பு வருவார்

கொழும்பு, மே 19

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ-மூன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு ஒரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம இத்தகவலை தெரிவித்தார்.

முல்லைத்தீவு, மக்கள் பாதுகாப்பு வலயத்தில் இருந்து வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் மறுவாழ்வுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று நாடாளுமன்றில் உரை

கொழும்பு, மே 19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று நாடாளுமன்றத்தில் யுத்த வெற்றி தொடர்பாக முக்கிய உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு சபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த வெற்றிக்காக மஹிந்தவுக்கு ரணில் தொலைபேசியில் வாழ்த்து

கொழும்பு, மே, 19

புலிகளிடமிருந்து வடக்கை மீட்டமைக்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி வழியாக நேற்று வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

வெளிநாடு சென்றுள்ள அவர் அங்கிருந்தவாறே தொலைபேசி வழியாக இந்த வாழ்த்துக்களைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அடையாளம் காணப்பட்ட 18 பேர்ன் விவரம் அறிவிப்பு

கொழும்பு, மே 19

வன்னியில் நேற்று நடந்த சண்டையில் கொல்லப்பட்டவர்களில் 18 உயர்மட்டத் தலைவர்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.திரும்பினார் நம்பியார்

கொழும்பு, மே 19

இலங்கையில் மோதலை நிறுத்தி, மோதல் பகுதியில் சிக்கியிருந்த மக்களின் தேவைகளைக் கவனிப்பதற்காக ஐ. நா. செயலரின் விசேட பிரதிநிதியாக கொழும்புக்கு வந்திருந்த விஜய் நம்பியார் நேற்று நியூயோர்க் திரும்பினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதரகத்துக்கு முன்பாக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்!

### மில்லிபான்டின் கொடும்பாவி எரிப்பு

கொழும்பு, மே, 19

கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு முன்னால் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

இலங்கையில் உடனடியாக யுத்தம் நிறுத்தப்படவேண்டும். இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட (12 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மேல் நீதிமன்ற நீதிபதிகளாக மூவர் நேற்று சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், மே 19

வடக்கு - கிழக்கில் மேல் நீதிமன் றங்களுக்கான மூன்று நீதிபதிகள் நேற்றுப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர். இவர்களின் பதவிக் காலம் கடந்த வெள்ளிக்கிழமை முடிவடைந்ததை அடுத்து பதவிப் பிரமாண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக இ.த. விக்னராஜாவும்- திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி யாக எம்.இளஞ்செழியனும் - கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாக எம்.எஸ்.எம். ஜமீலும் - நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவரும் இன்று தமது பதவிகளை ஏற்றுக்கொள்ள இருக்கின்றனர். என நீதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(அ-1)

# வவுனியா கல்வியியற் கல்லூரியிலிருந்து மட்டக்களப்புக்கு 17 பேர் மாற்றம்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கணித பாட கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மாற்றப்பட்ட 17 பேரின் விவரம் வருமாறு:-

கணிதம்

எஸ்.சாந்தினி-வல்வெட்டித்துறை, பி.தில்லைவனராஜ்-மீசாலை, ஏ.அனுஸ்ரன் -பருத்தித்துறை, என்.சாளினி -சுன்னாகம், கேதர்சினி-மிருசுவில்,எம்.லோகசுரணி -அளவெட்டி, எஸ்.சத்தியவான் -மானிப்பாய், எஸ்.சியாமளா-நீர்வேலி, இ.எம்.கௌசிகன்-யாழ்ப்பாணம், ஆர்.ஞானரூபி -அச்சு வேலி, வி.ரி.இராமச்சந்தர்-கரவெட்டி, எஸ்.கௌசியா-சுன்னாகம், ஆர்.பிரசாந்தன்-ஏழாலை, ஆர்.கஸ்தூரி-நெல்லியடி, கரவெட்டி, கே.திலீபன்-சாவகச்சேரி, ஆர். நிறோஜன் -காரைதீவு -11, பி.ஜீவசோதி- புலோலி-

# வவுனியா கல்வியியற் கல்லூரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், மே 19

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றுவந்த இந்துசமயம், கிறிஸ்தவம் ஆகிய பாடநெறிகள் இந்த வருடம் யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்து நாகரிகம்

ரி.தனுசியா-மருதன்குளம், யு.செல்வராசா- சுந்தரபுரம், என்.சத்தியா - மந்துவில் வடக்கு, ஏ.தர்மினி-பண்டாரிக்குளம், வி.தர்சினி-சில்லாலைமேற்கு, பண்டத்தரிப்பு, ரி.சிவகுமார்-லிந்துல, ஆர்.விக்னேஸ்வரி- வேப்பங்குளம், ரி.தர்மினி -வேப்பங்குளம், ரி.கோகுல்ராம்- கந்தர்மடம், ஆர்.சமந்தரூபன்-கல்குடா, வை.ஹாசினி- கொடிகாமம், இ.ஜீவிதா- வண்ணார்பண்ணை, எஸ்.(பெயர் தெளிவில்லை தே.அ.அ.இல. 873473258V)-மானிப்பாய் வடக்கு, வி.சுபித்திரா - சுழிபுரம், என்.செந்தூரன்-பூந்தோட்டம், கே. பிரியதர்சினி- மட்டக்களப்பு, கே. நிசாந்தினி- சிலாபம், எஸ்.மதன்-திருகோணமலை-

கிறிஸ்தவம்

அருட்சகோதரி எஸ்.தேவஜெனோவா-தலவாக்கொல்லை, அருட்சகோதரி. அனிற்றலா- யாழ்ப்பாணம், அருட்சகோதரி. மேரிடிலிஸ்-கொழும்பு, அருட்சகோதரி மரியா நிவேதா- அக்கரைப்பற்று, சகோதரி எஸ். கமலின்- யாழ்ப்பாணம், சகோதரி ரி.வேணிகலாமேரி -வவுனியா, சகோதரி எஸ்.மெரீனா- தலவாக்கொல்லை, சகோதரி ஏ.எல். றென்சி- வெளிமடை, எ.ரி.டி.றுக்சி- யாழ்ப்பாணம், எஸ். ஏ.சூரியா- கீரிமலை, எம். ஜெசீமா- வவுனியா, ஏ.அருள்வதனி-யாழ்ப்பாணம், எம்.ஜே.மரீன்- ஆனைக்கோட்டை, சீ.டிலானி-வவுனியா, சீ.டி.ஜெயசிறி சிசிலியா- பசறை, ஜி.சுகனிதா- கல்முனை, எஸ்.இராசதுரை -செங்கலடி, எஸ்.பி. ஏ.ரி.கிசானி- முந்தல்-

தெரிவு செய்யப்பட்டவர்கள் நியமனக் கடிதத்தையும் உரிய படிவங்களையும் கல்லூரியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பதிவு செய்வதற்காக உரிய ஆவணங்களுடனும் விடுதியில் தங்குவதற்கான ஆயத்தங்களுடனும் பெற்றோருடன் உரிய நேரத்திற்கு முன்பாக கல்லூரிக்கு வருகை தருமாறும் பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் கேட்டுள்ளார்.

(1)


ATX CASING (With Power Supply)
Litho/Symbol 3000/-
Mipaq/Powelogic/Powerpro 3250/-

UPS 650W
Intex 600 4900/-
DCP/Panora 650 4900/-
UPS 1.2KV (1200)
Power Tree 1200 W (1.2 KV) 9500/-

MP3/MP4/MP5 PLAYERS
MP 3 Player 2 GB 2500/-
MP 4 Player Sony Mini 1 GB 4000/-
MP 5 Player Orange 2 GB 6500/-
MP 5 Player Sony 2 GB 7000/-

SUBWOOFERS
Micro Lab 2.1 MII3 3100/-
Micro Lab 2.1 M280 3750/-
Creative 2.1 SBS380 3500/-
Micro Lab 5.1 MIII3 6250/-
Micro Lab 5.1 M300 II 6400/-
Creative 5.1 A500 7600/-

PRINTER
Canon 5750/-
Samsung LaserJet 12000/-
Samsung mini Photocopier 44000/-

ACCESSORIES
Optical Mouse 400/-
Keyboard 400/-
Head Phone (with Mic) 400/-
Multimedia Speaker 550/-
VGA Card PC Express 512 MB 5750/-
Laptop Bag 2000/-
Laptop Cooling Fan 2750/-
TV Card 2750/-
Card Reader (All in One) 700/-
Bluetooth 700/-
Power Supply 1750/-

MOTHER BOARD
Proccessor & Mother Board (2 in 1) 7500/-
MSI 945 DDR II 5400/-
Biostar G 31 5900/-

MONITOR - CRT
HP Pure Flat 17" 9000/-
Prolink Pure Flat 17" 10750/-
View Sonic Pure Flat 17" 12900/-

MONITOR - LCD
Monitor 15" LCD 12000/-
View Sonic 16" LCD 13900/-
View Sonic/Samsung 17" LCD 14700/-

PENDRIVE
1 GB 550/- 2 GB 850/- 4 GB 1100/-
8 GB 1950/- 16 GB 3500/-

HARD DISK
Maxtor 80 GB 4700/-
Maxtor 160 GB 5250/-
Maxtor 250 GB 5900/-

PROCESSOR
Intel 1.8 Celeron 5200/-
Intel 2.0 Duo Core 8200/-
Intel 2.2 Duo Core 9200/-
Intel 2.5 Duo Core 9900/-

MEMORY
Ram DDR II 1 GB 1750/-
Ram DDR II 2 GB 3000/-
Ram DDR I 256 MB 2000/-
Ram DDR I 512 MB 2600/-
SD Ram 256 MB 1000/-

DVD WRITTER
LG 22X SATA 3250/-
Samsung 22X SATA 3250/-

* Stock Available

LAPTOP - ACER 89900/-
• Intel 2.0 Duo Core
• 160 GB Hard Disk
• 1 GB DDR II Ram
• DVD Writter • Webcam
• Modem 56 K • Bluetooth • WiFi • Bag
(1 year International Warranty)

TONER
• HP 12 A 5400/- • HP 35 A 5400/-
• HP 13 A 5250/- • HP 49 A 5250/-
• HP 92 A 5300/-
• Samsung ML 2010 7900/-
• Samsung ML 1640/2240 7900/-

* Warranty Value 1-3 years

MUSIC WORLD & COMPUTERS
141 B,


# தேங்காய்விலை வீழ்ச்சியடைந்தது

தென்மராட்சிப் பிரதேச சந்தைகளில் தேங்காயின் விலை திடீரென வீழ்ச்சியடைந்ததால் உற்பத்தியாளர்களுக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

சந்தைகளில்25 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட தேங்காய்கள் கடந்த வாரம் தொடக்கம் 8 ரூபா தொடக்கம் 18 ரூபா வரை விற்கப்படுகிறது.அண்மைக்காலமாக வீசும் காற்றினால் பெருமளவு தேங்காய்கள் பழுத்து விழுவதாகவும் இதனால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (1-207)

# மரண அறிவித்தல்கள்

## சண்முகநாதன் நல்லைநாதன் (சட்டத்தரணி)

வேலணை மேற்கு, சிற்பனையைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா நல்லைநாதன் நேற்று (18.05.2009) திங்கட்கிழமை வவுனியாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகராசா - அன்னமுத்து தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - பூபதி தம்பதியரின் மருமகனும் சித்திராதேவியின் அன்புக் கணவரும் வாகீசன், அகிலன், சஞ்சீவன், பிரதுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுருநாதன், காலஞ்சென்ற இலங்கைநர்தன் மற்றும் உலகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

வவுனியா.

## சுந்தரம்பிள்ளை செல்லத்துரை

(இளைப்பாறிய ஓவசியர் - காரைநகர்)



காரைநகர், இராசாந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இடைப்பிட்டியை வதிவிட மாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை செல்லத்துரை (இளைப்பாறிய ஓவசியர், பெருந்தெருக்கள் திணைக்களம்) நேற்று(18.05.2009) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் ரவீந்திரன், உலகேந்திரன், முரளீதரன், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிதேவி, காலஞ்சென்ற நந்தினி மற்றும் காயத்திரி, கலைவாணி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.05.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்.

இடைப்பிட்டி, காரைநகர்.

## திருமதி மகாலிங்கம் எமிலின்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாலிங்கம் எமிலின் 17.05.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னப்பு மகாலிங்கத்தின் அன்பு மனைவியும் ஜெ.டொலறோசா, டொறின் யசிந்தா(France), ஜெராட்(France), சுதர்சன் (France), டொறின் ஜெற்றூட் (France), விக்டோறியா (ஆசிரியை, யா/ வண் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம், ஆறுகால்மடம்), ஜெயசீலி(France) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயராசா, அன்ரன், ஜிறின் யூஜின், வினிஸ்ரலா, உதயகுமார், எல்விஸ் பிரஸ்லி,கிளேற்றஸ் ஆகியோரின் மாமியும் ஜெயறீகன் (நிக்சலா), செறின்ஜடா, டயானா, பெதறிக்சன்,றொலிங்சன், ஜெபின், ஜெனூசியா, ஜெறோமி, கெவின், எமில்ரன், கரோலின், திவ்யா, டயன், டொறியோன், ஜெறோம், டிறோன்சன் ஆகியோரின் பேர்த்தியும் கதறீனாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.மகாலிங்கம் (கணவர்).

குருசு மதவடி, ஆனைக்கோட்டை.

## சிவகுரு மகாதேவன் (பாட்ஷா)



பாவலர் துரையப்பா வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சிவகுரு வீதி, ஏழாலை மத்தி, ஏழாலையினைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு மகாதேவன் 16.05.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான சிவகுரு - பாக்கியம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நல்லையா(ஆசிரியர்), எமிலி (ஆசிரியர்) ஆகியோரின் இளைய மருமகனும் அமரர் சகுந்தலராணியின் (முன்னாள் ஊழியர், மின்சார சபை, சுன்னாகம்) அன்புக் கணவரும் செல்வி றொசினின் (மாணவி IBMS Institute, கொழும்பு) அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான மகேந்திரன், மகாலிங்கம், மாயாதேவி மற்றும் மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தேவராஜா (முன்னாள் நில அளவையாளர், கண்டி), புஸ்பராணி (முன்னாள் ஆசிரியர்),சுகிர்தராணி(முன்னாள் ஆசிரியர்) மற்றும் திருமதி செல்வராணி (லண்டன்), சற்குணராஜா(கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக இன்று (19.05.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏழாலை உயர்த்தியோடை அமெரிக்கன்மிசன் சேமக்காலைக்கு எடுத்துச் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.மகேஸ்வரன் (சகோதரன்).

சிவகுரு வீதி, ஏழாலை மத்தி,ஏழாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர்களின் மனங்களை வெல்வதே மேலானது

இலங்கை தேசத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடாளுமன்றக் கூட்டம் ஒன்றை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று கூட்டியிருக்கின்றார்.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒன்றில் ஜனாதிபதி தலைமை வகித்து உரையாற்றுவதற்கு வசதியாக நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் நள்ளிரவோடு இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது.

புதிய கூட்டத் தொடரை இன்று சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கும்போது, தமது தலைமையில் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் வாய்ப்பு ஜனாதிபதிக்குக் கிடைக்கிறது.

ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய விடுதலைப் புலிகளின் தலைமையை அடியோடு அழித்து, அதனை நசுக்கியதோடு, நாட்டில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதான அரசின் அறிவிப்பை இன்று நாட்டு மக்களுக்கு விடுப்பதற்காகவே ஜனாதிபதி இந்த உரையை நாடாளுமன்றில் நிகழ்த்துகின்றார் என்றும், அதற்காகவே நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டு புதிய கூட்டத் தொடரின் ஆரம்ப வைபவம் இன்று நடத்தப்படுகின்றது என்றும் அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைமை கூண்டோடு அழிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசு நேற்று நண்பகல் அறிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக கடந்த மூன்று ஆண்டுகளாக 'இந்த அரசு 'மனிதநேய மீட்புப் போர்' என்ற பெயரில் நடத்தி வந்த யுத்தம் நேற்றுடன் முடிவுக்கு வந்துவிட்டதாக இலங்கை இராணுவத் தளபதி லெப்டினண்ட் ஜெனரல் சரத் பொன்சேகா நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார். 'இந்த யுத்தத்தை எனக்குப் பின்வரும் இராணுவத் தளபதி ஒருவர் தொடர்வதற்கு நான் விட்டுச் செல்லமாட்டேன். எனது காலத்திலேயே அதை முடிவுறுத்துவேன்'- என்று சூளுரைத்துத் தென்னிலங்கையின் மக்களின் பேரபிமானத்தைப் பெற்றுக்கொண்ட அவர், அந்த வகையில் தென்னிலங்கை பௌத்த - சிங்கள மக்கள் மத்தியில் மேலும் ஒருபடி இன்று உயர்ந்து மேன்மை பெற்றிருப்பார் என்பது நிச்சயம்.

பிரிட்டிஷ் பிடியிலிருந்து இலங்கை விடுவிக்கப்பட்ட பின்னர், தென்னிலங்கை மக்கள் இவ்வளவு மகிழ்ச்சி ஆரவாரத்துடனும், சிறுபான்மையினரான தமிழர்கள் அதற்கு முற்றிலும் மாறான மனநிலையுடனும் திகழும் ஒருநாள் இப்போதுதான் வந்திருக்கின்றது என்று கூறலாம்.

'பயங்கரவாதிகளான புலிகள் அழிக்கப்பட்டால், ஈழத் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும்' - எனக் கூறி வந்த உள்ளூர், உள்நாட்டு மற்றும் சர்வதேசத் தரப்புகள் இனி அந்த நீதியை எப்படிப் பெற்றுக்கொடுக்கப் போகின்றன என்பதை வெறுமனே பார்த்து வாளாவிருப்பதைத் தவிர, தமிழர்களுக்கு அதிக பங்களிக்கக் கூடிய விடயங்கள் பெரும்பாலும் இல்லை.

தெற்கின் இந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள், ஆரவாரங்களுக்கு மத்தியில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டி நினைவூட்டுவதும் பொருத்தமானதுதான்.

இன்று முழு இலங்கைத் தீவின் சகல பிரதேசங்களையும் அரசின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து புலிகளின் பிடியை முற்றாக சிதறடித்ததாக இந்த அரசு புளகாங்கிதம் கொள்கின்றமை போல, 1996 ஆம் ஆண்டு முற்பகுதியில் யாழ் குடாநாட்டைப் புலிகளிடமிருந்து மீட்டபோது அப்போதைய சந்திரிக்கா அரசும் அச்சமயம் மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது.

ஓர் எதிரியின் தேசத்தைக் கைப்பற்றித் தனது ஆளுகைக்குள் கொண்டு வந்தமையை ஒப்ப, குடாநாட்டு மீட்பைக் கொண்டாடியது அப்போதைய அரசு. குடாநாட்டை வெற்றிகரமாக மீட்ட தளபதியாக அப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, அது தொடர்பான 'வெற்றிப் பட்டயத்தை' நாட்டின் தலைவியான சந்திரிக்கா குமாரதுங்கவிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கும் பெரும் நிகழ்வு அன்று ஆரவாரமாகக் கொண்டாடப்பட்டது.

பின்னர் தமது ஆட்சி முடிவுக்கு வந்த சமயம் அந்த நிகழ்வை அப்படி ஆர்ப்பாட்டமாக - ஆடம்பரமாக - நடத்தியமைக்காகப் பெரிதும் கவலை தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க. 'இந்த நிகழ்ச்சியின் மூலம் தமிழர்களை எனது நிரந்தர எதிரியாக்கிக் கொண்டேன்' என்றும், 'எனது அரசியல் வாழ்வில் நான் இழைத்த மிகப் பெரிய தவறு இது' என்றும் சாரப்பட பின்னர் அவர் கருத்து வெளியிட்டார்.

நன்மை - தீமைகள், பிரதிபலன்கள், பிராயச்சித்தங்கள் போன்றவை குறித்தெல்லாம் சிந்திக்கும் தலைவர்களுக்கு காலம் கடந்தாவது இத்தகைய வேதனைகள், மன உளைச்சல்கள் ஏற்படுவதுண்டு.

தமிழரின் ஆயுத பலத்தை வெல்வதைவிட அவர்களின் மனதை வெல்வதே நிரந்தர அமைதிக்கும், நீடித்த சமாதானத்திற்கும் வழிவகுக்கும்.

நடந்து முடிந்தது - அல்லது ஒப்பேறியிருப்பது - ஆக்கிரமிப்பும், அடக்குமுறையும், மேலாதிக்கத் திணிப்பும்தான் என்ற கருத்து சிறுபான்மையினர் மனதில் ஆழமாகப் பதிந்து இருக்கும்வரை எது வெற்றி, எது சாதனை என்ற விடயங்கள் எல்லாம் கேள்விக் குறிகளே. எனவே, அவர்களின் மனங்களை வெல்வது பற்றிச் சிந்திப்பதே மேலானது; ஆக்கபூர்வமானது. அரசு இதனைச் சிந்தை யில் கொள்ளுமா?

# விடுதலைப் புலிகளுடனான இராணுவ வெற்றி தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது

## தமிழ்ப் புத்திஜீவிகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 19

விடுதலைப் புலிகளுடனான இராணுவ வெற்றி தேசிய பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என தமிழ்ப் புத்திஜீவிகள் குழாம் அறிவித்துள்ளது.

நிரந்தரமான சமாதானத்தை எட்ட வேண்டுமாயின் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அரசியல் தீர்வுத் திட்டத்தின் அவசியம் விஞ்சி நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

டாக்டர் தேவநேசன் நேசையா, சீலன் கதிர்காமர், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, எஸ்.சிவதாசன், எல்.என்.பாலரட்ணராஜா, எஸ்.சின்னையா, எஸ்.மாழவராயர், அனிதா நேசையா, வீ.பொன்னம்பலம், டாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து, எஸ்.சுமதி, செல்வி திருச்செந்தூரன் மற்றும் ஆர்.விசாகப்பெருமாள் ஆகியோர் கூட்டாக இணைந்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் அதிகமாக பாதிக்கப்பட்டது நிராயுதபாணிகளான அப்பாவி தமிழ்ப் பொது மக்களே என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, தமிழர் அபிலாஷைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடிய அதிகாரப் பகிர்வுத் தீர்வுத் திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

# இரத்த ஆறு ஓடாத வகையில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டதாம்

## மனித உரிமைகள் அமைச்சர் பெருமிதம்

கொழும்பு, மே, 19

முப்பது வருடங்களுக்கு மேலாக நாட்டில் நீடித்திருந்த பயங்கரவாதத்தை இரத்த ஆறு ஓடாத வகையில் ஒழித்துக்கட்டிய பெருமை இலங்கைக்கு மாத்திரமே உரித்தாகும்

- இவ்வாறு அனர்த்த இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்த ார்.

புலிகளிடமிருந்து மீட்கப்பட்டுள்ள இலட்சக்கணக்கான சிவிலியன்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவருவதே அரசின் அடுத்தகட்ட இலக்கு எனவும் அவரது அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் இவ்வாறு கூறினார்.

புலிகளின் பிடியிலிருந்து அனைத்து சிவிலியன்களையும் அரசு எவ்வாறு வெற்றிகரமாக மீட்டெடுத்ததோ அதேபோல் அவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவந்து வடக்கில் மீண்டும் ஜனநாயகம் நிலைநிறுத்தப்படும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கையிடம் மன்னிப்புக் கோரவேண்டுமென மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாரியளவு இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது என ஐக்கிய நாடுகள் அமைப்பு உண்மைக்குப் புறம்பான தகவலை வெளியிட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து அப்பாவிப் பொதுமக்களை விடுவிக்க மேற்கொள்ளப்படும் முயற்சியை ஐக்கிய நாடுகள் அமைப்பு பிழையான வகையில் அர்த்தப்படுத்தியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் இலங்கைக் கிளைப் பேச்சாளர் கோர்டன் வைஸ் முட்டாள்தனமான கருத்துக்களை ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார் என்றும் அமைச்சர் சமரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொறுப்பற்ற செயல் காரணமாக உலகளாவிய ரீதியில் இலங்கைக்கு பல்வேறு அழுத்தங்கள் ஏற்பட்டன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்படவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, பொறுப்பற்ற ரீதியில் நடந்துகொண்ட ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை அரசிடம் மன்னிப்புக் கோரவேண்டும்-என அமைச்சர் சமரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். (சி)

## புலிகள் தடுத்துவைத்திருந்த படையினர் 7 பேர் மீட்பு!

கொழும்பு, மே, 19

புலிகளின் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த படைத்தரப்பைச் சேர்ந்த 7 பேரை இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் மீட்டனர் என இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

புலிகளிளுடனான இறுதிக்கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வெள்ளமுள்ளிவாய்க்கால் பிரதேசத்திலிருந்து நேற்றுக் காலை படைத்தரப்பைச் சேர்ந்த 7 பேரையும் மீட்டனர் என இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார கூறினார்.

இவர்களில் நான்கு பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என்றும் மூவர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார். (சி)

## ஐ.நா. அலுவலக பேச்சாளரின் நுழைவு அனுமதியை நீடிப்பதில்லையென அரசு முடிவு

கொழும்பு, மே19

இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்தின் பேச்சாளர் கோர்டன் வைசின் நுழைவு அனுமதியை நீடிக்கப்போவதில்லை என்ற முடிவை இலங்கை அரசு எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

பாதுகாப்பு வலயத்தின் மீது கடந்த 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பெருமளவான மக்கள் உயிரிழந்ததைத் தொடர்ந்து அங்கு ஒரு இரத்தக்களரி ஏற்பட்டுள்ளதாக ஐ.நாவின் கொழும்பு வதிவிடப் பேச்சாளர் கோர்டன் வைஸ் தெரிவித்த கருத்துக்கள் இலங்கை அரசை சீற்றமடைய வைத்துள்ளது.

எனவே, அவரை நாடு கடத்துவதற்கு அரசு முயற்சித்திருந்தது. ஆனால், அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதனால் அவரின் நுழைவு அனுமதியை மேலும் நீடிப்பதில்லை என்ற முடிவை இலங்கை அரசு எடுத்துள்ளது.

இதனிடையே கடந்த செவ்வாய்க் கிழமை ஐ.நாவின் கொழும்பு அலுவலகத்தின் பிரதிநிதியான அமின் அவாட்டை அழைத்த இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சு கோர்டன் வைஸ் இன் அறிக்கை தொடர்பாக கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 19

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் விவசாயக்குழுக் கூட்டம், ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் என்பன பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விவசாயக்குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் முற்பகல் 11 மணிக்கும் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (50-100)

# இலங்கையின் யுத்தக் குற்றம் தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ஐரோப்பிய வெளிநாட்டமைச்சர்கள் சந்திப்பில் தீர்மானம்

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிநாட்டு அமைச்சர்கள், இலங்கை அரசாங்கத்தின் யுத்தக் குற்றம் தொடர்பில் சுதந்திர விசாரணைகளுக்கு அழைப்பு விடுக்க எதிர்பார்த்துள்ளனர்.

பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்ஸில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றிய வெளிநாட்டு அமைச்சர்களுக்கு இடையிலான சந்திப்பின் போது இது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இது தொடர்பில் உடனடியாக ஆராயப்பட வேண்டும் எனவும் அவர்கள் அதன் போது வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில் அரசாங்கத்தின் இந்த யுத்த முன்னெடுப்புகளால், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேனாட் குச்னர் மற்றும் பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெளியாகியுள்ள அறிக்கைகள், அரசாங்கத்தினால் கனரக ஆயுதப் பாவனையை உறுதி செய்துள்ளதாகவும் அவர்கள் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தினால் யுத்தம் நிறைவடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும், மோதல் பிரதேசத்தில் தொடர்ந்தும் பொதுமக்கள் மீட்கப்படாமல் இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (50)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 05 | 19.05.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ.11.55வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | மு.இ.08.57 வரை |
| சுபநேரம்: | 10.22 - 11.52 |
| ராகுகாலம்: | 02.52 - 04.22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி.ச.சொக்கலிங்கம்



க.செளந்தரராஜன்

தேசிய ஆவணமாக்கல் சபையால் வடமாகாணத்தில் சிறந்த நூலகமாக சுன்னாகம் நூலகம் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ ஜானக பண்டார தென்னக்கோன் அவர்களால் விருதளிக்கப்பட்டுள்ளமையை யிட்டு நூலகத்தின் சிறப்பான செயற்பாட்டுக்கு வழி சமைத்த வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், நூலகர் க.செளந்தரராஜன் ஆகியோரையும், சபையினதும் நூலகத்தினதும் ஊழியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம்.

வலி.தெற்கு பிரதேச வாசகர் வட்டம்.

# கண்ணீர் அஞ்சலி



## செல்வி கவிதா கனகராசா

(2004/2005 விஞ்ஞானபீடம் - திருநகர், கிளிநொச்சி)

06.05.2009 அன்று வன்னியில் ஷெல் வீச்சில் பலியாகிய விஞ்ஞானபீட மாணவி கவிதா கனகராசாவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(85332)

# விளையாட்டுவிழா

சுழிபுரம், மே 19

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் நடத்தும் வலி.மேற்கு பிரதேசம் சுழிபுரம் 11 குடும்ப விளையாட்டு விழா இன்று சுழிபுரம் மேற்கு பாண்டவெட்டை திருநாவுக்கரசு முன்பள்ளி மைதானத்தில் செல்வி சி.யாழினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வழக்கம்பரை சமுர்த்தி வங்கி முகாமையாளர் செல்வி சுதா தங்கராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (1-28)

# சாவகச்சேரியில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே19

சாவகச்சேரி நகரசபை பிரதான பொது நூலகத்தின் புத்தகக் கண்காட்சி நேற்று நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய நூலக வாரத்தையொட்டி ஏற்பாடு செய்யபப்பட்ட புத்தகக்கண்காட்சியினை வலி.பிரதேச செயலர் செல்வி பி.சபாரத்தினம் திறந்து வைத்தார்.

நிகழ்வில் சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த எழுத்தாளர் தாட்சாயினி நூலக அபிவிருத்திச்சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார்.

நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ம[illegible] றோ.க.த.க. பாடசாலை அதிபர் சி.பவரேந்திரன் பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (1-207)

## தவறிவிட்டது

காளிகோயிலடி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியுடைய தவராசா நிரோஜன் என்பவரது தேசிய அடையாள அட்டை (843443923V) கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அடையாள அட்டையில் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## SLAS பரீட்சைக்குரிய

* விடய ஆய்வு * பொது நிர்வாகம்
* நிதி ஒழுங்கு வசதிகள் வெளிவந்து விட்டன

மலிவு விலைக்கு

தொடர்பு: 0776055471, 0776155283

## பணிப்பெண் தேவை

15.09.2009 இல் இருந்து 15.10.2009 வரை பணிப்பெண் (பிரசவ காலத்திற்கு) தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 077 8146934
இ.ரவி குடும்பம்,
புலோலி, பருத்தித்துறை.

(85392)

# தீவகம் தெற்கு பிரதேச சபை - வேலணை

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 20.05.2009 முதல் 22.05.2009 பி.ப 1 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி :- 27.05.2009 நண்பகல் 12 மணி வரை

கேள்வி திறக்கும் திகதி :- 27.05.2009 பிற்பகல் 1.30 மணி

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவு தரம் |
|---|---|---|---|
| உப அலுவலக கட்டட திருத்தம் - நயினாதீவு | 3300.00 | 560.00 | M9/C10 |
| உப அலுவலக கட்டட திருத்தம் - மண்டைதீவு | 9330.00 | 560.00 | M9/C10 |
| கேணிக்கரை வீதி திருத்தம் - வேலணை (தார்) | 13900.00 | 560.00 | M9/C10 |
| நவக்கை வீதி திருத்தம் - வேலணை (தார்) | 6450.00 | 560.00 | M9/C10 |
| சிற்பனை வீதி திருத்தம் - வேலணை (தார்) | 16000.00 | 560.00 | M9/C10 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்வி இக்ராட் தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்தும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களிடமிருந்தும் எம்மால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகளில் செயலாளர், தீவகம் தெற்கு பிரதேசசபை, வேலணை என முகவரியிடப்பட்டு கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் விவரத்தை குறிப்பிட்டு எமது அலுவலகத்தில் உள்ள கேள்விப்பெட்டியிலோ அல்லது பதிவுத் தபாலிலோ எமக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி திறக்கும் நேரம் கேள்விக்காரரோ அல்லது அவர் சார்பான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்
செயலாளர், தீவகம் தெற்கு பிரதேச சபை,
வேலணை.

தீவகம் தெற்கு பிரதேச சபை,
வேலணை.

## சுன்னாகத்தில் திருட்டு

சுன்னாகம், மே 19

சுன்னாகத்திலுள்ள மதுபான மொத்த விற்பனை நிலையமொன்று ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ளவேளை உடைக்கப்பட்டு விலையுயர்ந்த மதுபானங்கள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவுவேளை முன்பக்கக் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் பல ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான விலையுயர்ந்த வெளிநாட்டு மதுபானங்களைத் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்திருட்டு தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை சுன்னாகம் பருத்திக் கலட்டியில் ஒரு வீட்டில் இரவுவேளை திருடர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். இச் சம்பவத்தில் துவிச்சக்கர வண்டியும், ஒரு தொகைப் பணமும் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (1-38)

# கல்விச்செயற்பாடுகள் கைதடியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 19

கைதடி, நாவற்குழி நலன்புரி நிலையங்களின் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் நேற்று யாழ். அரச அதிபர் க.கணேஸ் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டன. (1-207)

## வினாத்தாள் வெளியீடு

சென்ற வருட ஆங்கில மொழிப் பெறுபேற்றில் காணப்பட்ட பின்னடைவை நிவர்த்திசெய்யும் பொருட்டு, யாழ்.இந்துக் கல்லூரி ஆங்கில ஆசிரியர் திரு.சு.மகேஸ்வரனால் தயாரிக்கப்பட்ட 2009 க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான முதலாவது ஆங்கில மொழி மாதிரி வினாத்தாள் 21.05.2009 அன்று விற்பனைக்காக வெளியிடப்படும். பாடசாலைகளும் தனியார் கல்வி நிறுவனங்களும் புத்தக விற்பனை நிலையங்களும் கீழேயுள்ள முகவரியில் மொத்த அளவில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒன்றின் விலை ரூபா 50/- மட்டுமே

தொடர்பு: 680 கே.கே.எஸ்.வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்.
(கொக்குவில் சந்திக்கு மிக அண்மையில்)

# மரண அறிவித்தல்கள்



## குலசேகரம் இளங்கோ

வேலணையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் விஸ்வமடுவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம் இளங்கோ 14.05.2009 அன்று முல்லைத்தீவில் அகாலமரணமானார்.

அன்னார் குலசேகரம் காலஞ்சென்ற முத்துலட்சுமி தம்பதியினரின் மகனும் பாலசிங்கம் காலஞ்சென்ற ஞானேஸ்வரி தம்பதியினரின் மருமகனும் சற்குணேஸ்வரியின் அன்புக் கணவரும் சஞ்சீவன், சஞ்சிகா, சானுஜன் ஆகியோரின் அருமைத் தந்தையும் குலராசவதி, இளந்திரையன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார், சிவகாமசுந்தரி, சதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல்: நா.குலசேகரம் (தந்தை).

## சூசைப்பிள்ளை றோஸ்மலர் (தமயந்தி)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட சூசைப்பிள்ளை றோஸ்மலர் (17.05.2009) ஞாயிற்றுக் கிழமை மன்னாரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாம்பிள்ளை - எலிசபேத் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சீமான்பிள்ளை - பொன்தங்கம் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், மரிஸ்ரெலா, காலஞ்சென்ற ராஜன் மற்றும் லூசியா, கமிலஸ் (பிரான்ஸ்), ஜெசிமா (ஜேர்மனி), றொபட்கிளைப் (பிரான்ஸ்), விஜிதா, எடிசன், பொம்மினா, ஜெனிஸ்ரா, ஆகியோரின் பாசமிகு தாயாரும், செட்டி, யுஸ்ரீன், வசுமதி (பிரான்ஸ்), யூலியன் (ஜேர்மனி), றொக்சனா (பிரான்ஸ்), காலஞ்சென்ற தேவராசா மற்றும் ஜீவதாஸ், சாந்தி, டெனிசன், ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (18.05.2009) திங்கட்கிழமை பி.ப. 4 மணியளவில் மன்னார் செபஸ்ரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல:-40.2ம் குறுக்குத்தெரு.
பாஷையூர்.யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:-0779233039

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 11 ★ 11 ★ 1927



மறைவு 19 ★ 04 ★ 2009

## அமரர் மயில்வாகனம் வைத்திலிங்கம்

கடந்த 19.04.2009 அன்று இறைபதம் அடைந்த எமது சிறிய தந்தை மயில்வாகனம் வைத்திலிங்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும், பல வழிகளில் நாடி வந்து உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று (19.05.2009) செவ்வாய்க்கிழமை எமது நாவற்குழி இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொ.பாலச்சந்திரன்,
கேரதீவு வீதி,
நாவற்குழி.

(85391)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவினர் உணவகங்களுடன் கலந்துரையாடல்

நல்லூர்,மே 19

யாழ்.மாநகர சுகாதாரப் பகுதி உணவகங்களின் உணவு சுகாதாரம் குறித்த கருத்தரங்குகளை எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமையும் 27 ஆம் திகதி புதன்கிழமையும் நடத்தவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் 25 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.நகரப் பகுதியிலும் நல்லூர் பகுதியிலும் உள்ள உணவகங்களின் உரிமையாளர்களும்-

27 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள கருத்தரங்கில் வ்ண்ணார் பண்ணை, நாவந்துறை, அரியாலை, குருநகர் கொழும்புத்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்கு உட்பட்ட உணவு நிலையங்களின் உரிமையாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாஸ் கேட்டுள்ளார். (203-111)

# யாழ்.நகரில் உள்ள உணவகங்களில் மாறுபட்ட விலைகளில் உணவுகள்

யாழ்ப்பாணம், மே 19

யாழ்.நகரில் உள்ள உணவகங்களில் உணவுகளின் விலைகள் இடத்துக்கு இடம் வேறுபட்ட விலையில் காணப்படுகின்றன.

கூடுதலாக அசைவ உணவகங்களிலேயே விலைகள் மாறுபட்டுக் காணப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

உணவகங்களில் மீன்சாப்பாடு ஒன்று 90 ரூபாவாகவும் சில உணவகங்களில் 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-224)

# புத்தூரில் இருந்து வல்லை வரையான வீதி விரைவில் அகலமாக்கிப் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம், மே 19

பருத்தித்துறை வீதியின் குறுகிய பகுதியை அகலமாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் இவ்வீதி அகலமாக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை வீதியில் புத்தூரில் இருந்து வல்லை பகுதி வரையான வீதியே அகலமாக்கித் தார் ஊற்றி புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வீதியின் இரு மருங்கும் குறைந்தது 10 அடியில் அகலமாக்கப்படவுள்ளது.

புத்தூரில் இருந்து வல்லை வரை பகுதி வெளிகொண்ட பிரதேசமாகையால் இவ் வீதியை அகலமாக்கிப் புனரமைப்பதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

குடிமக்களின் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி இவ்வீதி அகலமாக்கப்படும்.

தற்போது இந்த வீதியை அகலமாக்கிப் புனரமைப்பது குறித்தும் அதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

தற்போது பொன்னாலை, வலந்தலை வீதி புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த வேலைகள் நிறைவுற்றதும் பருத்தித்துறை வீதியை புனரமைக்கும் பணிகள் ஆரம்பமாகும் என்று கூறப்பட்டது. (203-224)

# வீதி புனரமைத்து தருமாறு மகஜர் கையளிப்பு

ஆனைக்கோட்டை, மே 19

ஆனைக்கோட்டை சிரமதான வீதியில் ஆரம்பித்து மேற்குப் பக்கமாக அமைந்துள்ள 200 மீற்றருக்கும் குறைவான வீதியைப் புனரமைத்துத் தருமாறு மேற்படி வீதிக்கு அருகாமையில் வசிக்கும் மக்கள் ஒன்று சேர்ந்து ஒப்பமிட்டு வலி.தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளரிடம் அண்மையில் மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட 'நிஷா' புயல் காரணமாக இந்த வீதி சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இவ்வீதியால் பயணிக்கும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும், இதனால் விபத்துகள் ஏற்படுவதாகவும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய வருடாந்த தேர்ப்பவனி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் மேற்படி வீதியில் இடம்பெறவிருப்பதால் அதற்கு முன்பதாக வீதியைப் புனரமைத்துத் தருமாறு மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலிப்பதாகவும் போதிய நிதி வசதி கிடைக்கும் பட்சத்தில் இவ்வீதி புனரமைத்துத் தரப்படும் எனவும் வலி. தென் மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் உறுதிமொழி வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (201-20)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, மே 19

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி டாக்டர் டபிள்யூ.ஆர்.கோம்ஸ் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ள போட்டிகளின் விவரங்கள் வருமாறு:

**ஆண்கள்**

* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை சென்அன்ரனீஸ் கல்லூரி. (பி.ப 3 மணி - யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட மைதானம்)

**பெண்கள்**

* வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை. (பி.ப 4 மணி - யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட மைதானம்)
* கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் உடுவில் மகளிர் கல்லூரி. (பி.ப 3 மணி - உடுவில் மகளிர் கல்லூரி மைதானம்)
* பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை எதிர் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை (பி.ப 3 மணி - வேம்படி மகளிர் கல்லூரி மைதானம்)

(50-86)

# கசிப்பு வைத்திருந்த ஐவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,மே 19

தென்மராட்சிப் பிரதேசத்தில் கசிப்பு வைத்திருந்த, ஐவர் அனுமதிப்பத்திரமின்றி சாராயம் வைத்திருந்த ஒருவர் ஆகியோருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தின் கெருடாவில், மட்டுவில், பூதன்கண்டி, சிவன்கோவிலடி, சந்திரபுரம், மீசாலை, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர் பரிசோதனையின்போது பிடிக்கப்பட்ட ஏழு பேருக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ் வழக்குகள் கடந்த பதினைந்தாம் திகதியன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

கசிப்பு வைத்திருந்த சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த நபருக்கு 75 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 25 மாத சாதாரண சிறை அனுபவிக்குமாறும்-

மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தவறின் 15 மாத சாதாரண சிறைத்தண்டனையும், மட்டுவிலைச் சேர்ந்த நபருக்கு 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தவறின் 20 மாத சிறைத் தண்டனையும் கெருடாவில், பூதன்கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து தவறின் தலா ஐந்து மாத சிறைத் தண்டனையும் சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தவறின் ஐந்து மாத சிறைத் தண்டனையும் விதித்தார்.

இதேவேளை அனுமதிப் பத்திரமின்றி சாராயம் வைத்திருந்த மீசாலையைச் சேர்ந்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தவறின் 5 மாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

கொடிகாமம் சந்தைப் பகுதியில் கசிப்பு வைத்திருந்த நபரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். (203-207)




# பதவி உயர்வு வழங்கப்படாமையால் ஆசிரியர்கள் பெரும் பாதிப்பு

வேலணை , மே 19

யாழ்ப்பாணம், வலிகாமம் ஆகிய வலயக் கல்வி அலுவலகங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான ஆசிரிய சேவைப் பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை என ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரியர் சேவைத் தரங்கள் 3-I, 2-2, 2-I ஆகியவற்றுக்கான பதவியுயர்வுகளை வழங்க கல்வி அமைச்சு உரிய அனுமதியை வழங்கியுள்ளது.

இது தொடர்பான கல்வி அமைச்சின் சுற்று நிருபம் 2007ஆம் ஆண்டில் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனினும் இன்றுவரை பல ஆசிரியர்களுக்கு இந்தப் பதவியுயர்வுகள் வழங்கப்படவில்லை.

இதனால் ஆசிரியர்கள் குறைந்த சம்பளத்தைப் பெறுவதுடன், இனிவரும் காலங்களில் வரும் பதவியுயர்வுகளிலும் பாதிக்கப்படுவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (201-267)

# மரவேலைப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம் , மே 19

வடக்கு மாகாண கைத்தொழில் திணைக்களத்தால் யாழ்.பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டோருக்கு ஆறு மாதகால மரவேலைப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சிபெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் தமது சுய விவரங்களுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (201)

# கோம்பையன் இந்து மயானத்திற்கு இறுதிக் கிரியைக்குச் செல்வோர் சிரமம்

யாழ்ப்பாணம்,மே 19

கோம்பையன் இந்து மயானத்திற்கு இறுதிக் கிரியைகளை மேற்கொள்ளச் செல்பவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி மயானத்தினுள் சடலத்தை எரிப்பதற்கு ஏற்கனவே ஆயிரம் ரூபா பணம் மயான அபிவிருத்திச் சங்கத்திடம் வழங் கப்படுகின்றபோதிலும் மயானத்தினுள் சடலத்தை எரிப்பதற்கு அங்குள்ளவர்களுக்கு மேலதிகமாகப் பணம் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை காணப்படுகிறது.

கட்டாயமாகப் பணம் செலுத்த வேண்டும் என இறுதிக் கிரியைகளை நடத்தச் செல்பவர்களிடம் சுமார் முந்நூறு ரூபா வில் இருந்து அறவிட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மயானத்தில் இருந்த இரு மடங்களும் உடைக்கப்பட்டுள்ளமையால் இறுதிக் கிரியைகளை நிறைவேற்றச் செல்பவர்கள் இளைப்பாறவும் இடமில்லாத நிலைமையும் காணப்படுகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்களை மயான அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் கூடிய கவனம் எடுத்து இறுதிக் கிரியைகளை நிறைவேற்ற வருபவர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (201-68)



பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் அல்வாயில் 'நெக்டெப்' நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபங்களின் திறப்பு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

அல்வாய் வடமத்தியில் அமைக்கப்பட்ட மண்டபத்தை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண 'நெக்டெப்' திட்டப் பணிப்பாளர் எஸ்.எம்.குரூஸ் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அல்வாய் வட மேற்கில் அமைக்கப்பட்ட கண்காட்சி மண்டபத்தை பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

அல்வாய் வடமத்தி பொதுநோக்கு மண்டபத்தை 'நெக்டெப்' [illegible] யாழ்.மீன் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் எஸ்.விஸ்வலிங்கம் ஆகியோர் நாடாவெட்டி திறப்பதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. அலு விகார காலமானார்

கொழும்பு,மே19

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளை மாவட்ட சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிக் அலுவிகார சுகவீனம் காரணமாக நேற்றுமுன்தினம் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் காலமானார்.

1960களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக அரசியலுக்குள் நுழைந்த அவர் அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் துறைமுகம், கடற்படை நடவடிக்கை மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்தி உள்ளிட்ட பல அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார்.

86 வயதான அலிக் அலுவிகார மரணிக்கும் போது கட்சியின் உபதலைவராகச் செயற்பட்டார். நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் நாடாளுமன்ற விடுமுறையைப் பெற்றுக்கொண்டு சிகிச்சை பெற்று வந்தார். (சி)





பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வல்வை றோ.க.த.க. பாடசாலையில் தேர்ச்சி மட்டக் கற்பித்தலில் பெற்றோரின் பங்களிப்பு என்னும் தொனிப்பொருளில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

நிகழ்வில் வடமராட்சி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் உரையாற்றுவதையும் வடக்கு மாகாண பாடசாலை மேம்பாட்டுத்திட்ட இணைப்பாளர் ந.அனந்தராஜா, பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன், வல்வை அ.மி.த.க. பாடசாலை அதிபர் பூ.சக்திவேல் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். பெற்றோரும் மாணவர்களும் ஆர்வமுடன் செயற்படுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: சுந்தா)


வசீகரத் தோற்றத்திற்கு!
சந்தனாலேப
(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கதம்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வல்லி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் வீரத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும்.
எடுப்பான கவர்ச்சித் தோற்றத்தைத் தரும்.






'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA. SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.
(வி/555203)


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 03 ★ 10 ★ 1948 | | 05 ★ 06 ★ 2002 |



### அமரர் இராசலிங்கம் அமரசோதி

திதி: 19.05.2009

ஆயிரம் உறவுகள் வந்தாலும் அப்பா
உங்களிற்கு நிகராகுமா?
தீராத துயருடனே வருடம் ஏழைக்
கழித்து விட்டோம்
என்றும் உங்கள் ஆசி வேண்டும்.


117A, கொழும்புத்துறை வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(85195)

## 3ஆம் வருட நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 25 • 01 • 1925 | | 19 • 05 • 2006 |



### அமரர் கணபதிப்பிள்ளை மார்க்கண்டுயோகவ்

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அவனியதில் நாம் வாழ
வழிகாட்டி நின்றவரே
ஓடி மறைந்ததையா மூன்று ஆண்டுகள்
கண் இமைக்கும் பொழுதெல்லாம்
இனிய உங்கள் முகம்
இதயக் கண்களில் உலாவுகிறது
இன்றுவரை நம்பமுடியவில்லை - நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்கள் என்று
என்றுமே எங்களுடன் வாழும் உங்கள் நினைவுகள்
இவ்வுலகினில் நாம் வாழும்வரை
என்றென்றும் நிலைத்து நிற்கும்
உங்கள் ஆத்மா இறைவனில் மகிழ்ந்திருக்க
இவ்வுலகில் நாம் இறைஞ்சுகின்றோம்
எல்லாம் வல்ல இறைவனை.

இல.25A, மூளாய் லேன்,
சுண்டுக்குளி தெற்கு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(85386)

## சைவசமய விவகாரக் குழு நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே19

கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவ மாணவியருக்கிடையே கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பத்துத் தரங்களுக்குமான சமய அறிவுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பரிசில் பெறுவோர் விவரம் வருமாறு:

*தரம் 04* - வைஷ்ணவி பிரதீபன் (மாணிக்கவாசகர் வித்தி, கரவெட்டி), குகனேசன் நிதுஸா (மாணிக்கவாசகர் வித்தி, கரவெட்டி), ம.நிலக்ஷிகா (நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.), தியாகராசா சகீர்தன் (ஏழாலை தெற்கு அ.த.க.பாட.).

*தரம் 05* - சித்திரா வசந்தராசா (இந்து மகளிர் ஆரம்ப பாட.), ஆரபி மோகனசேகரன் (மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்), தவராசா கிருசாந் (குட்டியபுலம் அ.த.க. பாடசாலை).

*தரம் 06* - தனுசிகா பொன்னம்பலம் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), கௌசிகா குலசிங்கம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வீபிசண்யா நாகேந்திரம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கார்த்திகா சிவப்பிரகாசம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம் 07* - இரத்தினேஸ்வரன் சிவேஸ்வரன் (யாழ்.இந்துக் கல்லூரி), கௌசிகா நடராசா (அத்தியார் இந்துக் கல்லூரி), உதிர்சியா உதயமோகன் (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கிரேதாகரன் லோகிஷன் (யாழ்.இந்துக் கல்லூரி).

*தரம் 08* - இரவிசந்திரன் மயூரதன் (யாழ்.இந்துக் கல்லூரி), உதயகுமார் பகீரதன் (கோண்டாவில் இந்து மகா வித்தி.), சுகன்யா செல்வராசா (பொன்னாலை வரதராஜபெருமாள் வித்தி.).

*தரம் 09* - துங்கராசா துஜீவா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வைகுந்தநாதன் சிந்துஜன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பசுபதிநாதன் நாகராசா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கஜேந்தினி நாகராசா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சங்கீர்த்தனா குமாரகுலசிங்கம் (இணுவில் மத்திய கல்லூரி), தர்மிக்கா போகாலகுமாரன் (வட இந்து மகளிர் கல்லூரி), கார்த்திகா யோகேஸ்வரன் (குடமியன் அ.த.க. பாடசாலை).

*தரம் 10* - லோசனா கிருஸ்ணசாமி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தர்சிகா செல்வராசா (வடஇந்து மகளிர் கல்லூரி), சரணியா ஸ்ரீகாந்தா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

*தரம் 11* - லபிதா சண்முகராசா (இணுவில் இந்துக் கல்லூரி), ராகவேந்தன் பாஸ்கரன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), மதிமலர் செல்வரத்தினம் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), துளசிகா ஒப்பிலாமணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

*தரம் 12* - கஸ்தூரி சிவகுரு (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி.), கார்த்திகா நாகேந்திரராசா (பெரியபுலம் மகா வித்தியாலயம்), ஜெயமதி தியாகராசா (பண்டத்தரிப்பு பெண்கள் உயர்).

*தரம் 13* - நிருபனா தேவதாஸ் (சிதம்பராக் கல்லூரி), சர்மிலா சத்தியவேல்நாதன் (இணுவில் இந்துக் கல்லூரி), சிவவாணி சின்னத்துரை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(203-111)

## மறைந்தவர்களுக்கு உருவப்படங்கள்

நல்லூர்,மே19

வேலணை ப.நோ.கூ. சங்கத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி மறைந்தவர்களைக் கௌரவிக்கும் வகையில் அவர்களின் உருவப்படங்கள் மேற்படி சங்கத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சங்கத்தின் தலைவர் அ.ஸ்ரீ பத்மராஜா தெரிவித்துள்ளார்.

(203-111)


படிவம்
இலங்கை விவசாயக் கல்லூரியில் சேருவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.
Bharathy Pathippakam
430, K. K. S. Road, Jaffna.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் பாலசிங்கம் சரோஜினிதேவி

தோற்றம் 15★05★1955

மறைவு 19★04★2009

ஆலமரம் போல வாழுவீரென்று இருக்க
பாதியிலே எம்மைவிட்டு பரமனடி சேர்ந்தீரே
ஏழேழு ஜென்மமும் உம்மையே
உறவாய் கேட்கின்றோம்..!
எம்மை வாழவைத்த இதய தெய்வத்திற்கு
என்றும் எமது கண்ணீர் பூக்கள்.

நினைவுடன்:
வி.வசந்தி (பெறாமகள்).

நயினாதீவு - 05. (85247)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி   2ஆம் ஆண்டு நினைவஞ்சலி





| அமரர் சின்னையா அம்பிகைபாகன் | | திருமதி தங்கம்மா அம்பிகைபாகன் |
|---|---|---|
| 23★04★1914 | மண்ணுலகில் | 30★11★1927 |
| 17★04★1996 | விண்ணுலகில் | 10★06★2007 |
| அமாவாசை - 24.04.2009 | | தசமி - 19.05.2009 |

அன்போடும் பண்போடும் எம்முடன் வாழ்ந்த நீங்கள்
ஆண்டவனின் திருவடி சேர்ந்ததேனோ எமைவிட்டு
ஆறாத்துயருடன் தேடுகின்றோம் உங்கள் இன்முகத்திற்காய்
ஆறுதல் தருவது உங்கள் திருவுருவப்படம் தான்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கே.கே.எஸ். வீதி, மல்லாகம். (85350) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியர்கள் காணாமல் போயுள்ளமை குறித்து ஐக்கிய நாடுகள் சபை மௌனம் சாதிப்பது ஏன்?

## 'இன்னர் சிற்றி பிறெஸ்' கடும் கண்டனம்

கொழும்பு, மே 19

வடபகுதியில் கடும் போர் இடம்பெற்ற வேளையிலும் இறுதிவரையில் அங்கிருந்து பணியாற்றிய வைத்தியர்கள் வவுனியா பிரதேசத்துக்கு வரும் வேளையில் காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் குறித்த தகவல்கள் எதனையும் அறிய முடியாதுள்ளது. இவ்விடயம் குறித்து ஐ.நா. மௌனம் சாதிப்பது கண்டனத்திற் குரியது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறது இன்னர் சிற்றி பிறெஸ் செய்தி நிறுவனம்.

இதுகுறித்து இணையத்தளச் செய்திகளில் வெளிவந்துள்ளவை வருமாறு -

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முள்ளி வாய்க்கால் வைத்தியசாலையில் கடந்த பல மாதகாலமாக இரவு பகலாக படுகாயமடைந்த நோயாளர்களைப் பாதுகாப்பதற்காக கடுமையாக உழைத்த இந்த வைத்தியர்கள், அங்கிருந்து வெளியேறி வவுனியா வரும் வேளையில் காணாமல் போயுள்ளனர் என தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

மேற்கொள்ளப்படும் பீரங்கித் தாக்குதல்களின்போது கொல்லப்படும், காயமடையும் மக்கள் பற்றிய தகவல்களை இவர்கள்தான் வெளி உலகத்துக்குத் தெரியப்படுத்தி வந்தனர். இதன் காரணமாக இவர்கள் கடத்தப்பட்டனரா எனக் கேள்வியெழுப்பியுள்ள இன்னர் சிற்றி பிறெஸ் -

இதுதொடர்பாக ஐ.நா.வின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பணிப்பாளர் ஜோன் ஹோம்ஸிடம் தெரியப்படுத்தியது.

இதுதொடர்பாக அவருக்கு தகவல் தெரியுமா எனவும் கடந்த வாரம் கேட்டிருந்தது. இருந்த போதிலும் இதுதொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என ஜோன் ஹோம்ஸ் தெரிவித்திருந்தார்.

தற்போது ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியார் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கும் நிலையில் கூட, இந்த வைத்தியர்களின் விடயத்தில் எதுவுமே செய்யப்படவில்லை எனவும் அது குற்றம் சாட்டியுள்ளது. (அ-சி)

# வாசகர் திருமுகம்

## இந்த வீதியைப் புனரமைப்பார்களா...?

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின்பின் புறமாக உள்ள வீதி இப்போது மக்கள் பாவனை அதிகமாகக் காணப்படுகின்ற வீதியாகக் காணப்படுகிறது. காரணம் வட்டுக்கோட்டைச்சந்தியில் பொலிஸ் நிலையம் அமைந்துள்ளதால் காரைநகருக்குச் செல்லும் வீதி மூடப்பட்டு விட்டது. அதனால் காரைநகருக்குச் செல்கின்றவர்களும், யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களும் இவ்வீதியைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

இவ்வாறு மக்கள் பாவனை அதிகமான இவ்வீதி பிரியும் பிரதான வீதி தெல்லிப்பழை அராலி வீதிச் சந்தியில் மிகப்பெரிய குழி ஏற்பட்டுள்ளது. இதனால் இதில் விபத்துக்கள் அடிக்கடி நடந்து கொண்டிருக்கின்றன. மழைகாலத்தில் இந்தக் குழியில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பலருக்குப் பயன்படுகின்ற இவ்வீதியை புனரமைத்துத் தருவது உயர் அதிகாரிகளின் தார்ப்பரிய கடமையாகும். எனவே துறைசார் அதிகாரிகள் விரைந்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட்டுக்கோட்டை.

எம்.ஏ.பார்த்தசாரதி.

## தீவுப் பகுதிக்கான பஸ் சேவை

யாழ்.நகரத்திற்கும் தீவுப்பகுதிக்கும் தொடர்பினை ஏற்படுத்தும் பெரும் சாதனமாக விளங்குவது போக்குவரத்தாகும்.

1996ஆம் ஆண்டின் பின் தீவுப் பகுதிகளில் மக்கள் மீளக் குடியேறிய பின்னர் இ.போ.சபை 5 பேரூந்துகளுடன் தமது சேவையினை ஆரம்பித்தது. ஆனால் 5 பேரூந்துகளுமே 1996ஆம் ஆண்டு தீவுப் பகுதிகளுக்கே தமது சேவையினை வழங்கி வந்தன எனலாம். காலப் போக்கில் பேருந்துகள் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட பின்னர் ஏனைய பகுதிகளுக்குமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் இன்று தீவுப்பகுதிகளுக்கான பேருந்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும், நேர சீர் இல்லாமலும் தமது சேவையை வழங்கி வருகின்றன. சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டால், ஒரே பதில் 'ரயர் இல்லை' அப்படியானால் வேறு பிரதேசங்களுக்கு சேவை வழங்க ரயர்கள் இருக்கின்றனவா?

கடந்த வருடம் (2008ஆம்) செப்ரெம்பர் மாதம் முதல் வாரப் பகுதியில் ஊர்காவற்றுறையிலிருந்து காலை 5.45 மணிக்கு புறப்பட்ட 780 வழி இலக்க இ.போ.ச பேருந்து தனியார் மினிபஸ் உடன் போட்டியில் ஓடி பயணிகளையும் வீதிகளில் காத்திருக்க விட்டு சுருவில் பகுதியில் வேப்பமரத்துடன் மோதி விபத்துக்குள்ளான பின்னர் இ.போ.சபையினர் ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்.நகருக்கான காலை நேர சேவையினை துண்டித்திருந்தனர். இதனால் பாடசாலை மாணவர்கள் பருவகாலச் சீட்டுகளையும் பைகளில் வைத்தபடி தனியார்மினி பஸ்களில் ஏறி பணமும் கொடுத்து காலதாமதமாகவும் சீருடைகள் கசங்கிய நிலையிலும் பாடசாலை செல்லும் நிலை ஏற்பட்டது. அதுமட்டுமா வைத்தியசாலையில் பணிபுரிபவர்கள் மற்றும் அலுவலகங்களில் பணிபுரிபவர்களும் இந்நிலைகளுக்குள்ளாவதுடன் மேலதிகாரிகளின் மனத்தாங்கலுக்கும் ஆளானார்கள்? இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டாவது ஊர்காவற்றுறைக்கும் யாழ்.நகருக்குமான 780 வழி இலக்க பேருந்து சேவையினை சீராக நடத்துவார்கள் என எதிர் பார்க்கின்றோம்.

காவலூர்

கதிரவன்.

## ஒழியாதா இந்த ஒலிபெருக்கி ஓலம்?

12.05.2009ஆம் திகதிய உதயன் இதழில் வாசகர் திருமுகம் பகுதியில் ''எதற்காக இந்த ஒலி பெருக்கி'' எனும் தலைப்பில் சுவாமி சித்ரூபானந்தா எழுதிய கடிதம் பலரின் கவனத்தைக் கவர்ந்திருக்குமென எண்ணுகிறேன். இதற்கு முன்பும் பல வாசகர்கள் இந்த ஒலி பெருக்கியின் ஓலத்தைத் தாளாது எழுதியிருந்தனர்.

உண்மையில் இந்த குழாய் ஒலிபெருக்கிகள் எமது ஆலயங்களில் எதுவித கட்டுப்பாடுமின்றி ஓலமிட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. வாசகர்களின் கடிதங்கள் எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு. இந்த ஓலத்தைச் சகித்து மனதுக்குள் புளுங்கிக் கொண்டிருக்கும் மக்கள் பலர் யாரிடம் முறையிடுவது யாரிடம் சொல்லி ஆறுவது? என்று தெரியாமல் இருக்கிறார்கள்.

ஒலிபெருக்கிப் பாவனைக்கு பொலிஸ் அனுமதி தேவை. மேலும் அதன் ஒலி அளவை, பாவிக்கும் நேரத்தையெல்லாம் கட்டுப்படுத்தும் அதிகாரமும் பொலிசாரிடம்தான் உள்ளது. யாழ்.மாநகர எல்லைக்குள் போக்குவரத்து ஒழுங்குகள் அவர்களால் அருமையாகச் செய்யப்பட்டு வருகிறதும், பொதுமக்கள் அச்சேவையை பாராட்டுவதும் எமது காதில் விழுகிறது. அதே போல் இந்த ஒலிபெருக்கி ஓலத்தை கட்டுப்படுத்தக் கூடாதா? இது பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபருக்குச் சமர்ப்பணம்!

கோயில் நிர்வாகிகளுக்கு ஓர் ஆலோசனை தயவு செய்து குழாய் ஒலிபெருக்கிகளை விட்டு, பெட்டி ஒலிபெருக்கிகளை (Box Speakers) பொருத்தி அளவாக இசையை ஒலிக்க விட்டு பக்தர்களைப் பரவசப்படுத்தலாமே! பக்தர்களுக்கு வேண்டியது மன நிம்மதியாக ஆண்டவனை வேண்டுவதுதான். இதனால் கோயில் சூழல் பாதிக்கப்படாது, மாசு அடையாது.

கோயில் ஒலிபெருக்கிகளுக்கு அடுத்தபடியாக மக்களை இம்சைப்படுத்துவது ஐஸ்கிறீம் ஊர்திகள்தான். உச்சத்தொனியில் பாடல் இசைத்தபடிமூலை முடுக்கெல்லாம் படையெடுக்கின்றன. இதனால் வாகன ஓட்டிகளும் ஐஸ்கிறீம் வாங்கும் ஆவலில் ஓடிவரும் பிள்ளைகளும் விபத்துக்குள்ளாகிறார்கள். பாடல் இசைத்தபடியே செல்வதால் வீதியில் செல்லும் மற்றைய வாகனங்கள் எழுப்பும் ஹோன் சத்தம் பாதசாரிகளுக்கும் ஓடிவரும் பிள்ளைகளுக்கும் கேட்பதில்லை. இதை நாம் தினமும் அனுபவிக்க நேரிடுகிறது. இதை நிறுத்த போக்குவரத்துப் பொலிசார் உதவினால் மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பர் என்பதில் ஐயம் இல்லை.

குறிப்பு: யாழ்.குடாநாட்டில் ஒலிபெருக்கிகளின் ஓலங்களைக் கட்டுப்படுத்துவது ஊரடங்குச் சட்டம் மட்டுமே. இந்த வகையில் ஊரடங்குக்கு நன்[illegible] கிறது.

தாவடி.

மு.மாசிலாமணி.

# வங்கிகளில் இடம்பெற்ற நிகழ்வுகளில்...



அச்சுவேலி மக்கள் வங்கி கிளையினால் நடத்தப்பட்ட சேமிப்பு ஊக்குவிப்பு நிகழ்வில் வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கி முகாமையாளர் இ.யோகராசா சேமிப்பு வைப்புப் புத்தகத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

வங்கிப் பணியாளர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (11)



மக்கள் வங்கி சுன்னாகம் கிளையின் சிசு உதான அலகுத் திறப்பு விழா அண்மையில் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

படத்தில் பாடசாலை அதிபர் நா.சிவனேசன், மக்கள் வங்கி பிரதி முகாமையாளர், சு.இராசமனோகரன், வங்கி உத்தியோகத்தர் செ.உமாசங்கர் ஆகியோருடன் பாடசாலை உப அதிபர், ஆசிரியர்களும் காணப்படுகின்றனர். (203)



புதுவருட தினத்தன்று மானிப்பாயில் இலங்கை வங்கிக் கிளையில் வைப்புச் செய்த நீண்ட கால மூத்த உறுப்பினர் க.நடராசாவுக்கு வங்கி முகாமையாளர் க.இலட்சுமண சர்மா பரிசில் வழங்கிக் கௌரவித்தபோது எடுக்கப்பட்ட படம். (100)



அச்சுவேலி இலங்கை வங்கிக் கிளையின் அபிவிருத்திக் கிராமமாகிய புத்தூர் மேற்கு கலைமதி இலங்கை வங்கிக் கிராமத்தில் நடைபெற்ற ஆங்கில மொழி அபிவிருத்திச் செயற்றிட்ட நிகழ்வில் வங்கியின் முகாமையாளர் த.புவனேந்திரனை கலைமதி சனசமூக நிலையச் செயலாளர் மாலைசூட்டி வரவேற்பதையும்; நிகழ்வில் [illegible]ராகக் கலந்துகொண்டு இலங்கை வங்கியின் வட பிராந்திய செயற்[illegible]மையாளர் ஆர்.ஜெயேந்திரா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடைகால வெப்பத்தில் இருந்து கோழிகளைப் பாதுகாப்பது எப்படி?

யாழ்.குடாநாட்டுக்கு அண்மையாக சூரியன் மே மாதம் வரும்போது தொடங்கும் கோடைகால வெய்யில் படிப்படியாக அதிகரித்து அக்கினி நட்சத்திரம் எனப்படும் காண்டாவன காலத்தில் உக்கிரமடைந்து ஒரு மாத கால கடும் வெப்பத்தாக்கத்தின் பின் ஜூன், ஜூலை மாதங்களில் படிப்படியாகக் குறைந்து செல்கிறது. இக் கோடை வெய்யில் வெழ்பத்தில் நாம் படாத பாடுகள் எல்லாம் பட்டு சிரமப்படுகிறோம். நாம் மட்டுமல்ல எம்மைச் சுற்றியுள்ள விலங்குகள், தாவரங்கள் எல்லாம் இயல்பு நிலையில் இருந்து பாதிக்கப்படுகின்றன. இயற்கையாகவே எமது உடம்பில் வெப்பம் கூடும் போது, வியர்வை மூலம் உடம்பைக் குளிரச் செய்யும் உடல் அமைப்பைக் கொண்டுள்ளோம். அத்துடன் பல்வேறுவிதமான வெப்பத்தைத் தணிக்கும் செயல்பாடுகளையும் மேற்கொள்கிறோம். எமது உடல் வெப்பநிலையை விட கோழியின் உடல் வெப்ப நிலை அதிகமாக இருந்த போதிலும் கோழிக்கு வியர்வை சுரப்பி இல்லாமையாலும் சிறகுகளால் உடல் மூடப்பட்டிருப்பதாலும் உடல் வெப்பத்தைக் குறைக்க சிரமப்படுகின்றன. குடா நாட்டில் தற்காலத்தில் கூடுகளில் அடைத்து கோழி வளர்க்கும் முறை பல்வேறுவழிகளில் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது. திறந்த வெளியில் வளர்க்கும் கோழிகள் ஓரளவுக்கு வெப்பத்தை சகிக்கும் தன்மை கொண்டவை. கூடுகளில் வளர்க்கும் கோழிகள் வெப்பத்தைத் தாங்க முடியாமல் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றன. கோடைகாலத்தில் கூடுகளில் 95 பாகை பரனைட் வெப்பநிலையை தாண்டிவிடுவதாலும் கூடுகளில் வளர்க்கும் கோழிகளின் உடம்பில் கொழுப்பு அதிகரிப்பதாலும் வெப்பத்தை வெளியேற்ற முடியாமல் முட்டையிடும் எண்ணிக்கை குறைதல், இறைச்சிக் கோழிகளின் நிறை குறைதல், இறப்பு வீதம் அதிகரித்தல் போன்ற பொருளாதார இழப்புக்கள் மூலம் கோழி வளர்ப்போர் நட்டமடைகின்றனர். இந்நிலையில் கோழிகளுக்கு தகுந்த பராமரிப்பும் பாதுகாப்பும் அளிக்கப்படுமாயின் நட்டமடைவதில் இருந்து பண்ணையாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள்.

### கூடுகளில் வெப்பம் சேரும் வழிகள்

கோழிகள் விடும் மூச்சுக் காற்றில் நீராவி இருப்பதனால் வெப்பம் வெளியிடப்படுகிறது. இதே நேரம் கோழிகளின் உடம்பில் இருந்து ஓரளவு வெப்பம் வெளியிடப்படுகின்றது. கோழிகள் நெருக்கமாக வளர்க்கப்படும் போது மேலும் வெப்பநிலை அதிகரித்துச் செல்கிறது. எச்சம் தண்ணீராகக் கழிவதால் கூளம் ஈரமாகி உருகும் போது வெப்பம் உண்டாகிறது. சூரியவெப்பத்தால் கூரை, பக்கவாட்டுச் சுவர்கள் வெளிப்புறத் தரைகளில் இருந்து வரும் வெப்பம் மிக வேகமாகக் கூட்டின் வெப்ப நிலையை உயர வைத்து விடும். சூடான காற்று வீசும் போது மேலும் வெப்பநிலை அதிகரித்துக் காணப்படும்.

### வெப்பநிலை அதிகரிக்க கோழிகளில் ஏற்படும் மாற்றங்கள்

கூட்டின் வெப்பநிலை அதிகரித்துச் செல்லும் போது கோழிகளின் பின்வரும் செயற்பாடுகளை அவதானிக்கலாம்.

★வாயைத் திறந்து மூச்சுவிடும்
★கூடியளவு நீரை உட்கொள்ளும்
★சோர்வாக அமர்ந்திருக்கும்
★கோழியின் நடவடிக்கைகள் குறைவடையும்
★குறைந்தளவு உணவை உட்கொள்ளும்
★கூளத்தினுள் உடம்பைப் புதைக்கும்
★ எச்சம் நீர்த் தன்மையாகக் கழியும்

### கோழிகளில் காணப்படும் பொதுவான பாதிப்புக்கள்

இரத்தத்தில் நீரின் அளவும் காரத்தன்மையும் அதிகரிக்கும் போது சோர்வு நிலை அடைகின்றன. உடம்பில் நீரின் அளவு குறைந்து செல்லும் போது இறப்பு நிலை ஏற்படலாம். எச்சம் தண்ணீராகக் கழியும் போது கூளத்துடன் சேர்ந்து கூளம் பழுதடைந்து துர்நாற்றம் வீசுவதுடன் வெப்பமும் அதிகரிக்கிறது. நரம்புத் தளர்ச்சி ஏற்படும் போது முடக்கு வாதம் ஏற்படலாம். அல்லது நடமாட முடியாமல் போகலாம். மூளைக்குச் செல்லும் இரத்தத்தின் வெப்பநிலை அதிகரிக்கும் போது சிறுநீரகம், கல்லீரல், இருதயம் போன்ற உறுப்புக்கள் செயலிழந்து கோழி இறக்கலாம். நோய் எதிர்ப்புத் திறன் குறைந்து எளிதில் எந்த நோயாலும் பாதிக்கப்படும். வெய்யில் அதிகரிக்க சுவாசம் அதிகரிப்பதனால் உடல் நலன் குன்றி சுவாச நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது.

### முட்டைக் கோழியில் ஏற்படும் பாதிப்புகள்

குஞ்சுகளில் வளர்ச்சி விகிதம் குறைவாகவும் வளர்பருவக் கோழிகள் வளர்ச்சி விகிதம் குறைவாகவும் பிற்கால முட்டை உற்பத்தித்திறன் குறைவாகவும் இருக்கும். முட்டையிடும் கோழிகளில் நிறை குறைவாகவும் முட்டை உற்பத்தி குறைவாகவும் காணப்படும். முட்டைக் கோதின் தடிப்புக் குறைவதால் முட்டைகள் உடையலாம். குறிப்பாக சவர்நீர் உள்ள இடங்களில் இப் பிரச்சினை அதிகம் இருக்கும். கோழிகள் ஒன்றை ஒன்று கொத்தி உண்ணும் நிலை காணப்படும்.

### இறைச்சிக் கோழிகளில் ஏற்படும் பாதிப்புக்கள்

குறைந்தளவு உணவை உள்ளெடுப்பதால் வேகமாக வளரும் திறன் குறைந்து 2 மாத முடிவில் மிகக் குறைந்த எடை காணப்படும். ஊனம் ஈரமாகி நாற்றமடிப்பதுடன் கோழியின் உடம்பிலும் ஒட்டியிருப்பதால் சந்தை மானம் குறைவாகக் காணப்படும். ஒரு மாத பருவ கோழிகளில் அதிக இறப்பு வீதம் காணப்படும். இறைச்சியும் விரைவாகப் பழுதடையும் தன்மையைக் கொண்டிருக்கும்.

### வெப்பத்தைக் குறைப்பதற்கான பொது வான வழிகள்

கட்டட அமைப்பு

கோழிகளுக்கான கட்டட மனைகள் அமைக்கும்போது மறைப்புகள் காற்றுத் தடைகளற்ற பகுதியில் கட்டடத் தொகுதியில் நேரடியாக சூரியஒளி விளாவண்ணம் கிழக்கு மேற்காக அமைக்கவேண்டும். இரு கட்டடத் தொகுதிகளுக்கிடையில் இடைவெளி 30 அடி இருத்தல் அவசியமாகும். ஓலை அல்லது ஓட்டினால் மேய்ந்த கூரை முகடு நிலத்தில் இருந்து 12 அடி உயரமாகவும் சீற்றினால் அமைக்கப்பட்ட கூரையின் முகடு 15 அடி உயரமும் இருக்க வேண்டும். பக்கச் சுவர்கள் சரியான உயரத்தில் அமைக்கப்பட வேண்டும். பொதுவாக கட்டடத்தின் அகலம் 30 அடிக்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

மு.கந்தசாமி
(வளவாளர்-விவசாயத் தகவல் மையம்
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்)

(வளரும்)



வன்னி மக்கள் துயர்துடைப்பு செயற்பாட்டுக்குழு வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோர், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் ஆகியோருக்கு சுடுதண்ணீர் போத்தல்கள், பெட்சீற், பிஸ்கற், உடுபுடைவைகள் போன்ற பொருள்களை வழங்கியுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டுள்ள இக்குழு தனது செயற்பாட்டைத் துரித கதியில் மேற்கொண்டு வருகிறது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் பொதுஜனத் தொடர்பு இணைப்பாளர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தலைமையில் பொருள்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# வன்னியில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்த சர்வதேச சமூகம் தவறியுள்ளது

## ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் அறிக்கை

கொழும்பு, மே 19

பாரிய மனிதப் பேரவலத்தை உருவாக்கியுள்ள வன்னி யுத்தத்தை தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் காத்திரமான அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தவறியுள்ளது.

- இவ்வாறு ஏ.எவ்.பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது. இந்த நிறுவனத்தின் யுத்த ஆய்வு அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் யுத்த முன்நகர்வுகளைத் தடுக்கும் வகையில் அர்த்தபூர்வமான அழுத்தங்களை எந்தவொரு வலுவான சர்வதேச அமைப்போ அல்லது நாடோ பிரயோகிக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை என அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொருளாதாரத் தடைகளோ அல்லது வேறு கடுமையான தண்டனைகள் குறித்தோ சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்காத காரணத்தினால், கொடூரமான யுத்தங்களில் ஒன்றாக வன்னி யுத்தகளம் காட்சியளிக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் யுத்தநிறுத்தமொன்றை அமுல்படுத்துமாறு ஐ. நா. அமைப்பு மற்றும் மேற்குலக நாடுகள் தொடர்ச்சியாக விடுத்துவந்த கோரிக்கைகளை அரசு உதாசீனம் செய்துள்ளது. பொதுமக்களின் இழப்புகளைக் கருத்தில் கொண்டு யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென சர்வதேச சமூகம் குரல் கொடுத்த போதிலும் அரசு அதற்கு செவிசாய்க்கத் தவறியுள்ளது.

### சர்வதேசத்தின் அழுத்தம் அரசின் யுத்த முன்நகர்வுக்கு தடையாக அமையவில்லை

எனினும், வெறும் அறிக்கைகள் மற்றும் ஊடகவியலாளர் சந்திப்புகளின் மூலம் மட்டும் சர்வதேச சமூகம் பிரயோகித்துவந்த அழுத்தம் அரசின் யுத்த முன்நகர்வுக்கு எந்த வகையிலும் தடையாக அமையவில்லை.

இதே வேளை -

வெள்ளைமாளிகையோ அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்போ கூறும் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளும் மனோபக்குவம் இலங்கை அரசிடம் காணப்படவில்லை என சர்வதேச மன்னிப்புச் சபையின் சஹிர் ஜன்மொஹமட் தெரிவித்துள்ளார்.

### யுத்த வெற்றிகளின் பின்னணியில் மிகப்பெரும் மனித இழப்புகள்

கடந்த ஜனவரி மாதம் முதல் இலங்கை அரச படையினர் பல்வேறு இராணுவ வெற்றிகளை ஈட்டி வந்துள்ளனர். எனினும், இந்த யுத்த வெற்றிகளின் பின்னணியில் பாரிய மனித இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்பதனை எவரும் மறந்துவிடக் கூடாது.

இந்த யுத்த வெற்றிக்காகக் கொடுக்கப்பட்ட விலை பெறுமானங்களினால் அளவீடு செய்ய முடியாதென் சுட்டிக்காட்டப்படுகிறது. இலங்கையில் இடம்பெற்று வரும் மனிதப் பேரவலத்தைக் கண்டு சில முக்கிய நாடுகள் தொடர்ந்தும் மௌனம் காத்து வருகின்றமை ஆச்சரியமளிக்கின்றது. குறிப்பாக ஜப்பான், சீனா, ரஷ்யா, வியட்நாம் போன்ற நாடுகள் இலங்கைப் பிரச்சினையை உள்நாட்டு விவகாரமெனத் தெரிவித்துள்ளன.

எனவே, அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாக்க சர்வதேச சமூகம் காத்திரமான அழுத்தங்களைப் பிரயோகிக்கின்ற வரையில் இந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்த முடியாது என்பது திண்ணம் என்று சஹிர் ஜன்மொஹமட் தெரிவித்தார்.

# விலங்கு விசர் நோய்த் தடுப்புத் தொடர்பாக ச.சமூக நிலையங்களுடன் கலந்துரையாடல்

நல்லூர்,மே19

விலங்கு விசர்நோய்த் தடுப்பு தொடர்பாகச் சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பிரதான வீதி, மடத்தடியில் அமைந்துள்ள யாழ்.மாநகர சபையின் மகளிர் மகப்பேற்று நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ம.மரியதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் விலங்கு விசர் நோய்த் தடுப்புத் தொடர்பாகப் பொதுமக்களுக்குச் சனசமூக நிலையங்கள் ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இதில் சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சனசமூக நிலையங்களும் விலங்கு விசர்நோயத் தடுப்பின் முக்கியத்துவத்தை, அது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-111)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## திலைக்ஷனா




திரு.திருமதி ஜெயக்குமார் - சுபாஜினி
தம்பதியரின் செல்வப் புதல்வி
திலைக்ஷனா
தனது முதலாவது பிறந்தநாளை இன்று (19.05.2009) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, அத்தைமார், லண்டனில் வசிக்கும் பெரிய சித்தப்பா, சின்ன சித்தப்பா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று நீடூழி வாழ கயண்டா புவனேஸ்வரி அம்பாளை வேண்டி வாழ்த்துகின்றனர்.

செ.ஜெயக்குமார்,
அம்பாள் மரவிற்பனை நிலையம்.
பழைய தபாற்கந்தோர் வீதி,
சங்கானை.

## தவறிவிட்டது

சிறுவிளான், இளவாலை எனும் முகவரியுடைய சுப்பிரமணியம் யோகராணி என்பவரது தே.அ.அட்டை (545253753V), விசேட அடையாள அட்டை பேர்ஸுடன் பண்டத்தரிப்பு, சில்லாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(85384) T.P.: 077 4138518

## Personal Class

தரம் - 1 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Note: A/L 2010, 2011 மாணவர்களுக்கு ஆங்கிலம் கட்டாயம் ஆதால் அவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P.:077 1372280

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் சகல வசதியும் கொண்ட 3 அறைகளுக்குக் குறையாத வீடு வாடகைக்கு உடன் தேவை.
தொடர்பு: 222 4449, 077 6035633


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவின் விளிம்பிலுள்ள ஈழத் தமிழரைக் காக்க இப்போதாவது உடன் நடவடிக்கை எடுக்குக!

## ஐ.நா., சர்வதேசத்திடம் தமிழர் பாதுகாப்பு இயக்கம் கோரிக்கை



சென்னை, மே 19

இலங்கையிலிருந்து வெளியாகும் பொய்ச் செய்திகளை யாரும் நம்பவேண்டாம் என்றும் - சாவின் விளிம்பில் நிற்கும் ஈழத் தமிழரைக் காப்பாற்ற இந்தக் கட்டத்திலாவது ஐ.நாவும், உலக சமுதாயமும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்த இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர்களான பழ.நெடுமாறன், பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இந்தியக் கம்யூனிஸ்ட் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன் ஆகியோர் நேற்றுமுன்தினம் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -



ஈழத்தில் போர்ப் பகுதியில் இருந்து அனைத்து மக்களையும் வெளியேற்றி விட்டனர் எனவும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் உடலை கைப்பற்றி இருக்கின்றனர் எனவும் இலங்கை அரசும், இந்தியாவில் உள்ள ஊடகங்களும் திட்டமிட்ட பொய்ச் செய்தியை பரப்பி வருகிறார்கள்.



உண்மை என்னவெனில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் போர்ப் பகுதியில் இன்னமும் உள்ளார்கள். அவர்களை ஒட்டுமொத்தமாக அழிக்கும் திட்டத்து டன் இலங்கை இராணுவம் கொடூரத் தாக்குதலை மேற்கொண்டிருக்கிறது. இதில், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் படுகாயமுற்றுள்ளனர். குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட காயப்பட்டவர்கள் வைத்திய வசதியின்றி தெருக்களில் கிடக்கின்றனர்.

மக்களைக் காப்பாற்ற இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் நேரடி வழிகாட்டுதலின் கீழ் அனைத்து முன்னணித் தளபதிகளும் விடுதலைப் புலிகளும் களத்தில் நின்று தீரத்துடன் போராடி வருகின்றனர்.

இந்த போர்ச் செய்தியையும், மக்களுக்கு ஏற்பட்டுள்ள பேரவல நிலையையும் மறைக்கவே, இலங்கை அரசு பொய்ச் செய்திகளை பரப்பி வருகிறது. சாவின் விளிம்பில் நிற்கும் மக்களைக் காப்பாற்ற இந்த கட்டத்திலாவது ஐ.நாவும், உலக சமுதாயமும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டிக் கொள்கிறோம் - என்றுள்ளது.

## ராமதாஸுக்கு எதிராக சுவரொட்டிகள்

விழுப்புரம், மே 19

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ம.க. 7 தொகுதிகளிலும் தோற்கடிக்கப்பட்டமைக்கு மக்களுக்கு நன்றி தெரிவித்தும், பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் அரசியல் வியாபாரி என்று கூறியும் விழுப்புரம் நகர பகுதியில் தி.மு.கவினர் சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர்.

## புலிகளின் ஊடுருவலைத் தடுக்க தூத்துக்குடியில் பாதுகாப்பு

தூத்துக்குடி, மே 19

தூத்துக்குடிக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த போர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

இதனால் விடுதலைப் புலிகள் அங்கிருந்து படகுகள் மூலம் தமிழகக் கடற்கரை பகுதியில் ஊடுருவக்கூடும் என்பதால் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடிக் கடலோரப் பாதுகாப்பு குழும பொலிஸார், கடலோரக் காவல் படையினர், கியூ பிரிவுப் பொலிஸார் கடற்கரையோரம் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதைத்தொடர்ந்து கடலோரப் பாதுகாப்பு குழும ஐ.ஜி.ராஜேஷ்தாஸ் நேற்றுமுன்தினம் தூத்துக்குடிக்கு வந்தார். அவர் மாவட்ட பொலிஸ் சூப்பிரண்ட் தீபக் எம்.டாமோருடன் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார். தொடர்ந்து கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பைப் பலப்படுத்த உத்தரவிட்டார்.

அதன்படி கடலோரப் பாதுகாப்புக் குழும பொலிஸார் கடற்கரையோரத்தில் ரோந்து பணியை முடுக்கி விட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

# ஆயுதங்களை ஒப்படைக்கப் புலிகள் தயார் ஈழத்தமிழரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துக!

## ஒபாமா, ஐ.நா. செயலருக்கு வைகோ அவசர கடிதம்



சென்னை, மே 19

ஆயுதங்களை ஒப்படைக்க விடுதலைப் புலிகள் தயார் என்றும், இலங்கையில் தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன், பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிரவுன், பிரிட்டன் வெளியுறவுச் செயலாளர் டேவிட் மில்லிபாண்ட், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் ஆகியோருக்கு மின்னஞ்சலில் அனுப்பியுள்ள அவசரக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கையில் முல்லைத்தீவில் ஒரு மனித பேரழிவு நடந்து கொண்டிருக்கிறது. இலங்கை அரசு மேற்கொண்ட இனப் படுகொலைகளால், தமிழர்கள் ஆயுதப் போராட்டத்திற்கு தள்ளப்பட்டார்கள். அந் தப் போராட்டத்தை விடுதலைப் புலிகள் முன்னெடுத்து நடத்தினார்கள்.

தற்போது விடுதலைப் புலிகள் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து அரசு அதிகாரிகளிடம் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக உள்ளனர். அதே வேளையில் போராளிகள் மற்றும் பொதுமக்களின் உயிருக்குப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அவர்கள் ஒரு போதும் இலங்கை இராணுவத்தினரிடம் சரண் அடைய மாட்டார்கள். அதைவிட உயிரை மாய்த்துக்கொள்வார்கள். அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால், ஆயிரக்கணக்கான போராளிகள் 'சயனைட் குப்பிகளை' கடித் துத் தற்கொலை செய்து கொள்வார்கள். நினைத்துப்பார்க்க முடியாத அத்தகைய கொடூரம் நிகழுமானால் உலகம் முழுமையும் வாழ்கின்ற பத்துக்கோடி தமிழர்களின் இதயங்கள் துயரத்தால் நொறுங்கிப் போகும்.எனவே, தாங்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு ஈழத்தமிழர்களை காப்பாற்றுமாறு கண்ணீர் மல்க வேண்டு கிறேன் - என்றுள்ளது.

# இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு தொடர்ந்து முயற்சிக்கும்

## தங்கபாலு தெரிவிப்பு



சென்னை, மே 19

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சுமுக தீர்வுகாண மத்திய அரசு தொடர்ந்து முயற்சிக்கும். நடந்து முடிந்த தேர்தலுக்கும் இலங்கைப் பிரச்சினைக்கும் சம்பந்தம் இல்லை - என்று தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு கூறினார்.

மேலும், காங்கிரஸுக்குத் துரோகம் செய்தமையால் பா.ம.க. அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வி அடைந்தது என்றும் அவர் கூறினார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு -

காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் தியாகத்திற்கும், பிரதமர் மன்மோகன்சிங்கின் மகத்தான மக்கள் நலப்பணிக்கும் இந்திய மக்கள் நல்ல தீர்ப்பை வழங்கி யிருக்கிறார்கள்.

தமிழகத்தில் சில அரசியல் சந்தர்ப்பவாதிகள் மக்கள் மத்தியில் தவறான பிரசாத்தையும், அவதூறுகளையும் திட்டமிட்டுப் பரப்பியதன் காரணமாக, சில தொகுதிகளில் வெற்றிவாய்ப்பை இழந்தாலும் கூட பெரும்பாலான தொகுதிகளில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு மக்கள் ஆதரவளித்து வெற்றி பெற செய்திருக்கிறார்கள்.

இந்த வெற்றிக்கு வாய்ப்பாக தேர்தல் பிரசாரத்திற்கு தமிழ்நாட்டுக்கு வந்த சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், பொதுச்செயலாளர் ராகுல்காந்தி ஆகியோருக்கும் முதல்வர் கருணாநிதி மற்றும் கூட்டணி கட்சியின் தலைவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் பெற்ற வெற்றி பண நாயகம் என்று கூறும் ஜெயலலிதா, அவர் பெற்ற வெற்றியை என்ன என்று சொல்கிறார். வெற்றி தோல்விகளை நல்ல தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் நம்பிக்கைக்கு ஏற்ப தொடர்ந்து காங்கிரஸ் கட்சி பணியாற்றும்.

சில தொகுதிகளில் அந்தந்த தொகுதிகளில் உள்ள பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக தோல்வி அடைந்தாலும், அந்தத் தோல்விகள் பற்றி ஆராய்ந்து சரி செய்ய முயற்சிப்போம். சிவகங்கை, விருதுநகர் தொகுதிகளிலும் ஜனநாயகமுறைப்படி தான் வெற்றி பெற்றுள்ளோம். அந்த அதிகாரிகள் காங்கிரஸ்காரர்கள் அல்லர்.

காங்கிரஸுக்குத் துரோகம் செய்த காரணத்தால்தான் பா.ம.க. அனைத்துத் தொகுதிகளிலும் தோல்வி அடைந்துள்ளது. இலங்கைப் பிரச்சினைக்கும் இந்தத் தேர்தலுக்கும் சம்பந்தம் இல்லை. இந்தப் பிரச்சினையில் அ.தி.மு.க. சில சக்திகளுடன் சேர்ந்து எதிராகச் செயற்பட முயற்சித்தது. அது முடியவில்லை.

இலங்கைப் பிரச்சினையில் சுமுக முடிவு காண மத்திய அரசு தொடர்ந்து முயற் சிக்கும்.

ராகுல்காந்தி பிரதமர் ஆக வேண்டும் என்று ஒவ்வொரு தொண்டனும் விரும்புகிறார்கள். தமிழ்நாடு காங்கிரஸும் அதைத் தான் விரும்புகிறது. ஆனால் சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன்சிங் பெயரை முன்னிறுத்தி அதனை ராகுலும் வழிமொழிந்திருக்கிறார். நிச்சயம் எதிர்காலத்தில் ராகுல் பிரதமர் ஆவார் - என்றார்.

# பிரபாகரன் குறித்து வெளியான செய்தியால் தமிழகம் முழுவதும் பொலிஸார் உஷார்நிலை

## கலைஞர், ஜெயலலிதா, காங். தலைவர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு

சென்னை, மே 19

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து நேற்றுமுன்தினம் வெளியான செய்தியால் சென்னை உட்பட தமிழகம் முழுவதும் குறிப்பாக கடலோர மாவட்டங்களில் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டனர்.

மேலும், முதல்வர் கருணாநிதி, ஜெயலலிதா மற்றும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 14 ஆயிரம் தமிழ் மக்களோடு குண்டு வைத்து உயிரை மாய்த்துக் கொண்டார் என நேற்றுமுன்தினம் பரபரப்பான தகவல்கள் வெளியாகின. இந்தத் தகவலின் அடிப்படையில் தமிழகத்தில் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டனர்.

கடந்த 5 நாள்களாக தேர்தல் பணியில் இரவு - பகலாக ஈடுபட்ட பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் ஓய்வு கொடுக்கப்பட்டது. பிரபாகரன் குறித்து பரபரப்பாக தகவல் வெளியானதால் ஓய்வில் இருந்த பொலிஸார் அனைவரும் உடனடியாகப் பணிக்கு வரும்படி தமிழகம் முழுவதும் உத்தரவு பறந்தது. அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாமல் தடுக்க விழிப்போடு இருக்கும்படி மாவட்ட பொலிஸ் சுப்பிரண்டுகளுக்கு டி.ஜி.பி. ஜெயின், கூடுதல் டி.ஜி.பி. ராஜேந்திரன் ஆகியோர் ஆணை பிறப்பித்தனர்.

தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பு வலயங்களைப் பலப்படுத்த உத்தரவிடப்பட்டது. கடலோரப் பாதுகாப்புக் குழுவினரும், கடலோர காவல் படையினரும் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

பாதுகாப்பு பணி தொடர்பாக தமிழக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியவை வருமாறு -

முன் எச்சரிக்கை நடவடிக்கையாக தமிழகம் முழுவதும் பொலிஸாரை உஷார் படுத்தியுள்ளோம். சென்னையில் உள்ள இலங்கை தூதரக அலுவலகத்திற்கு 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இதேபோல, சென்னை எழும்பூரில் உள்ள புத்தர் ஆலயம், வேப்பேரியில் உள்ள இலங்கை வங்கி, கோடம்பாக்கம் நெடுஞ் சாலையில் உள்ள இலங்கை விமான நிறுவனம் போன்ற இடங்களும் பாதுகாப்பு வலயத்தில் [illegible] இலங் கைத் தூத[illegible] பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள காங்கிரஸ் தலைமை அலுவலகமான சத்தியமூர்த்தி பவனிலும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஜி.கே.வாசன், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் வீடுகளுக்கும், வேலூரில் உள்ள ஞானசேகரன் எம்.எல்.ஏ. வீட்டிற்கும் மற்றும் காங்கிரஸ் முன்னணி பிரமுகர்கள் வீடுகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் வீட்டிற்கும் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. முதல்வர் கருணாநிதிக்கும் மிரட்டல் இருப்பதால் அவரது இல்லங்களுக்கும் ஏற்கனவே உள்ள பாதுகாப்போடு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

113 இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களும், விடுதலைப்புலிகள் என்ற சந்தேகத்தில் காவலில் அடைக்கப்பட்டுள்ள சிறப்பு முகாம்களும் தீவிர பாதுகாப்பு வலயத்தில் வைக்கப்பட்டுள்ளன - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவம் தாக்குதல்; சிவிலியன்கள் பலி

நைகர், மே 19

நைஜீரியாவிலுள்ள எண்ணெய் வளம் மிகுந்த நைகர் பிராந்தியத்தில் தீவிரவாதிகளுக்கு எதிராக வெள்ளிக்கிழமை இராணுவம் மேற்கொண்ட அதிரடித் தேடுதல் வேட்டையின்போது, ஆயிரத்துக்கு மேற்பட்ட சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என இஜால் தேசிய காங்கிரஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

பல்லின மக்கள் வாழும் பகுதிகளில் இராணுவம் வான்வழித் தாக்குதலையும், கடல் மார்க்கத் தாக்குதலையும், தரைவழித் தாக்குதலையும் நடத்தியுள்ளது. பல இனங்களைச் சேர்ந்த அப்பாவிகள் இத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் காங்கிரஸ் குறிப்பிட்டுள்ளது.

எண்ணெய் வளப்பிராந்தியமான நைகரில் இயங்கும் எண்ணெய் நிறுவனங்களில் அநேகமானவை நைஜீரியர்களுக்குச் சொந்தமானவை அல்ல. அவை வெளிநாடுகளைச் சேர்ந்த செல்வந்தர்களுடையவை. அவர்கள் நைஜீரியாவின் செல்வத்தைச் சுரண்டி வருகிறார்கள் என இப் பிராந்திய தீவிரவாதக் குழுக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இப்பிராந்திய எண்ணெய் வருவாயில் பெரும் பங்கு தங்களுக்கும் அளிக்கப்படவேண்டுமென்றும் பிராந்திய தீவிரவாதிகள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். அத்துடன் இக்கோரிக்கையை வலியுறுத்தி போராட்டங்களும் நடத்திவருகிறார்கள். அந்நியர் அனைவரும் இப்பிராந்தியத்திலிருந்து வெளியேறிவிடவேண்டும் என்பதும் இவர்களின் கோரிக்கைகளில் ஒன்று.

இவர்கள் வெளிநாட்டு ஊழியர்களைக் கடத்தி கப்பம் வசூலிக்கும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுவருகிறார்கள். இந்த தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கு, நைஜீரிய அரசு அதிரடி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டது. தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு, பணயக்கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 பேர் இராணுவத்தால் விடுவிக்கப்பட்டார்கள். இவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டினராவர்.

''இராணுவம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அப்பாவிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். வான்வழித் தாக்குதல்களில் நூற்றுக் கணக்கான வீடுகள் நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் ஆகியோரும் பலியாகியுள்ளனர்'' என இஜால் தேசிய காங்கிரஸ் பேச்சாளர் விக்டர் பருபோ பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

''இப்படுகொலை விவகாரத்தில் ஐ.நா. தலையிடவேண்டும். இந்த அதிரடி வேட்டையின்போது, இராணுவம் கடற்படைத் துப்பாக்கிப் படகுகள், பீரங்கி ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தியுள்ளது. தாக்குதல்களில் பலர் காயமடைந்துள்ளனர். இன்னும் பலர் அவயவங்களை இழந்துள்ளனர்'' என்றும் இப்பேச்சாளர் விளக்கியுள்ளார்.

# ஜனாதிபதியின் நடவடிக்கையை எதிர்த்து நேபாளத்தில் மாவோயிஸ்ட்டுகள் பேரணி

காத்மாண்டு, மே 19

நேபாளத்தின் உள்விவகாரங்களில் வெளிநாடுகள் தலையிடுகின்றன எனக் கூறி அதற்குக் கண்டனம் தெரிவித்தும், பதவி நீக்கம் செய்யப்பட்ட இராணுவத் தளபதியை ஜனாதிபதி மீண்டும் பதவியில் அமர்த்தியமைக்கு ஆட்சேபனை தெரிவித்தும் மாவோயிஸ்டுகள் பேரணி நடத்தினார்கள்.

நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டுவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்பேரணியில் ஆயிரக்கணக்கான மாவோயிஸ்டுகள் கலந்துகொண்டார்கள். அவர்கள் ஜனாதிபதிக்கு எதிரான கோஷங்களை எழுப்பினார்கள். நேபாள உள்விவகாரத்தில் அந்நிய நாடுகளின் தலையீட்டை அனுமதியோம் என்றும் கோஷம் எழுப்பினார்கள்.

எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் எந்தவொரு நாட்டையும் சுட்டிக்காட்டவில்லை. இருந்தும் இந்தியாவின் தூண்டுதலின் பேரிலேயே, இராணுவத் தளபதியை ஜனாதிபதி மீண்டும் பதவியில் அமர்த்தியுள்ளார் என மாவோயிஸ்ட் கட்சியின் தலைவரும், அப்போதைய பிரதமருமான பிரசாந்தா ஏற்கனவே குற்றஞ்சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆர்ப்பாட்ட ஆட்சேபப் பேரணி தலைநகரில் பல வீதிகளுக்கூடாக நகர்ந்தது. அதனால் போக்குவரத்துகள் தடைப்பட்டன. பெருந்தொகையான பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எவ்வித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை.

# தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த பாக். இராணுவ அதிகாரிகள் பதவி நீக்கம்

லண்டன், மே 19

''பாகிஸ்தானில் தீவிரவாதிகள் மீது அனுதாபம் கொண்டிருந்த இராணுவ அதிகாரிகளும், தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்புகொண்டிருந்த இராணுவ அதிகாரிகளும் இனங்காணப்பட்டு, பதவிகளிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள்'' என பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி-சர்தாரி, பிரிட்டிஷ் பத்திரிகையொன்றுக்கு தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

''பாகிஸ்தான் வடமேற்கு எல்லைப்புற மாநிலம் மிகவும் விசாலமானது. இது ஆப்கான் எல்லையோடு ஒட்டியுள்ளது. இந்த மாநிலத்தில் பல பகுதிகளைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகளை எமது இராணுவம் மேற்கொண்டு வருகிறது. இந்த இராணுவ நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படும்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''தலிபான் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே நடைபெற்றுவரும் சண்டையால், ஸ்வாட் உட்பட பல பகுதிகளிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் வெளியேறியுள்ளார்கள். இவர்கள் பாதுகாப்பான பல்வேறு பகுதிகளில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். தலிபான் தீவிரவாதிகளை தோற்கடிக்க வேண்டுமென்பதில் இராணுவம் உறுதியாக உள்ளது'' என்றும் சர்தாரி தம் பேட்டியில் விவரித்துள்ளார்.

''ஸ்வாட் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவத் தாக்குதல் ஓர் ஆரம்பந்தான். அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனும் அவரது சகாக்களும் பதுங்கி யுள்ள பகுதிகள் என சந்தேகிக்கப்படும் பகுதிகளிலும் அதிரடி இராணுவ நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்நடவடிக்கைகள் வசீரிஸ்தானுக்கும், அதை யொட்டிய இதர பகுதிகளுக்கும் துரிதமாக விஸ்தரிக்கப்படும்'' என்றும் அவர் ஆணித்தரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

''வட மேற்கு எல்லைப் பிராந்தியங்களில் மட்டும் 1 இலட்சத்து 50 ஆயிரம் இராணுவச் சிப்பாய்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். இச்சிப்பாய்களை அப்பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு மட்டுமே 5 ஆயிரம் கோடி ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது. இப்போரை போர்க்களத்தில் மாத்திரம் நடத்த முடியாது. பொருளாதார மட்டத்திலும் இதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இளைஞர்களுக்கு பொருளாதார ரீதியாக வும் நாம் உதவவேண்டும். இதற்கான பாரிய பொறுப்பு எமக்குண்டு'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலிபான்களின் கோட்டைக்குள் பாகிஸ்தான் இராணுவம் நுழைவு!

இஸ்லாமாபாத், மே 19

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் பலம் பொருந்திய கோட்டை என வர்ணிக்கப்படும் மாட்டா பிராந்தியத்துக்குள், சனிக்கிழமை பாகிஸ்தான் இராணுவம் நுழைந்தது. இவ்வாறு திடீர் பிர வேசத்தை மேற்கொண்ட இராணுவம், எவ்.எம். வானொலி மூலமும், ஒலிபெருக்கிகள் மூலமும் பொதுமக்களை தத்தம் பகுதி யிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொண்டது.

இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் மாட்டா பிராந்தியத்திலிருந்து வெளியேறத் தொடங்கினார்கள். அவர்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளார்கள், அவர்களுக்கென அநேக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மூடை, முடிச்சுகளுடன் மக்கள் குடும்பம், குடும்பமாக வெளியேறத் தொடங்கியுள்ளார்கள்.

உள்துறை அமைச்சர் மாலிக், இராணுவப் பிரவேசத்துக்குப் பின்னர் மாட்டா பகுதிக்கு விஜயம் செய்தார். அமைச்சர் தம்மைச் சந்தித்த உள்ளூர் அதிகாரிகள் மூலமாக கள நிலை விவரங்களை நேரில் கேட்டறிந்தார். தலிபான்கள் கட்டவிழ்த்து வந்த குரூர கெடுபிடிகளை அவர்கள் அமைச்சரிடம் விளக்கினார்கள்.



எகிப்தில் இதுவரை எச் 1 என்1 வைரஸ் காய்ச்சல் பரவியதற்கான அறிகுறி இல்லை. எனினும் முன்னெச்சரிக்கையாக அந்நாட்டிலுள்ள சுமார் 3 லட்சம் பன்றிகளைக் கொல்ல அரசு உத்தரவிட்டுள்ளது. தலைநகரான கெய்ரோவிற்கு அருக பன்றிகளை அவற்றின் உரிமையாளர்களே கொல்கின்றனர்.

# சோமாலியாவின் அதிமுக்கிய நகரம் இஸ்லாமிய தீவிரவாதிகளால் முற்றுகை

மொகடிஷ்ஷு, மே 19

சோமாலியாவின் தலைநகரான மொகடிஷ்ஷின் வடக்கேயுள்ள அதிமுக்கிய கேந்திர நகரமான ஜொவ்ஹார், ஞாயிற்றுக் கிழமை காலை, இஸ்லாமிய கடும் போக்குத் தீவிரவாத அமைப்பான அல்-ஷபாப்பினால் கைப்பற்றப்பட்டுவிட்டது என நேரில் கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

''எனினும் அரச படைகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே மூர்க்கமான சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர்'' என குடியிருப்பாளர் ஒருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார். எனினும் இந்த விவரங்களை இவர் வெளியிடவில்லை.

சோமாலிய அரசு சமீப வாரங்களில் பல பகுதிகளை தீவிரவாதிகளிடம் இழந்துள் ளது. ஆபிரிக்க ஒன்றியப் படைகளின் உதவியோடு தலைநகரான மொகடிஷ்ஷு வில் ஒரு சிறு பகுதியை மாத்திரம் அரசு தக்கவைத்துக்கொண்டுள்ளது. இஸ்லாமிய தீவிரவாதிகளை பேச்சுகளில் கலந்து கொள்ளவருமாறு, மே 15 ஆம் திகதி, சோமாலிய ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். எனினும், அல்-ஷபாப் அமைப்பு இந்த அழைப்பை நிராகரித்து விட்டது.

அல்-ஷபாப் தீவிரவாதிகள் ஞாயிற்றுக் கிழமை காலை ஜாவ்ஹர் நகரில் இருமுனைத் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். இதையடுத்து நகரத்துக்குள் பிரவேசித்த அவர்கள் சிறைக்கூடத்தைக் கைப்பற்றி, அனைத்துக் கைதிகளையும் விடுதலை செய்தார்கள் என நகரவாசியான அலி-மோலிம் ஹஸன் ஏ.எவ்.பி. பெய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

சோமாலியாவின் புதிய ஜனாதிபதி ஷேக் ஷெரீப் ஷேக் அஹ்மதின் சொந்த ஊர். ஜொவ்ஹார் நகராகும். தலைநகரிலிருந்து மத்திய சோமாலியாவுக்கு இந்த நகரத்துக்கூடாகவே செல்ல வேண்டும்.

# அமெரிக்க ஆசிரியர் ஒருவர் பன்றிக் காய்ச்சலுக்குப் பலி

அமெரிக்காவில் குயின்ஸ் பள்ளியில் பணிபுரிந்த ஆசிரியர் மிச்செல்வியன்னர் பன்றிக்காய்ச்சலுக்குப் பலியானார். அவர் இப்பள்ளியின் துணை முதல்வராகவும் பணியாற்றிவந்தார். பன்றிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சை பலனளிக்காமல் சனிக்கிழமை மரணமானார்.

இப்பள்ளியில் படிக்கும் 700 மாணவர்களும், இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களில் 300 பேரும் பன்றிக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பன்றிக்காய்ச்சல் நோய் உருவான மெக்ஸிக்கோவிலிருந்து தடுப்பு மருந்துகள் வரவழைக்கப்பட்டு, தடுப்பு ஊசிகள் மூலம் இவர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளன.

# குவைத் பொதுத் தேர்தலில் நான்கு பெண்கள் வெற்றி

குவைத் சிட்டி, மே 19

குவைத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், நான்கு பெண்கள் வெற்றி பெற்றார்கள். அரபு நாடொன்றின் வரலாற்றில் பெண்கள் நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு இஸ்லாமியவாதிகள் கடும் எதிர்ப் பு தெரிவித்து வந்துள்ளனர்.

இந்த எதிர்ப்புக்கும் மத்தியில் குவைத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், மஸ்சவுமா அல்-முபாரக், சல்வா அல்-ஜஸ்ஸர், அஸ்சில் அவாதி, ரோலா தஷ்டி ஆகியோர் வெற்றி பெற்றனர், இவர்களில் மஸ்சவுமா அல்- முபாரக் 2005 ஆம் ஆண்டு முதல் பெண் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தவர்.

குவைத்தில் 50 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு தேர்தல் நடைபெற்றது. இதில் 210 வேட்பாளர்கள் போட்டியிட்டார்கள். இவர்களில் 16 பேர் பெண்கள். குவைத்தில் பலத்த ஆட்சேபனைகளுக்கும் மத்தியில், 2005 ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமையும், தேர்தலில் போட்டியிடுவதற்கான உரிமையும் வழங்கப்பட்டன.

2006 ஆம் ஆண்டிலும், 2008 ஆம் ஆண்டிலும் நடைபெற்ற தேர்தல்களில் பெண்கள் போட்டியிட்டார்கள். எந்தவொரு பெண்ணும் வெற்றி ஈட்டவில்லை. இதற்கு மாறாக, தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலில் 16 பெண்களில் 4 பெண்கள் வெற்றி ஈட்டியுள்ளார்கள்.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மன்னர் ஷேக் சபா அல்- அஹமது அல்-சபா இரண்டு மாதங்களுக்கு முன்னர் கலைத்து விட்டார். இதைத் தொடர்ந்து தற்போது இத்தேர்தல் நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்க கோருகின்றார் எரிக் சொல்ஹெய்ம்



கொழும்பு, மே 19

இலங்கையில் சமாதானம் வெல்லப்படுவது நெடுந்தொலைவிலுள்ளது எனத் தெரிவித்துள்ள நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஏ.எவ்.பி.செய்திச் சேவைக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மகத்தான இராணுவ வெற்றியை பெற்றுள்ளதாக இலங்கை அரசு தெரிவிக்கின்ற போதிலும், சமாதானத்தை வெல்வது இன்னமும் நெடுந்தொலைவிலுள்ளது.

தமிழ் மக்கள் குறித்து இலங்கை அதிகாரிகள் தாராளத் தன்மையை வெளிப்படுத்த வேண்டும். தமிழர்களுக்கு சுயாட்சியை வழங்கவேண்டும். அனைவரையும் உள்ளடக்கிய தேசமொன்றை உருவாக்க வேண்டும்.

யுத்தத்தில் வெற்றியடைந்தால்கூட மோதலுக்கு முடிவு காண முடியாது என்று சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

**புலிகள் ஆயுதங்களைச் சர்வதேச சமூகத்திடம் கையளிக்கத் தயாராக உள்ளனர்**

இதேவேளை, விடுதலைப் புலிகள் தம்மிடம் உள்ள ஆயுதங்களைக் களைவதற்கு இருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ள எரிக் சொல்ஹெய்ம், சுயாதீன மதிப்பீட்டுக் குழுவை போர் நடைபெறும் பகுதிக்கு அனுப்புவதே தமக்கு முன்னுள்ள தற்போதைய பணியாகும் என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப் [illegible]களுடன் நேற்று ஞாயிற்றுக்கிழமை நான் பல தடவைகள் தொடர்பில் இருந்தேன். சர்வதேச சமூகத்திடம் அவர்கள் தமது ஆயுதங்களைக் கையளிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர்.

போர் இடம்பெறும் பகுதியில் உள்ள காயமடைந்தவர்களை அகற்றுவதற்காக அங்கு சுயாதீன மதிப்பீட்டுக் குழுவை அனுப்புவதே எமக்கு முன்னுள்ள பிரதான பணியாகவுள்ளது. அங்கே பலர் காயமடைந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் நிலை தொடர்பாக என்னிடம் புதிய தகவல்கள் ஏதும் இல்லை. புலிகளின் ஏனைய தலைவர்கள் போரிட்டுக்கொண்டிருக்கின்றனர் - என்று அவர் கூறினார். (அ-சி)

# வடக்கை முற்றாக மீட்டமைக்காக ஜனாதிபதிக்கு ஐ.தே. கட்சி பாராட்டு

## யுத்த வெற்றியை பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்கிறது

கொழும்பு, மே 19

வடக்கை கைப்பற்றியமைக்காக ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அக்கட்சியின் எம்.பி. கபீர் காசீமே இவற்றைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இன்றைய தினம் இந்த நாட்டு மக்களாகிய நாம் அதிக மகிழ்ச்சியில் இருக்கின்றோம். புலிகளின்பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டதே இந்த மகிழ்ச்சிக்குக் காரணம்.

இந்தப் பயங்கரவாதம் 30 வருடங்களாக எமது நாட்டுக்குப் பெரும் தலையிடியாக இருந்து வந்தது. இன்று அது முற்றாக முடிவுக்கு வந்துள்ளது. இதனையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த வெற்றியை இந்த நாட்டு மூவின மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டும். இன, மத பேதங்களைக் கடந்து நம் அனைவருக்கும் இந்த வெற்றி சொந்தமானது.

**யுத்த வெற்றியைப் பயன்படுத்தி பொருளாதாரத்தைக் கட்டயெழுப்புவோம்**

இந்த யுத்த வெற்றியோடு எமது பிரச்சினை முடிந்துவிட்டது என்று நாம் இருக்கக்கூடாது. இந்த வெற்றியைப் பயன்படுத்தி எமது நாட்டின் பொருளாதாரத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

இன்றிலிருந்து எமது நாட்டின் வாழ்க்கைச் செலவீனப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். இதுதான் தற்போது எதிர்பாக்கப்படும் முக்கிய விடயம்.

இந்த யுத்த வெற்றியைப் பெற்ற கையோடு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப நாம் அரசுக்கு முழுமையான பங்களிப்பை வழங்கத் தயாராக வுள்ளோம்.

இந்த நாட்டின் ஜனாதிபதியாகவும் முப்படைத் தளபதியாகவும் இருந்து படையினருக்கு நல்லதொரு வழிகாட்டியாகச் செயற்பட்டு வடக்கைப் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து மீட்டெடுத்தமைக்காக நாம் இச்சந்தர்ப்பத்தில் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் ஜனாதிபதிக்குத் தெரிவிக்கின்றோம்.-என்றார். (அ-சி)

# பேச்சு மூலமே அரசியல் தீர்வு: தி.மு.க. செயற்குழு தீர்மானம்

சென்னை, மே 19

இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காண முடியும் என்று தி.மு.க. செயற்குழு மத்திய அரசிடம் வற்புறுத்தி உள்ளது. முதல்வர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. செயற்குழு நேற்று சென்னையில் கூடியது. மத்திய அமைச்சரவையில் பங்கேற்பது குறித்தும், யார் யார் அமைச்சர் என முடிவெடுப்பது குறித்தும் முடிவு எடுக்கும் அதிகாரம் முதல்வர் கருணாநிதிக்கு வழங்கப்பட்டது.

தமிழர்களின் சகவாழ்வுக்கு நடவடிக்கை தேவை என்றும் இலங்கைப் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காண முடியும் என்றும் தி.மு.க. செயற்குழு மத்திய அரசை வற்புறுத்தியுள்ளது.

கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் கருணாநிதி,

1956 ஆம் ஆண்டு அண்ணாவின் காலத்தில் இருந்து இலங்கை பிரச்சினையில் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக தி.மு.க. குரல் கொடுத்து வருகிறது. இலங்கைத் தமிழர்களின் உரிமைக்காக பல்வேறு தியாகங்களைச் செய்து போராடி வருகிறது. சட்டசபையிலும் முதலமைச்சர் தீர்மானம் நிறைவேற்றி உள்ளார். தமிழக அரசின் சார்பில் நன்கொடையாக வசூலிக்கப்பட்ட பணத்திலிருந்து அப்பாவித் தமிழர்களுக்கு பல்வேறு உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், அமைதியான வாழ்வுக்கு வழிவகுக்கவும், தாமதமின்றி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று இந்த செயற்குழு மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது - என்று தெரிவித்தார். (சி)

# யுத்த வெற்றிகளை மூவின மக்களும் ஒன்றிணைந்து கொண்டாடவேண்டும்

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, மே 19

படையினர் பெற்ற யுத்த வெற்றியை தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களவர்கள் ஆகிய மூவின மக்களும் ஒன்றிணைந்தே கொண்டாடவேண்டும் என்றும் அப்போதுதான் உண்மையான வெற்றியை எம்மால் அனுபவிக்க முடியும் என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அக்கட்சி நேற்று பிட்டகோட்டையில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

30 வருடங்களாக இந்த நாட்டை அழித்துக் கொண்டிருந்த புலிப் பயங்கரவாதம் இப்போது முற்றாக முடிவுக்கு வந்துள்ளது. இது நாட்டுக்கும் மக்களுக்கும் கிடைத்த முழுமையான சுதந்திரமாகும் .

இந்தப் பயங்கரவாதம் நாட்டின் இறைமை மற்றும் தேசியப் பாதுகாப்பு போன்றவற்றிற்குப் பெரும் அச்சுறுத்தலாகவிருந்தது. புலிகள் ஒரு பகுதி நிலப்பரப்பைப் பிடித்து வைத்துக்கொண்டு இந்த நாட்டுக்குச் சவால் விடுத்தனர். இனவேறுபாடின்றி அனைவரையும் கொன்றொழித்தனர். தமது இனத்தையே அழித்தொழித்தனர்.

எமது படையினர் மேற்கொண்ட தியாகத்தின் காரணமாக இப்போது வடக்கு முழுவதும் புலிகளின் பிடியில் இருந்து மீட்கப்பட்டுவிட்டது. ஓர் அங்குல நிலமேனும் இப்போது புலிகள் வசமில்லை. புலிகளுமில்லை.

இந்த நிலைமை ஏற்படுவதற்கு காரணமாகவிருந்த தரைப் படையினர், விமானப் படையினர், கடற் படையினர், விசேட அதிரடிப் படையினர், ஊர்காவல் படையினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட அனைவருக்கும் நாம் எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த வெற்றிக்குப் படையினரைப் செய்தனர் மக்களும் தியாகம் செய்துள்ளனர். அவர்கள் வாழ்க்கைச் செலவீன அதிகரிப்பைத் தாங்கிக்கொண்டு இந்த வெற்றியைப் பெற பெரும் தியாகத்தைச் செய்துள்ளனர். அந்த மக்களுக்கும் நாம் நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறோம்.

இந்த வெற்றியை அர்த்தமுடையதாக மாற்றவேண்டுமென்றால் இன, மத வேறுபாடுகளைக் கடந்து மூவின மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டும். அப்போதுதான் இது முழு நாட்டுக்கும் உரித்தான வெற்றியாக மாறும்.

அதேவேளை, தேசிய பிரச்சினைக்கான இறுதித் தீர்வு கிட்டவேண்டும் என்றால் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்படல் வேண்டும்.

ஜனநாயகத்தின் ஊடாக இந்த நாட்டு பிரஜைகளுக்குக் கிடைக்கவேண்டிய அனைத்து உரிமைகளும் உரிய முறையில் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும் - என்றார். (அ-சி)

## உதைபந்தாட்டம்

வண்ணை, மே 19

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் இவ்வாண்டுக்கான 7 பேர் கொண்ட விலகல் முறை உதைபந்தாட்ட போட்டிகள் அரியாலை காசிப்பிள்ளை மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்றைய மோதல்களில் பிற்பகல் 4 மணிக்கு சென்.அன்ரனிஸ் 'பி' அணியை எதிர்த்து பல்கலைக்கழக 'ஏ' அணியும் மாலை 5 மணிக்கு சென்.மேரிஸ் 'ஏ' அணியை எதிர்த்து பாடுமீன் 'ஏ' யும் மோதவுள்ளன.(1-160)

## சமாதானக் கல்விக் கலந்துரையாடல்

வண்ணை, மே 19

சமாதான நல்லிணக்கப் பணியகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற சமாதானக்கல்வி தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை யா/வண்ணை ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயத்தில் பிற்பகல் 1-2 மணி வரை இடம்பெறும்.

இதேவேளை பிற்பகல் 3.30-4.30 மணி வரை அச்சுவேலி, செல்வநாயகபுர சனசமூக நிலையத்தில் கிராமியச் சிறுவர்களுக்கு சமா தானக் கல்வி விழிப்புணர்வு செயற்பாடுகள் நடைபெறும் எனவும் இணைப் பாளர் செல்வி.சோபனா யோகலிங்கம் தெரிவித்துள்ளார். (1-160)

# மாட்ரிட் டென்னிஸ் பெடரர், சபீனா சம்பியன்



மட்ரிட், மே 19-

மட்ரிட் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்தது. களிமண் தரைப் போட்டியான இத்தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் 2ஆம் நிலை வீரர் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர், முதல் தர வீரரான ரபெல் நடாலை (ஸ்பெயின்) 6-4, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

2 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக தனது பரம எதிரியான நடாலை பெடரர் வீழ்த்தியுள்ளார். மேலும் களிமண் தரையில் நடாலின் தொடர்ச்சியான 33 வெற்றிப் பயணத்துக்கும் பெடரர் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

இந்த ஆண்டில் பெடரர் வென்ற முதல் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக பெண்கள் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் முதல் நிலை வீராங்கனை ரஷ்யாவின் டினரா சபீனா 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் டென்மார்க்கின் கரோலினே வோஸ்னியாக்கியைத் தோற்கடித்து பட்டத்தை தன் வசப்படுத்தியிருந்தார்.

# இலங்கை மனித உரிமை மீறல்கள்; சுயாதீன விசாரணைகள் அவசியம்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

கொழும்பு, மே 19

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகள் செல்வதற்கு அனுமதிவழங்கப்படவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் நேற்று திங்கட்கிழமை மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிற்றா வோள்ட்னர் இதனைத் தெரிவித்துள்ளார்.

''கடுமையான மோதல்கள் தணிவது போல தோன்றுவது குறித்து நாங்கள் நிம்மதி அடைந்துள்ளோம். எனினும் பொது மக்களின் நிலைகடினமானதாகவும் நிச்சயமற்றதாகவும் உள்ளது'' என அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மற்றும் பகுதிகளில் நூற்றுக்கணக்கானோர் கைது

கொழும்பு, மே 19

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நேற்று நடத்திய திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில் தமிழர்கள் உட்பட பெருமளவிலானோர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, புறக்கோட்டை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி மற்றும் கம்பஹா போன்ற பல பகுதிகளிலேயே இந்த திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## வெடிகொளுத்தி ஆரவாரம்

கொழும்பு, மே 19

வன்னி விடுவிக்கப்பட்டதாக ஜனாதிபதியின் அறிவிப்பு நேற்று நண்பகலில் வெளியான கையோடு கொழும்பில் வெடி கொளுத்தி மக்கள் ஆரவாரத்தில் ஈடுபட்டனர்.

தேசியக் கொடிகளை ஏந்தியாவாறு இனிப்புப் பண்டங்கள், பால்சோறு ஆகியவற்றை பரிமாறியும் வெடிகளைக் கொளுத்தியும் மக்கள் குதூகலித்தனர்.

இதேவேளை- யாழ்ப்பாண நகரப் பகுதியிலும் ஆங்காங்கே வெடிகள் கொளுத்தப்பட்டன.

## பிரிட்டன் கடும் கண்டனம்

கொழும்பு, மே 19

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம் முன்பாக வன்முறை ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றமைக்கு அனுமதித்தமை குறித்து பிரிட்டன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் தூதரகம் முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் வன்முறைத்தன்மை கொண்டவையாக மாறுவதற்கு இலங்கை அதிகாரிகள் அனுமதித்தமை குறித்து தூதரகப் பேச்சாளர் கடும் சீற்றம் வெளியிட்டுள்ளார்.

மேலும் தூதரக உடமைகள் சேதமாக்கப்பட அனுமதித்ததன் மூலம் இலங்கை அதிகாரிகள் தமது கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டனர் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

# சிறுவர் அபிவிருத்திக் குழு நேர்முகத் தேர்வு

யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவால் நடத்தப்படவுள்ள உதவி மாவட்ட இணைப்பாளர், உளசமூக உதவி மாவட்ட இணைப்பாளர் ஆகிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று காலை 9மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளன.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:

பிரியந்தினி உமாகாந் - திருநெல்வேலி, நடேசபிள்ளை தேவநாதன் - பண்டத்தரிப்பு, மகேந்திரன் செல்வேந்திரன் - நீர்வேலி, இரட்ணசிங்கம் அமலன் - கோப்பாய், சயாளினி குணபாலசுந்தரம் - தொண்டமானாறு, திருச்சிற்றம்பலம் உமாசங்கர் - கோப்பாய், நடராஜா ஸ்ரீகாந் - கரவெட்டி, தர்சினி சுதர்சன் - கோண்டாவில், நாதரூபினி இராஜேஸ்வரன் - பருத்தித்துறை, செல்லையா திருக்குமரன் - உரும்பிராய்.

இளையதம்பி தேவராசா - நீர்வேலி, பிரியா மெய்யழகன் - நீர்வேலி, தம்பிராஜா ஜெயதீபா - நீர்வேலி, சதாசிவம் கோதை - வல்வெட்டித்துறை, சுகிர்தா இராஜரட்ணம் - உடுப்பிட்டி, செல்லையா திருக்குமரன் - உரும்பிராய், இராஜரட்ணம் செந்தூரன் - கோண்டாவில். (203)

## கொழும்பில் பொலிஸார் உஷார்நிலையில்

அண்மைக்கால மோதல் நிலைவரம் மற்றும் புலிகளின் தலைவர் பிரபாவின் மரணம் குறித்து வெளியான செய்திகள் தொடர்பாக இரு சமூகங்களுக்கு மத்தியில் பதற்றமான சூழல் ஏற்படலாம் என்ற எச்சரிக்கையில் பொலிஸார் கொழும்பில் விழிப்புணர்வுடன் இருக்கின்றனர் என பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## பிரபாகரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

புலிகள் இறுதியில் 300 சதுர மீற்றர் நிலப்பரப்புக்குள் அடக்கப்பட்டுவிட்டனர். நேற்று முன்தினத்தைய நிலைப்பாடு இதுதான் பிரபாரன் இரு தளபதிகளுடன் தப்பிச் சென்ற வேளை கொல்லப்பட்டு விட்டார். புலிகளின் பல உறுப்பினர்களும் கொல்லப்பட்டு விட்டனர் என்றார்.

**சடலங்களை அடையாளம் கண்ட பின்னரே உறுதி செய்வோம் - உதய**

இதேவேளை-

இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தமிழோசைக்கு கூறியதாவது:

பிரபாகரன் எப்போது கொல்லப்பட்டார் அவர் எப்படிக் கொல்லப்பட்டார் என்பதை இப்போது நாங்கள் சொல்ல முடியாது. ஏனென்றால் புலிகள் இன்னமும் இருக்கிறார்கள். எங்களிடம் புலி உறுப்பினர்களின் முந்நூறு சடலங்கள் உள்ளன. கொல்லப்பட்டவர்களில் சாள்ஸ் அன்ரனி, நடேசன், அவரது மனைவி ஆகியோரும் அடங்குவர். பிரபாகரன் குறித்து இன்னமும் உறுதியாகக் கூற முடியாது- என்றார்.

புலிகளின் தலைவர் பிரபாகர்ன் கொல்லப்பட்டுவிட்டார் என்று அரச தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டதே அது குறித்து என்ன கூறுகிறீர்கள் என்று தமிழோசை கேட்டபோது-

அரசு பிரபாகரன் குறித்து எந்த அறிவிப்பையும் இன்னும் வெளியிடவில்லை. நாம் சடலங்களை அடையாளம் கண்ட பின்பே உறுதிசெய்வோம் -என்றார். (அ-6)

**விற்பனையாகின்றது**

40 வகையான சிறுவர்களுக்கான CD க்கள், DVD க்கள், 60 வகையான சிறுவர்களுக்கான முன்பள்ளி பாடநூல்கள், அழகிய வர்ணப்படங்களுடன் விற்பனையாகின்றன.

அன்னை புத்தகசாலை

இல.7, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 9881

**மணமக்கள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1961, ஆண், பூரம், கிரகபாவம் 68, கனடா பிரஜை, தாரமிளந்தவர், 5 வயது மகன் உண்டு. கணனி பொறியியலாளர். 1965, பெண், மகம், கிரகபாவம் 50, வீட்டுப்பணி செய்பவர், யாழ்ப்பாணம்.

தொடர்பு: 0774046607

## அதிகாரங்களைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது, விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது எனவும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் இறந்துவிட்டார் என்றும் மஹிந்த ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார்.

இந்த மோதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க, இடம் பெயர்ந்த மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க, அவர்களது வாழ்க்கையில் இயல்பு நிலையைக் கொண்டுவர, இந்திய அரசு, இலங்கை அரசுடனும் மக்களுடனும் இணைந்து செயற்படும்.

ஆயுத மோதலுக்கு அடிப்படையிலான காரணங்களுக்குத் தீர்வு காண்பதற்கான தருணம் இது. அதேநேரத்தில், அதிகாரப் பரவல் திட்டத்தை இலங்கை அரசு செயற்படுத்த வேண்டும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-சி)

## அடையாளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு தெரிவித்தது.

நேற்றைய சண்டையில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயர் மட்டத் தலைவர்களுடன் கொல்லப்பட்டிருக்கிறார் என்று படையினர் நம்புகின்றனர். சடலங்களை அடையாளம் காணும் பணி தொடர்கின்றது என்றும் பாதுகாப்பு அமைச்சு தனது நேற்றிரவு புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்தது.

இதுவரை அடையாளம் காணப்பட்ட18 பேரின் விவரங்களை பாதுகாப்பு அமைச்சு அந்த அறிக்கையில் வெளியிட்டுள்ளது. விவரம் வருமாறு:-

புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான், இராணுவப் பொறுப்பாளர்களான பானு, ஜெயம், அரசியல்துறைப் பொறுப்பாளர் பி.நடேசன், சமாதானச் செயலகப் பொறுப்பாளர் எஸ்.புலித்தேவன், விசேட இராணுவப் பிரிவுப் பொறுப்பாளர் ரமேஸ், பொலிஸ் பொறுப்பதிகாரி இளங்கோ, பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனி மற்றும் சுதர்மன் (சாள்ஸ் அன்ரனியின் உதவியாளர்), தோமஸ் (சிரேஷ்ட தலைவர், புலனாய்வுத்துறை), சிறிராம் (கடற்புலிகளின் சிரேஷ்ட தலைவர்), அ.இசையருவி (பெண்கள் இராணுவப் பிரிவுத் தலைவர்), கபில் அம்மான் (புலனாய்வுப் பிரிவு உதவித் தலைவர்), அஜந்தி (பெண்கள் பிரிவு பயிற்சித் தலைவர்), வர்தா (மோட்டார் பிரிவு பொறுப்பாளர்), புதியவன் (பிரபாகரனின் செயலாளர்), ஜெனர்தன் (விசேட படைத்தலைவர்) ஆகியோரின் சடலங்களே அடையாளம் காணப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-1)

**விக்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
பிரிவு 3
OL/ DAY CLASS
(8.30 - 2.00)
ஆரம்பம்: 21.05.2009 8.30 மணி
* இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டும்
* பிரிவு 4 விரைவில்
* 33 வருட காலமாக ஒழுங்காகவும் கட்டுப்பாடுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
* தூரத்து மாணவர்களுக்கு விடுதி வசதி
* பிரிவு II சில அனுமதிகள் வழங்கப்படும்.

## யுத்த வெற்றிக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு அமைச்சர்கள், பாதுகாப்புப் படையினர் உள்ளிட்ட யுத்த வெற்றிக்கு உதவிய அனைவருக்கும் அச்சந்தர்ப்பத்தில் ரணில் விக்ரமசிங்க வாழ்த்துக்களைத் தெரிவித்தார் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் மேலும் தெரிவித்தது.

இச்சந்தர்ப்பத்தில் தேசிய ஒருமைப்பாட்டைப் பலப்படுத்துவது மற்றும் இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குதல் உள்ளிட்ட பல விடயங்களை ரணில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தான் வெளிநாட்டில் இருப்பதால் இன்றைய நாடாளுமன்ற அமர்வில் தன்னால் கலந்து கொள்ளமுடியாது என்றும் இருப்பினும் ஐ.தே. கட்சி எம்.பிக்கள் அனைவரும் அமர்வில் கலந்துகொள்வர் என்றும் ரணில் ஜனாதிபதியிடம் மேலும் கூறியிருந்தார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரம் நேற்றுக் கூறியது. (அ-சி)

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என பிரிட்டன் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்டின் கொடும்பாவியை எரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனை தூதரக வளாகத்துக்குள் வீசினர்.

அதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தூதரகத்தை நோக்கி கற்கள் மற்றும் கூழ் முட்டைகள் வீசினர். யன்னல் கண்ணாடிகள் உடைந்தன.

இதேசமயம் பிரிட்டன் தூதரகத்துக்கு முன்னால் பொருத்தப்பட்டிருந்த அந்த நாட்டின் இலச்சினையில் எல்.ரி.ரி.ஈ. என்று ஆர்ப்பாட்டக்காரர்களால் எழுதப்பட்டிருந்தது.

• இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (அ-சி)

## ஐ.நா.திரும்பினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியூயோர்க்கில் இருந்து கொழும்பு வரும் வழியில் புதுடில்லி சென்று இந்திய வெளிவிவகாரத்துறை அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர், சனிக்கிழமை இரவு கொழும்பு வந்த விஜய் நம்பியார் ஞாயிற்றுக்கிழமை அதிகாரிகளுடன் முக்கியமான பேச்சுக்களை நடத்தினார்.

ஒருமாதகாலத்தில் இரண்டாவது பயணத்தை மேற்கொண்டிருந்த நம்பியார், மோதல் பகுதியில் சிக்கியிருக்கும் மக்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவிகளைக் கிடைக்கச் செய்வதே தன்னுடைய இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும் எனத் தெரிவித்திருந்தார். கொழும்பு செல்வதற்கு முன்னர் 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகைக்கு தொலைபேசி மூலமாக வழங்கிய பேட்டி ஒன்றிலேயே இதனை அவர் தெரியப்படுத்தினார்.

இருந்தபோதிலும் இந்த விடயம் தொடர்பாக அவரிடம் அதிகளவு நம்பிக்கை வெளிப்படவில்லை என 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகை தெரிவிக்கின்றது.

இந்த நிலையில் நேற்று விஜய் நம்பியார் நியூயோர்க் திரும்பினார். (அ-சி)

## இராணுவ நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்புப்படை பொறுப்பாளர் ஆகியோர் சகிதம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இத் தகவலை ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இந்தப் பணியை முன்னெடுத்து வெற்றியை ஈட்டியமைக்காக அவர்களுக்கு ஜனாதிபதி பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும் அவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார். அதைத் தொடர்ந்து முப்படைத் தளபதிகளுக்கும் ஜனாதிபதி பதவியுயர்வுகளை வழங்கினார்.

இதன் பிரகாரம் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத் பொன்சேகா ஜெனரலாகவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னாகொட அட்மிரலாகவும் விமானப்படைத்தளபதி எயார் மார்ஷல் ரொஷான் குணத்திலக்க எயார் சீப் மார்சலாகவும் பதவி நிலை உயர்த்தப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை - முப்படைத் தளபதிகளுக்கும் ஒரே சமயத்தில் பதவியுயர்வு வழங்கப்பட்டிருப்பது இலங்கையின் வரலாற்றில் இதுவே முதல்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-1-06)

## ஜனாதிபதி இன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை நாடாளுமன்ற அமர்வுகள் ஜனாதிபதியால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

காலை 9.30 மணிக்கு சபை அமர்வு ஆரம்பிக்கப்பட்டு 9.45 மணிக்கு ஜனாதிபதி சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்து இந்த விசேட உரையை நிகழ்த்துவார்.

இதனையொட்டி நாடாளுமன்றத்திற்குள்ளேயும் நாடாளுமன்றத்தைச் சூழவுள்ள பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-சி)

## ஐ.நா. செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்கள் தொடர்பாக அவர் இலங் கைத் தலைவர்களுடன் கலந்துரையாடுவார் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை-

மக்கள் பாதுகாப்பு வலயத்தில் இன்னமும் தங்கியிருப்பதாகக் கருதப்படும் மக்களின் நிலைமை தொடர்பாக பான் கீ மூன் ஆராய்வார் என ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-1)

## பிரபா உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் கடந்த சில நாள்களாக முன்னெடுக்கப்பட்ட இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கை மூலம், அங்கு எஞ்சியிருந்த மக்கள் சகலரும் மீட்கப்பட்டுவிட்டனர் என அறிவித்திருந்த படைத்தரப்பு, நேற்றுக்காலை புலிகளின் தலைவர்கள் தங்கியிருந்த மிகவும் குறுகிய பிரதேசத்திற்குள் புலிகளோடு போரிட்ட பின்னர், அங்கு மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது நடேசன், புலித்தேவன், ரமேஸ், பிரபாகரனின் மகனான சாள்ஸ் அன்ரனி ஆகியோரது சடலங்கள் மீட்கப்பட்டன என்று நேற்று முற்பகல் அறிவித்தது.

பின்னர், பிரபாகரன், பொட்டு அம்மான், சூசை ஆகியோர் அம்புலன்ஸ் ஒன்றில் தப்பிச்செல்ல முற்பட்டவேளையில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டி நேற்றுப் பிற்பகல் 'ரொய்ட்டர்' செய்தி வெளியிட்டது.

இம் மூவரும் பயணித்த அம்புலன்ஸ் ரக வாகனத்துக்கு முன்னால் பஸ் ஒன்றில் புலிகளின் உறுப்பினர்கள் சென்றுகொண்டிருந்தனர் என்றும், அவர்களுடன் சுமார் இரண்டு மணித்தியாலங்களாக இடம்பெற்ற கடுமையான மோதலின் பின்னரே புலிகளின் தலைவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் 'ரொய்ட்டர்' தெரிவித்தது.

எனினும் தலைவர் பிரபாகரன், சூசை ஆகியோரது சடலங்கள் நேற்றிரவு வரை அடையாளம் காணப்படவில்லை.

''அம்புலன்ஸ் ஒன்றில் தப்பிச் சென்றுகொண்டிருந்த பிரபாகரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் படையினரால் பதுங்கியிருந்து சுட்டுக்கொல்லப்பட்டனர். எனினும் அவர்களின் சடலங்களை படையினர் தேடிக்கொண்டிருக்கின்றனர்'' என்று அரச உயர் அதிகாரி ஒருவர் நேற்றுமாலை பி.பி.ஸிக்கு தெரிவித்தார்.

**விடுதலைப்புலிகளின் 250 சடலங்கள் மீட்பு**

நேற்றுக்காலையில் முள்ளிவாய்க்கால் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது விடுதலைப்புலிகளின் 250 சடலங்களை இராணுவத்தினர் மீட்டெடுத்தனர் என்றும், அவற்றுள் ரமேஸ், நடேசன், புலித்தேவன், சாள்ஸ் அன்ரனி ஆகியோரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் நாட்டில் இடம்பெற்ற போர் நேற்றுடன் முடிவுக்கு வந்துவிட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

முன்னதாக ''விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருக்கிறார். சிறிய காட்டுப்பகுதி ஒன்றுக்குள் அவர் சுற்றிவளைக்கப்பட்டுள்ளார்'' என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார நேற்றுக் காலை தெரிவித்திருந்தார்.

''விடுதலைப்புலிகளின் தலைவரை இலக்கு வைத்து இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. அவர் அங்கு உயிருடன் இருக்கிறார். நாங்கள் முழுமையாக அவரைச் சுற்றிவளைத்துள்ளோம். அவரால் தப்பவே முடியாது'' என பிரி கேடியர் நாணயக்கார மேலும் குறிப்பிட்டிருந்தார்.

''பிரபாகரனும் அவரது விசேட மெய்ப்பாதுகாவலர்களும் கடும் எதிர்த்தாக்குதலை நடத்தி வருகின்றனர். எனினும் இராணுவத்தினர் அவர்களை நெருங்கிவிட்டனர்'' என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவத்தின் இந்த நடவடிக்கைகள் சில நாள்களுக்கு நீடிக்கலாம். அல்லது சில மணி நேரங்களிலேயே முடிவடையலாம் எனவும் பிரிகேடியர் கூறியிருந்தார்.(அ-சி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

நற்சிந்தனை

''கல்வி என்பது முயற்சி உடையவர்களுக்கு மட்டுமே சொந்தமானது !''
கல்விச்சுடர்

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்



19.05.2009 (13) செவ்வாய்க்கிழமை

Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்


கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும்
மாதிரி வினாத்தாள்

# பொருளியல் - 01

நேரம்: 1 மணித்தியாலம்


## பகுதி - 1

**1-20 வரையிலான பல்தேர்வு வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு சரியான விடை மட்டுமே உண்டு. அதனை இனங்கண்டு அதன் கீழ்க் கோடிடுக.**

01. கலப்புப் பொருளாதாரமொன்றில் சாதனங்கள்,
   1) நுகர்வோரதும் உற்பத்தியாளரதும் தேவைகளைப் பூர்த்திசெய்ய ஒதுக்கப்படும்.
   2) நுகர்வுப் பொருள், மூலதனப்பொருள் ஆகியவற்றின் உற்பத்திக்கென ஒதுக்கப்படும்.
   3) சந்தைச் சக்தியினதும் அரசினதும் பங்களிப்புடன் ஒதுக்கீடு செய்யப்படும்.
   4) முயற்சியாளரின் செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.
   5) நுகர்வோரது செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.

02. பின்வருவனவற்றுள் எது பொருளாதாரத்தின் பங்களிப்பைச் சிறப்பாக விவரிக்கின்றது?
   1) குறைந்தபட்ச செலவிலான பொருள்கள் சேவைகளது உற்பத்தி
   2) பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்தலும் பாதீட்டினதும் சென்மதி நிலுவையினதும் பற்றாக் குறைகளைக் குறைந்த பட்சத்தில் பேணுதலும்
   3) சமூகத்தின் மனிததேவைகளை திருப்திப்படுத்தும் நோக்குடன் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து வழங்குதல்.
   4) உற்பத்தி முறையினைத் திட்டமிடலும் இலக்குகளை வரையறை செய்தலும்
   5) பொதுமக்களிடமிருந்து வரியை அறவிட்டு, அரசிற்கான செலவினங்களை மேற்கொள்ளல்.

03.




கைத்தொழில் பொருட்களின் இழப்பீடின்றி உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதனைச் சாத்தியமாக்கக்கூடிய நிலைமையைக் கொண்டிருக்கும் உற்பத்திப் புள்ளி எது.


1) a 2) b 3) c
4) d 5) e

04. ஊழிய வினைத்திறனைக் கணிப்பிடப் பொருத்தமானதாக அமைவது.
   1) $\frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{ஊழியத்தின் அளவு}}$
   2) $\frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{எல்லை உற்பத்தி}}$
   3) $\frac{\text{ஊழிய அளவு}}{\text{மொத்த உற்பத்தி அளவு}}$
   4) $\frac{\text{எல்லை உற்பத்தி}}{\text{ஊழியத்தின் அளவு}}$
   5) $\frac{\text{எல்லை உற்பத்தி}}{\text{மொத்த உற்பத்தி அளவு}}$

05. பொருளியல் இலாபம் பற்றிய சரியான கணிப்பீடு எது?
   1) வருமானம் - பணச் செலவு
   2) வருமானம் - அமையச் செலவு
   3) கணக்கியல் இலாபம் - அமையச் செலவு
   4) கணக்கியல் இலாபம் + அமையச் செலவு
   5) நிதிச் செலவு + அமையச் செலவு

06. வருமானம் அதிகரித்தபோதும் கேள்வித் தொகையில் மாற்றம் ஏற்படாத பண்டம்
   1) ஆடம்பரப்பண்டம் 2) இழிவுப்பண்டம்
   3) அத்தியாவசியப்பண்டம் 4) புறநடை கேள்விப்பண்டம் 5) நுகர்வுப்பண்டம்

07. போட்டிச் சந்தை ஒன்றின் சமநிலை தொடர்பான வரைபடமொன்று தரப்பட்டுள்ளது. நுகர்வோனின் வருமான இழப்புக்காரணமாக இடம்பெற்ற மாற்றத்தின் பின்னரான சமநிலையைக் குறித்து நிற்பது.




1) $E_1$ 2) $E_2$
3) $E_3$ 4) $E_4$ 5) $E_5$

நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

08. மாத வருமானம் 4,000 ரூபாவிலிருந்து 5,000 ஆக அதிகரித்த பொழுது அரிசிக்கான கேள்வி 10C கிலோவிலிருந்து 120 ஆக அதிகரிப்பின் வருமானம்சார் கேள்வி நெகிழ்ச்சி.
   1) ஒன்றிலும் அதிகமாகும் 2) ஒன்றைவிடக் குறைவானது
   3) ஒன்றிற்குச் சமனானது 4) பூச்சியமாகும்
   5) சரியாகக் கூறமுடியாது

09. சந்தைத் தோல்வியை ஏற்படுத்தக்கூடியது.
   1) அரசாங்கம் பொதுப் பண்டங்களை வழங்கல்
   2) அரசாங்கம் மானியங்களை வழங்கல்
   3) அரசாங்கம் வர்த்தகக் கட்டுப்பாட்டைத் தளர்த்தல்
   4) அரசாங்கம் தொழிற்சாலைகள் சிலவற்றை மூடிவிடல்
   5) அரசாங்கம் சந்தை நடவடிக்கைகளில் தலையிடாதிருத்தல்


★ ★ ★ இவ்வார இணைப்பிதழில்.....
★ பொருளியல் 01 இன் பகுதி 1 வினாத்தாள் ( கொ.தமிழ்ச்சங்கம் )
★ இரசாயனவியலின் கொழும்பு வலய வினாத்தாள் 02 இன் தொடர்ச்சி (பகுதிகள் B,C)....
★ கணக்கீடு 01 இன் பகுதி 1 வினாத்தாள் ( கொ.தமிழ்ச்சங்கம் )
★ புவியியல் பகுதி - 11இன் விடைக்குறிப்புக்கள்....
★ பௌதிகவியலின் பொறியியல் வினாத்தொகுப்புத் தொடர்ச்சியும் அவற்றின் விடைக்குறிப்புக்களும்....


10. ஒரு நிறுவனம் சமநிலை அடையும் போது
   1) சராசரி வருமானமும் சராசரிச் செலவும் சமனாகக் காணப்படும்.
   2) எல்லை வருமானமும் சராசரிச் செலவும் சமனாகக் காணப்படும்.
   3) சராசரி வருமானமும் எல்லைச் செலவும் சமனாகக் காணப்படும்.
   4) எல்லை வருமானமும் எல்லைச் செலவும் சமனாகக் காணப்படும்.
   5) கேள்வித் தொகையும் நிரம்பல் தொகையும் சமனாகக் காணப்படும்.

11. நிறுவனமொன்றின் உற்பத்தி, செலவுபற்றிய கோட்பாட்டில் குறுங்காலம் என்பது,
   1) ஓர் ஆண்டிற்குட்பட்ட காலம்
   2) ஓர் ஆண்டுகாலம்
   3) எல்லா உற்பத்திக் காரணிகளையும் மாற்றமுடியாத காலம்
   4) எல்லா உற்பத்திக் காரணிகளும் மாற்றமடையும் காலம்
   5) மொத்தச் செலவுகள் மாறாதிருக்கும் காலம்


எதிர்வரும் வாரம் முதல்
உங்கள் அபிமான உதயன் கல்விச்சுடர் வழங்கும்
உயர்தர மாணவர்களுக்கான தயார்படுத்தல் வினாத்தாள்கள்
மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து நடாத்தும் மாதிரி வினாத்தாள்கள் யாழ் மாணவர்களின் நலன் கருதி
உங்கள் அபிமான கல்விச் சுடரில் செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில். வெளிவருகின்றன.
உங்கள் பிரதிகளுக்கு அருகில் உள்ள உதயன் முகவரிடம் இன்றே முற்பதிவு செய்யவும்.
மேலதிக தொடர்புகளுக்கு:
071 4273035 / 071 685005


12. எளிய பொருளாதார மொன்றில் C = 200 +0.8 , I = 100 m ஆயின் சமநிலைத் தேசிய வருமானம் எவ்வளவு?
   1) 1000m 2) 1200m 3) 1500m 4) 1800m
   5) 2000m

13. பின்வருவனவற்றுள் எது பேரினப் பொருளாதார சமநிலைக்குரிய நிபந்தனையாகக் கருதப்படுவதில்லை.
   1) $Y=E$ 2) $Ad=As$ 3) $Y=C+I+G+Nx$
   4) $(I+G+X+C) = (S+T+M+C)$ 5) $(S=I), (T=G), (X=M)$

14. தேசியக் கணக்கீட்டின் விளைவாக அடையப்பட முடியாதது எது?
   1) வரிவருமானங்களை வினைத்திறனாக அறவிடல்.
   2) பொருளாதாரமொன்றின் கட்டமைப்பு பண்புகளை இனங்காணல்
   3) வருமானங்களின் ஒதுக்கீட்டினை இனங்காணல்
   4) பொருளாதார வளர்ச்சியை அளவிடலும் சர்வதேச ரீதியாக ஒப்பிடலும்
   5) செலவீனப் பாங்கினை அறிந்துகொள்ளல்

15. அரச தலையீடுள்ள பொருளாதாரமொன்றின் எல்லை நுகர்வு நாட்டம் 0.9 எனின் அரசாங்க செலவுப் பெருக்கியின் அளவு யாது?
   1) 1 2) 9 3) 0.9 4) 10 5) 0.1

16. பொதுப்பண்டம் தொடர்பாக ஏற்றுக் கொள்ள முடியாத கருத்து எது?
   1) பொதுப்பண்டங்களின் நுகர்வில் போட்டித்தன்மை இல்லை.
   2) பொதுப் பொருட்களின் அடிப்படைத்தன்மை நுகர்விலிருந்து விலக்கிவைக்க முடிதல்
   3) பொதுப் பண்டங்கள் விலக்குதல் விதிக்குட்படுபவை
   4) பொதுப் பண்டமொன்றிற்கு நுகர்வோர் விலைசெலுத்த முன்வரமாட்டார்.
   5) பொதுப் பண்டத்தை இலாபநோக்கம் கருதும் உற்பத்தியாளர் வழங்க முன்வரமாட்டார்.

17. பொருளாதாரமொன்றில் அரச தலையீட்டிற்கான காரணம் அல்லாதது.
   1) பொதுப் பண்டங்கள் சேவைகளை வழங்குவதற்கு
   2) சந்தையில் தனியாரினால் போதுமான அளவில் வழங்கப்படாத பொருட்களை வழங்குவதற்கு
   3) பொருளாதாரங்களுக்கிடையிலான சமநிலையை ஏற்படுத்துவதற்கு
   4) பொருளாதார உறுதி, அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்துவதற்கு
   5) வளங்களை சரியானமுறையில் ஒதுக்கீடு செய்வதற்கு

18. அண்மைக் காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் நடைமுறைச் செலவில் அதிகபங்கை வகித்தது எது?
   1) வட்டிக் கொடுப்பனவு 2) சமூகப்பணிகள்
   3) போக்குவரத்துத் தொடர்பாடல் 4) பொருளாதாரப் பணிகள்
   5) அரசபணிகள்

19. அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரமானியம் பின்வருவனவற்றுள் எச்செலவினுள் உள்ளடக்கப்படும்.
   1) தனியார் நடைமுறை மாற்றல் 2) தனியார் மூலதனமாற்றல்
   3) அரச மூரதனமாற்றல் 4) ஏனைய மாற்றல்
   5) தனியார் மாற்றல்

20. அரச பாதீட்டுப்பற்றாக்குறையின் நிதியிடலில் வங்கியல்லா மூலங்களில் எந்நிறுவனம் கூடிய பங்கீட்டினை வகிக்கிறது.
   1) தேசிய சேமிப்பு வங்கி 2) அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
   3) அரச மூலதனமாற்றல் 4) ஏனைய மாற்றல்
   5) தனியார் மாற்றல்

(40 புள்ளிகள்)


தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயனவியல் - 02

கொழும்பு வலய பரீட்சை வினாத்தாள்

## பகுதி - B

இரண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

05. a) நியம அணுவாதல் வெப்பவுள்ளுறையை வரையறுக்குக.

b) உங்களுக்கு Zn தூள், $CuSO_{4(aq)}$ தரப்பட்டுள்ளன. இவற்றை உபயோகித்து Cuவின் இடப்பெயர்ச்சி தாக்க வெப்பவுள்ளுறையை எவ்வாறு பரிசோதனை வாயிலாகத் துணியலாம் என சுருக்கமாக விவரிக்குக.

c) நைத்திரிக் அமிலத்தை அமோனியம் நைத்திரேற்றாக மாற்றமுடியும் என்பதால் $HNO_3$ பசளை கைத்தொழிலில் முக்கியமான இரசாயனப்பொருள் உயர் வெப்பநிலை அமுக்கத்தில் வாயு நிலை அமோனியாவிலிருந்து நைத்திரிக் அமிலம் ($HNO_3$) உற்பத்தி செய்யப்படும். அமோனியாவிலிருந்து நைத்திரிக் அமிலம் உற்பத்தி செய்யப்படும்.

விளையுள் தாக்கம் பின்வருமாறு, $12NH_{3(g)} + 21O_{2(g)} \rightarrow 8HNO_{3(g)} + 4NO_{(g)} + 14H_2O_{(g)}$

| சேர்வை | $\nabla H^\theta f KJmol^{-1}$ |
|---|---|
| $NH_{3(g)}$ | -46.1 |
| $H_2O_{(g)}$ | -242 |
| $HNO_{3(g)}$ | -135 |
| $NO_{(g)}$ | + 90.2 |

வெப்பவுள்ளுறை வரிப்படத்தை உபயோகித்து மேலு[illegible]ர்த்தக செயன்முறை அகவெப்பத்தாக்கமா, புறவெப்பத்தாக்கமா என உய்த்தறிந்து தாக்க வெப்பத்தை கணிக்குக.

d) ஒரேயளவு $CO_2$, $CH_4$, $H_2$ என்பவற்றுக்கான கதி பரம்பல் வளையிகளை 300k இல் ஒரே அச்சுக்களில் கீறுக.

e) வளிமண்டல இரசாயினி மாநகரசபை வளி 35PPm செறிவுடைய COஇனால் மாசுபடுத்தப்பட்டுள்ளது என அறிக்கை வெளியிட்டுள்ளார். வளிமண்டல வெப்பநிலை 29°C ஆகவும், வளிமண்டல அமுக்கம் 745 torr ஆகவும் உள்ளது. (760 torr = $10^5 Nm^{-2}$)
1. CO இன் மூல் பின்னம் யாது?
2. COஇன் பகுதியமுக்கத்தைக் கணிக்குக.
3. $1000dm^3$ வளியில் உள்ள CO மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது?

06. 1) $H_{2(g)}$, $I_{2(g)}$ $HI_{(g)}$ ஆகியவற்றைக்கொண்ட தொகுதி 300°Cஇல் இயக்கச்சமநிலையில் உள்ளது என்பதை எவ்வாறு பரிசோதனை வாயிலாகக் காட்டலாம்?

2) $PCl_{5(g)} \rightleftharpoons PCl_{3(g)} + Cl_{2(g)} \quad \nabla H^\theta = 90\ KJmol^{-1}$
மேலுள்ள சமநிலையில் (1) சமநிலையின் நிலை (2) சமநிலை மாறிலி என்பவற்றை பின்வருன எவ்வாறு பாதிக்கும் என உய்த்தறிக.
a) வெப்பநிலையை அதிகரித்தல்.
b) கொள்கலத்தின் கனவளவைக் குறைத்தல்.
c) ஊக்கியைச் சேர்த்தல்.
d) $Cl_{2(g)}$ ஐ சேர்த்தல்.
e) விழுமிய வாயுவைச் சேர்த்தல்.

3) நைதரசன், ஐதரசன் வாயுக்கள் 1 : 3 மூல் விகிதத்தில் கலக்கப்பட்டுள்ளன 600°C வெப்பநிலையிலும் $10^6$ Pa அமுக்கத்திலும் சமநிலையில் அமோனியாவின் நூற்றுவீதம் 15% $N_{2(g)} + 3H_{2(g)} \rightleftharpoons 2NH_{3(g)}$ என்னும் தாக்கத்தின் Kpயை 600°C இல் துணிக.

4) $0.1moldm^{-3}$ எதனொயிக் அமிலத்தையும் $0.40\ moldm^{-3}$ சோடியம் எதனோவேற்றையும் கொண்ட நொதியின் pH 5.35 அமிலத்தின் கூட்டப்பிரிகை மாறிலியைக் கணிக்குக.

07. 1) a) கரைதிறன் பெருக்கம் என்னும் பதத்தை வரையறுக்குக.
b) 25°Cஇல் $CaSO_4$இன் கரைதிறன் பெருக்கம் $2.0 \times 10^{-5}\ mol^2dm$-6 $CaSO_4$இன் கரைதிறனை பின்வரும் சந்தர்ப்பங்களில் $moldm^{-3}$இல் கணிக்குக.
1. நீரில்.
2. $0.100\ mol^{-3}$ சோடியம் சல்பேற்றுக் கரைசலில்.
3. $0.200\ moldm^{-3}$ கல்சியம் நைத்திரேற்றுக்கரைசலில்.

2)

| மின்வாய் | E (298k)/V |
|---|---|
| $Mg^{2+}_{(aq)}\ Mg_{(S)}$ | -2.34 |
| $Zn^{2+}_{(aq)} / Zn_{(s)}$ | -0.76 |
| $Cu^{2+}_{(aq)} / Cu_{(s)}$ | +0.34 |
| $Fe^{3+}_{(aq)} / Fe^{2+}_{(aq)}$ | +0.77 |
| $Ag^{+}_{(aq)} / Ag_{(s)}$ | +0.80 |
| $1/2 / Br_{2(d)}\ Br^{-}_{(aq)}$ | +1.06 |

பின்வருவனவற்றில் யாது நிகழும் என காரணத்துடன் கூறுக.
1. வெள்ள நைத்திரேற்று நீர்க்கரைசலுடன் Cu தூள் குலுக்கப்பட்டது.
2. செப்புத்தூள் மக்னீசியம் சல்பேற்று நீர்க்கரைசலுடன் குலுக்கப்பட்டது.
3. $Fe^{2+}$ (aq) ,புரோமீனுடன் குலுக்கப்பட்டது.

3) $R \longrightarrow S$ என்னும் தாக்கத்தில்,
ஆரம்ப செறிவு $[R]_0 = 0.25\ moldm^{-3}$ ஆகவுள்ளபோது தாக்கவீதம் $1.7 \times 10^{-4}\ moldm^{-3}$
ஆரம்ப செறிவு $[R]_0 = 0.75moldm^{-3}$ ஆகவுள்ளபோது ஆரம்ப தாக்கவீதத்தைப் பின்வரும் நிலைமைகளில் எதிர்வு கூறுக.
a) தாக்கம் பூச்சிய வரிசையாகவுள்ளபோது. (b) தாக்கம் முதலாம் வரிசை தாக்கமாக உள்ளபோது.
b) தாக்கம் இரண்டாம் வரிசை தாக்கமாக உள்ளபோது

4) 207 ஐ சாரணுத்திணிவாகவுடைய ஓர் உலோகம் 66 நிமிடங்களுக்கு 0.0600 A மின்னோட்டத்தைச் செலுத்துவதன் மூலம் படிவு செய்யப்படுகின்றது. கதோட்டின் நிறை அதிகரிப்பு 0.254g பின்வருவனவற்றைக் கணிக்குக.
1. படிவு செய்யப்பட்ட உலோக மூல்கள்.
2. செலுத்தப்பட்ட இலத்திரன் மூல்கள்.
3. உலோக கற்றயனின் அலகு ஏற்றம்.

## பகுதி - C

கட்டுரை வினாக்கள்

இரு வினாக்களுக்கு விடையளிக்குக.

08. 1) மூலகம் Xஇன் நியம முதலாம், இரண்டாம், மூன்றாம் மூலர் அயனாக்க சக்திகள் முறையே 738, 1449, 7728 $KJmol^{-1}$ ஆவர்த்தன அட்டவணையில் மூலகம் Xஇற்கு உடனடியாக அடுத்ததாகவுள்ள மூலகங்களின் நியம முதலாம் மூலர் அயனாக்க சக்திகள் முறையே 496, 578 $KJmol^{-1}$. மூலகம் X இன் ஏலைட்டுகள் சுவாலைப் பரிசோதனைக்கு சிறப்பியல்பான நிறத்தைக் காட்டுவதில்லை. மூலகம் Xஇன் நைத்திரேற்று நீர்க்கரைசல் பின்வரும் இயல்புகளைக் காட்டுகின்றது.
1. ஐதான சல்பூரிக் அமிலத்துடன் வீழ்படிவு உருவாகவில்லை.
2. சோடியம் காபனேற்று கரைசலுடன் வெள்ளை வீழ்படிவு உருவாகியது.
3. சோடியம் ஐதரொட்சைட்டு கரைசலுடன் வெள்ளை வீழ்படிவு உருவாகியது. இவ்வீழ்படிவு மிகையான சோதனைப்பொருளில் கரையவில்லை.

மேலுள்ள அவதானங்களை விளக்கி மூலகம் Z ஐ இனம் காண்க. பொருத்தமான இடங்களில் சமப்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

2) ஆவர்த்தன அட்டவணையில் கூட்டம் 1இல் கடைசியாகவுள்ள மூலகம் பிரான்சியம் குறுகிய வாழ்வுக்காலமுடைய கதிர்த்தொழிற்பாட்டு மூலகம். கூட்டம் 1மூலகங்களின் இரசாயனத்தைப் பயன்படுத்திப் பிரான்சியத்திற்கு இருக்கக்கூடிய பின்வரும் இயல்புகளை உய்த்தறிக.
1. ஐதரைட்டின் இயல்பு, நீருடன் ஐதரைட்டின் தாக்கம்.
2. நைதரசனுடன் சேர்க்கையுறுதல்.
3. ஒட்சிசனுடன் சேர்க்கை.
4. காபனேற்று, ஐதரசன் காபனேற்று, நைத்திரேற்று என்பவற்றின் மீது வெப்பத்தாக்கம்.
5. நீரில் உப்புகளின் கரைதிறன்.

3) பின்வரும் மாற்றீடுகளை எவ்வாறு நிகழ்த்துவீர்?
1. தொலைமைற்று $\longrightarrow$ தூய Ca
2. காணலைற்று $\longrightarrow$ தூய K

09. (a) 1. இருவழிவிகாரத் தாக்கம் என்றால் என்ன?
2. பின்வரும் தாக்கத்தை சமப்படுத்துக.
$S_2Cl_2 + H_2O \longrightarrow S + H_2SO_3 + HCl$

(b) பின்வரும் அட்டவணையைப் பிரதி செய்து, ஒவ்வொன்றிலும் நிகழக்கூடிய அவதானத்தைக் குறிப்பிடுக.

| கரைசல் | கரைசல்களுக்கு வெவ்வேறாக சேர்க்கப்பட்ட சோதனைப் பொருட்கள் | | |
|---|---|---|---|
| | $BaI_{2(aq)}$ | $HCl_{(aq)}$ | $BaI_{2(aq)} + HCl_{(aq)}$ |
| $Na_2SO_{4(aq)}$ | | | |
| $Na_2SO_{3(aq)}$ | | | |
| $NaHSO_{4(aq)}$ | | | |
| $Na_2S_2O_{3(aq)}$ | | | |

(c) பின்வருவனவற்றிற்கு அரை அயன் தாக்கங்கள் எழுதுக.
1. தயோசல்பேற்றை ரெற்றாதயனேற்றாக ஒட்சியேற்றல்.
2. தயோசல்பேற்றை சல்பேற்றா ஒட்சியேற்றல்.
3. $I_2$ ஐ $I^-$ ஆகத் தாழ்த்தல்.
4. $Cl_2$ ஐ $Cl^-$ ஆகத் தாழ்த்தல்.
5. சமன்பாடு (1) ஐயும் (3) ஐயும் இணைக்க.
6. சமன்பாடு (2) ஐயும் (4) ஐயும் இணைக்க.

(d) ரெற்றாகுளோரோமெதேன் ($CCl_4$) நீருடன் தாக்கமுறாது. ஆனால் சிலிக்கன் (4) குளோரைட்டு ($SiCl_4$) இலகுவாக நீர்ப்பகுப்படையும் விளக்குக.

(e) ஐதரசன் ஏலைட்டுக்களின் தாழ்த்தும் ஆற்றல் பற்றி சர்சிக்க.

(10) 1. அமோனியம் சல்பேற்று, கல்சியம் ஐதரொட்சைட்டு என்பவற்றிலிருந்து உலர் அமோனியா தயாரிப்பு, சேகரிப்பு, உபகரணத்தை வரைந்து பெயரிடுக. தெரிந்தெடுத்த உலர்த்தும் கருவி, சேகரிப்பு முறை பற்றி கருத்துத் தெரிவிக்குக.
2. வர்த்தக முறையில் அமோனியா உற்பத்தியை விவரிக்குக. இத்துறையின் பௌதீக, இரசாயன தத்துவங்களை விளக்குக.
3. அமோனியா தாழ்த்தும் கருவியாகத் தொழிற்படுவதற்கான இரு தாக்கங்கள் தருக.
4. வீட்டில் கல்சியம் குளோரைட்டு (1), சோடியம் குளோரைட்டு (1) என்பவற்றின் பாவனைகள் யாவை?
5. $NO_2^-$, $NO^{3-}$ என்பவற்றை வேறுபடுத்தியறிவதற்கான ஒரு பரிசோதனை தருக.

**நிறைவு பெற்றன.**

## பௌதிகவியலின் விடைக்குறிப்புக்களின் தொடர்ச்சி...

| | | | | |
|---|---|---|---|---|
| 121 -3 | 122 -4 | 123 -2 | 124 -5 | 125 -3 |
| 126 -1 | 127 -2 | 128 -1 | 129 -3 | 130 -4 |
| 131 -3 | 132 -4 | 133 -3 | 134 -3 | 135 -5 |
| 136 -3 | 137 -3 | 138 -3 | 139 -3 | 140 -1MS |
| 141 -2 | 142 -5 | 143 -4 | 144 -3 | 145 -3 |
| 146 -4 | 147 -4 | 148 -2 | 149 -4 | 150 -1 |
| 151 -5 | 152 -2 | 153 -4 | 154 -4 | 155 -2 |
| 156 -3 | 157 -4 | 158 -1 | 159 -5 | 160 -5 |
| 161 -2 | 162 -5 | 163 -5 | 164 -3 | 165 -3 |
| 166 -3 | 167 -2 | 168 -2 | 169 -2 | 170 -3 |
| 171 -5 | 172 -5 | 173 -4 | 174 -2 | 175 -3 |
| 176 -1 | 177 -1 | 178 -3 | 179 -2 | |
| 180 -1 | 181 -1 | | | |

**நிறைவு பெற்றன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்

General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

# கணக்கீடு - 01

நேரம்: 1 மணித்தியாலம்

## பகுதி - 1

### பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. நிதிக் கணக்கீட்டின் நோக்கம்,
    1) தேவையான தரப்பினருக்குரிய தகவல்களை வழங்கல்.
    2) நிறுவன திரவத்தன்மையை மதிப்பிடல்.
    3) நிறுவன செயற்பாட்டு பெறுபேறுகளை அறிதல்.
    4) எதிர்கால திட்டமிடல்.
    5) வளங்களைக் கட்டுப்படுத்தல்.

02. கணக்கீட்டின் அடிப்படை தொழிற்பாடாக கருதக்கூடியது?
    1) வகைப்படுத்தலும் பொழிப்பாக்கலும்.
    2) தகவல்களை வழங்கல்.
    3) திரட்டலும் தொடர்பாடலும்.
    4) திரட்டலும் பதிவிடலும்.
    5) பதிவிடலும் கணக்காய்வும்.

03. நிதிக்கூற்றுக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்,
    1) கணக்காளர்.
    2) கணக்குப்பதிவாளர்.
    3) தலைவர்.
    4) கணக்காய்வாளர்.
    5) பணிப்பாளர் சபை.

04. கணக்கீட்டு சமன்பாடு தோற்றம் பெறுவதற்கான அடிப்படை எண்ணக்கரு,
    1) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு.
    2) பண அளவீட்டு எண்ணக்கரு.
    3) அலகுசார் எண்ணக்கரு.
    4) அட்டுறு எண்ணக்கரு.
    5) தேறல் எண்ணக்கரு.

05. உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல் வாங்கல்,
    1) செலுத்திய வாடகை ரூபா 4,000/=
    2) அடுத்த நிதியாண்டுக்கான முற்பணமாக செலுத்திய வாடகை ரூபா 5,000/=
    3) வங்கிக்கடன் செலுத்தியது ரூபா 6,000/=
    4) தளபாடம் வாங்கியது ரூபா 10,000/=
    5) கடன்பட்டோரிடம் பெற்றகாசு ரூபா 15,000/=

06. 01.04.2008இல் கடன்பட்டோர் மீதி ரூபா 40,000 31.03.2009இல் கடன்பட்டோர் மீதி ரூபா 60,000 ஆகும். கடன்பட்டோர் தொகையில் 5%இற்கு ஐயக்கடன் ஏற்பாடு செய்வது நிறுவனத்தின் கொள்கையாகும். ஐயக்கடன் ஏற்பாடு தொடர்பாக இலாபநட்டக் கணக்கில் பதிவு செய்யப்படும் தொகை யாது?
    1) ரூபா 1,000 குறை ஏற்பாடு.
    2) ரூபா 1,000 மிகை ஏற்பாடு.
    3) ரூபா 2,000 குறை ஏற்பாடு.
    4) ரூபா 2,000 மிகை ஏற்பாடு.
    5) ரூபா 3,000 மிகை ஏற்பாடு.

நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

07. 31.03.09இல் கணக்கேடுகளை மூடும் நிறுவனம் செலுத்திய காப்புறுதித் தொகையில் ரூபா 10,000/= 01.07.2008 தொடக்கம் 30.06.2009 வரையான காலப்பகுதிக்குரியதாகும். 31.03.09இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்திய மொத்தக் காப்புறுதித் தொகை ரூபா 40,000 ஆகும். அவ்வாண்டுக்கு இலாநட்டக்கணக்கில் தாக்கீடு செய்யப்படும் காப்புறுதித் தொகை யாது?
    1) ரூபா 37,500/=
    2) ரூபா 30,000/=
    3) ரூபா 42,500/=
    4) ரூபா 40,000/=
    5) ரூபா 46,500/=

08. மிக விரைவாக பழுதடையும் கணனி போன்ற சொத்துக்களுக்கு ஒடுங்கு மீதி முறையிலான பெறுமானத்தேய்விடல் முறை பொருத்தமானது எனக் கருதப்படுகின்றது. அதற்கான அடிப்படைக்காரணிகளாக அமைவன,
    1) கணனியின் பெறுமதி அதிகமாக இருப்பதால்.
    2) கணனியின் தொடர்ச்சியான பயன்பாடு அதிகமாக இருப்பதால்.
    3) கணனியின் பராமரிப்பு செலவு அதிகரித்துச் செல்லல்.
    4) கணனியில் இருந்து பெறுகின்ற பயன் காலப்போக்கில் குறைவடைந்து செல்லல்.
    5) வழக்கிழத்தல் தொழில்நுட்ப மாற்றங்கள்.

09. நிதிக்கூற்றுக்களுக்கு அளவு சாராப் பண்புகளை வழங்குவதற்கு வழிகாட்டியாக அமையாதது,
    1) இலங்கை கணக்கீட்டு நியமம்.
    2) நிறுவனக் கணக்காளரின் தனிப்பட்ட தீர்மானம்.
    3) இறைவரித் திணைக்கள சட்டப்பிரமாணங்கள்.
    4) கம்பனிச்சட்டம்.
    5) எண்ணக்கருக்கள்.

10. பங்காளர் ஒருவர் இளைப்பாறுகின்றபோது அவரது செலுத்தவேண்டிய கடன் தொடர்பான வட்டி வீதத்தில் செல்வாக்கு செலுத்தும் சட்டப்பிரிவு யாது?
    1) 24ஆம் பிரிவு.
    2) 44ஆம் பிரிவு.
    3) 42ஆம் பிரிவு.
    4) 24ஆம் பிரிவும் 42ஆம் பிரிவும்.
    5) மேற்கூறிய எவையுமில்லை.

11. சலிமும் ரகுமானும் 3:2 என்ற விகிதத்தில் இலாபநட்டங்களை பகிரும் பங்காளர்கள். அசின் இலாபத்தில் 1/5 பங்கு உரித்துடன் இணைத்துக் கொள்ளப்படுகிறார். புதிய இலாபநட்ட விகிதம் யாது?
    1) 10 : 8 : 2
    2) 12 : 8 : 5
    3) 10 : 5 : 5
    4) 3 : 2 : 1
    5) 8 : 7 : 5

12. இயங்கிக் கொண்டிருக்கும் பங்குடைமை ஒன்றில் புதிய பங்காளர் ஒருவர் சேருகின்ற பொழுது அவரால் காசாகக் கொண்டு வரப்படும் நன்மதிப்பானது எவ் அடிப்படையில் பதிவு செய்யப் படும்.
    1) பழைய இலாப நட்டவிகிதம்.
    2) புதிய இலாப நட்டவிகிதம்.
    3) இழப்பீட்டு விகிதம்.
    4) மூலதன விகிதம்.
    5) ஏற்பீட்டு விகிதம்.

**2008 ஆண்டில் Star விளையாட்டுக் கழகத்தில் பெற்ற சந்தா**

| | | | | |
|---|---|---|---|---|
| 2008ஆம் ஆண்டுக்கு ரூ 8,000/= | | | 1.1.08 | 31.12.08 |
| 2007ஆம் ஆண்டுக்கு ரூ 29,000/= | வருமதி சந்தா | 2007 இற்கு | 10,000 | - |
| 2008ஆம் ஆண்டுக்கு ரூ 6,000/= | | 2008 இற்கு | - | 5,000 |
| 43,000/= | முற்பணச்சந்தா | | 3,500 | - |

13. வருமான செலவுக்கணக்கிற்கு மாற்றவேண்டிய சந்தாவை அட்டுறு அடிப்படையில் கணிக்குக.
    1) ரூபா 43,000/=
    2) ரூபா 53,500/=
    3) ரூபா 30,500/=
    4) ரூபா 36,500/=
    5) ரூபா 37,500/=

14. காசு அடிப்படையில் சந்தா மதிப்பிடும்பொழுது வருமான செலவுக்கணக்கிற்கு தாக்கல் செய்ய வேண்டிய தொகை,
    1) ரூபா 40,500/=
    2) ரூபா 20,500/=
    3) ரூபா 30,500/=
    4) ரூபா 37,500/=
    5) ரூபா 36,500/=

15. ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக தொழில் தருணரின் பங்களிப்புக்கான இரட்டைப்பதிவு,
    1) ஊழியர் சேமலாப நிதி செலவுக்கணக்கு வரவு
       ஊழியர் சேமலாப நிதியக்கணக்கு செலவு
    2) ஊழியர் சேமலாப நிதியக்கணக்கு வரவு
       இலாப நட்டக்கணக்கு செலவு.
    3) ஊழியர் சேமலாப நிதியக்கணக்கு வரவு
       ஊழியர் சேமலாப நிதிச்செலவுக்கணக்கு செலவு.
    4) இவை அனைத்தும் அல்ல.
    5) மேற்கூறிய அனைத்தும் பொருந்தும்.

16. வரையறுத்த ஏகலைவன் கம்பனியில் 31.12.08இல் தயாரித்த கடன்கொடுத்தோர் கட்டுப் பாட்டுக்கணக்கு மீதியானது ரூபா 75,000/= ஆகும். இக்காலப் பகுதியில் கடன் கொடுநர் பட்டோலை மீதியைத் தயாரித்தபோது ரூபா 7,000/= தவறவிடப்பட்டது. வெளித்திரும்பல் நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 8,000/= கூட்டியும் கூட்டப்பட்டிருந்தது. மேற்கூறிய தகவல்களை கருதிக்கொண்டு திருத்த முன் உள்ள கடன் கொடுநர் பட்டோலை மீதி யாது?
    1) ரூபா 70,000/= செலவு மீதி.
    2) ரூபா 68,000/= செலவு மீதி.
    3) ரூபா 62,000/= செலவு மீதி
    4) ரூபா 88,000/= செலவு மீதி.
    5) இவை அனைத்துமல்ல.

17. பெற்ற கழிவு ரூபா 500/= பெற்ற கழிவுக் கணக்கில் இருமுறை பதியப்பட்டமைக்கான சீராக்கற் பதிவு.
    1) கடன் கொடுநர் கணக்கு வரவு ரூபா 1,000/=
       பெற்ற கழிவுக் கணக்கு செலவு ரூபா 1,000/=
    2) பெற்ற கழிவுக் கணக்கு வரவு ரூபா 1,000/=
       கடன் கொடுநர் கணக்கு செலவு ரூபா 1,000/=
    3) பெற்ற கழிவுக் கணக்கு வரவு ரூபா 500/=
       தொங்கல் கணக்கு செலவு ரூபா 500/=
    4) பெற்ற கழிவுக் கணக்கு வரவு ரூபா 1,000/=
       தொங்கல் கணக்கு செலவு ரூபா 1,000/=
    5) தொங்கல் கணக்கு வரவு ரூபா 1,000/=
       பெற்ற கழிவுக் கணக்கு செலவு ரூபா 1,000/=

18. இருப்புக்கள் கிரயத்திலும் தேறிய தேறத்தகு பெறுமதி குறைவாக இருக்கும் சந்தர்ப்பம்,
    1) விற்பனைச் செலவு அதிகரித்தல்.
    2) விற்பனை விலை குறைதல்.
    3) இருப்பு பழமையாதல்.
    4) இருப்பு பகுதியளவில் சேதமடைதல்.
    5) மேற்கூறிய யாவும் சரியான கூற்றாகும்.

19. (வற்வரி) பெறுமதி சேர் வரி செலுத்தும் நிறுவனமாக பதிவு செய்துள்ள நிறுவனம் ஒன்றின் விற்பனைக் கணக்கில்,
    1) வற்வரி உட்பட மொத்த விற்பனைத் தொகை செலவு வைக்கப்படும்.
    2) வற்வரி உட்பட மொத்த விற்பனைத் தொகை வரவு வைக்கப்படும்.
    3) வற்வரி நீங்கலாக மொத்த விற்பனைத்தொகை செலவு வைக்கப்படும்.
    4) வற்வரி நிங்கலாக மொத்த விற்பனைத் தொகை வரவு வைக்கப்படும்.
    5) வற்வரித் தொகையும் வரி நீங்கலான விற்பனைத் தொகையும் தனித்தனியாக செலவு வைக்கப்படும்.

20. பின்வருவனவற்றுள் எது காசின் ஒரு பகுதியாக உள்ளடக்கப்படுவதில்லை.
    1) வங்கியினால் வழங்கப்பட்டு பயன்படுத்தப்படாத மேலதிகப்பற்று வசதி.
    2) வருட இறுதியிலுள்ள சில்லறைக்காசு மீதி.
    3) வணிகத்திடமுள்ள மூன்று மாத திறைசேரி உண்டியல்.
    4) கடன்பட்டோரிடமிருந்து பெற்று தேறாத காசோலை.
    5) கடன்பட்டோரிடமிருந்து பெற்று வைப்பிலிடாத காசோலைகள்

* **பின்வரும் வசனங்களின் இடைவெளியினை நிரப்புக.**

21. கணக்கீட்டு உள்ளீடுகளாவன ................................ , ................................ ஆகும்.

22. சொத்து அதிகரிப்பு ................................ லும் உரிமை குறைவு ................................ லும் இரட்டைப் பதிவுத் தத்துவத்தின்படி பதியப்படும்.

23. காசேட்டின் வரவுப்பக்க கழிவு நிரலில் பதிவதற்கான மூல ஆவணம் ................................ ஆகும்.

24. அறவிட முடியாக்கடனைப் பதிவதற்கான் மூல ஏடு ................................ ஆகும்.

25. இறுதி இருப்பின் கிரயம் விற்பனைக் கிரயத்திலிருந்து கழித்துக் காட்டப்படுவது ................................ எண்ணக்கருவினடிப்படையிலாகும்.

26. இலங்கை கணக்கீட்டு நியமம் 18 இன்படி ஆதனம் பொறி உபகரணங்கள் என்பவற்றை சொத்தாக அடையாளம் காண்பதற்கான 2 பண்புகள் எவை?
    1) ................................
    2) ................................

27. பங்குடைமை உடன்படிக்கை ஒன்றில் இல்லாத விடயம் தொடர்பிலான தீர்வுக்கு ................................ஐ பின்பற்றுதல் வேண்டும்.

28. மீள் மதிப்பீட்டு இலாபமானது பங்காளர்களின் ................................ கணக்கிற்கு மாற்றப்படும்.

29. ஆரம்ப அட்டுறு சந்தா, சந்தாக்கணக்கில் ................................ பக்கத்தில் பதிவு செய்யப்படும்.

30. சட்டத்தின்படியும் கணக்கீட்டு நியமம் 3இன்படியும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது கடைப்பிடிக்கப்படும் அடிப்படைகள்.
    1) ................................
    2) ................................

**பின்வருவனவை சரியானவையா/ பிழையானவையா எனக் கூறுக.**

31. காசு அடிப்படையிலான சந்தாக்கணிப்பீட்டில் முற்பணமானது கருத்தில் கொள்ளப்படும். ( )

32. பங்காளர் கடன் வட்டியானது இலாபநட்டப் பகிர்கணக்கின் வரவில் பதியப்படும். ( )

33. மீள் மதிப்பீட்டு இலாபமானது ஓர் வருமான ஒதுக்கமாகும். ( )

34. இறுதிப் பெறுமதியுடைய சொத்தொன்றின் பெறுமானத் தேய்விடத்தக்க பெறுமதியானது அதன் கிரயமாகும். ( )

35. விற்பனையிலிருந்து கொள்வனவுக் கிரயத்தை ஒப்பிடுதலே இணைதல் எண்ணக்கருவின் நோக்கமாகும். ( )

* **மிகப்பொருத்தமான விடையை எழுதுக.**

36. தேறிய கைக்கிட்டும் பெறுமதி ................................ , ................................ அடிப் படையில் மதிப்பிடப்படும்.

37. S.L.A.S 12 இற்கு அமைய சான்றுபடுத்தக்கூடிய நிகழ்வு ................................ இல் மாற்றத்தை ஏற்படுத்தும்.

38. ஒதுக்கங்கள், எற்பாடுகள் என்பவற்றுக்கிடையிலான இரு வேறுபாடுகளைத் தருக.
    1) ................................
    2) ................................

39. மூலதனச் செலவையும் வருமானச் செலவையும் வேறுபடுத்துக.
    1) ................................
    2) ................................

40. கட்டுபாட்டுக் கணக்கை தயாரிக்கும்போது வழுக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
    ................................
    ................................

(40 புள்ளிகள்)

**தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்....**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# புவியியல்-02

ஆசிரியர்:-
L.C.JANJABEEL B.A (Hons), Geography (sp),
Toppur - Trincomalee
Former Lecturer in Jamiah Naleemiya, Beruwela

## பௌதிகப் புவியியல், விடைக்குறிப்புகள்

### கடந்த வாரத் தொடர்ச்சி(12.05.2009)......

03. 1)
* கடலின் மேற்பரப்பில் மேடு, பள்ளங்கள் கொண்டு அசைந்து கொண்டிருக்கும் அமைப்புக்களே அலைகள் ஆகும்.
* அலைவேகம், அலைநீளம் என்பன கடலின் ஆழத்தைப்பொறுத்து வேறுபடும்.
* கடலலைகளின் நீளத்தை வைத்து குற்றலை (Short Wave), நீள அலை (Long Wave) என வகைப்படுத்தலாம்.
* நகர்வுகளை வைத்து முன்னேறும் அலை (Progressive Wave), நிலையான அலை (Standing Wave / Stationary Wave) என வகைப்படுத்தலாம்.
* ஆனால், சுனாமி அலை பின்வரும் அடிப்படைகளினால் சாதாரண அலைகளில் இருந்து வேறுபடுகின்றது.
  1. கடலில் அலைகள் வற்றுப்பெருக்குக் (Tides) காற்று மூலம் உருவாக்கப்படும். ஆனால், இது அவ்வாறானதொரு அலைவகை அல்ல.
  2. காற்றினால் உருவாக்கப்படும் அலைகளைவிட அளவில் பெரியன.
  3. அதிர்வுக்கேற்ப வேகத்தையும் கொண்டிருப்பதால் அவை சமுத்திரங்களையும் கடந்து வீசும் சக்தியைக் கொண்டிருக்கும்.
  4. சாதாரண அலைகளை ஆழ்கடலிலும், கரையோரங்களிலும் காணலாம். ஆனால், சுனாமி அலை ஆழமற்ற நீரலைத் தொகுதியினைச் சார்ந்துள்ளதால் அவை கரையோரப் பகுதிகளைத் தாக்க முன் கருவிகளூடாக எனக் கண்டறியப்படும். அல்லது தாக்கி சேதம் விளைவித்த பிறகு இது (Tsunami) என அடையாளப்படுத்தப்படும்.
  5. வீசுகின்ற அலையின் நீளம், உயரம் என்பன ஆழத்தைவிடக் கூடுதலாகக் காணப்படும்.
  6. சுனாமி அலைகள் ஆழமற்ற பகுதிகளைத் தாக்கும்போது வேகம் குறைந்தும், உயரம் கூடியும் காணப்படும்.
  7. ஆழமற்ற சமுத்திரப் பகுதிகளில் ஏற்படும் சுனாமியின் அலை குறைவான உயரத்தையும், கூடிய நீளத்தினையும் கொண்டிருக்கும்.
  8. சுனாமி அலைகள் தனது சக்தியை இழக்கும் அளவானது, நேர்மாறாக அலையின் நீளத்துடன் தொடர்புகொண்டுள்ளதால் கூடிய வேகத்தைக் கொண்டிருக்கும்.

2) கடலலையின் செயற்பாடு காரணமாக ஏற்படும் அரித்தல் நிலவுருவங்களும், படிதல் நில உருவங்களும்.
* அரித்தல் நிலவுருவங்கள் :-
  1. ஓங்கல்கள் - சாய்வு ஓங்கல், உட்குடைவு ஓங்கல்.
  2. கடற்குகைகள் , ஊதுதுளைகள், சிறுபாறைத் தீவுகள், கடல்வளைவுகள், குடாக்கள், முனைகள், அலைவெட்டிய மேடை.
* படிதல் நிலவுருவங்கள் :-
  1. கூழாங் கன்னாக்குகள். 2. மணற்றடைகள்.
  3. கரையோர மணற்குன்றுகள். 4. மணற்றொடர்கள்.
  5. தெம்போலா. 6. முன்னிலங்கள்.

3) அரித்தல் நிலவுருவங்கள்

ஓங்கல்
* சரிவான நிலத்தில் அலைகள் வேகமாக வீசும்போது அதன் உறுதி குறைகின்றது.
* பெருக்கலை அலை மட்டத்தில் ஏற்படும் வெட்டு ஒழிலிருந்து தின்னல் ஆரம்பமாகின்றது.
* வெட்டு சற்று ஆழமானதைத் தொடர்ந்து அதற்கு மேலுள்ள பாறைகள் இடிந்துவிழும்.
* இவ்வாறு விழும் பாறைத்துண்டுகளை கருவியாகப் பயன்படுத்தி சாய்வு அடி உயரத்தில் அலைகள் ஈடுபடும்.
* இம்முறைகளில் உருவாகும் நில உருவகங்கள் ஓங்கல்கள் எனப்படும்.



அலைவெட்டிய மேடை
* பாறைகள் இடிந்து விழுவதனால் ஓங்கல் படிப்படியாக பின்னடைகின்றது.
* அதேசமயம் ஓங்கல்களில் இருந்து இடிந்துவிழுந்த பாறைத்துண்டுகள் அங்கும் இங்குமாக உருட்டி ஓங்கலின் கீழுள்ள அதாவது, அலையின் பெருக்கு மட்ட வெட்டிற்கு கீழிருக்கும் பாறைப்பரப்பைத் தேய்த்ததினால் அது ஒரு மேடைபோல் உருவாகிறது.
* இதை அலை வெட்டிய மேடை எனக்கூறுவர்.
* மேற்கூறப்பட்ட முறையில் உருவாகும் ஓங்கலின் தன்மையும் தோற்றமும் பல காரணிகளில் தங்கியுள்ளன. அதாவது, பாறையின் தன்மை, அமைப்பு, ஆக்கம், பிளவுக்கோடுகள் நலிவு வளையங்கள், கடல் தின்னல், நிலத்தேய்வு ஆகியன நடைபெறும் வீதங்கள் முக்கியமானவை.
* அலை வெட்டிய மேடையைத் தவிர மென்பாறைப் பிரதேசங்களில் சிறு குடாக்களும் வன்பாறைப்படைகளும் நீட்டு நிலங்களாக உருவாகலாம்.




* ஓங்கல் நோக்கி சரிவாக ஓடும் அலைகளின் தின்னலினால் அதன் கீழ்ப்பகுதியில் குகைகள் உருவாகலாம்.
* நலிவு வலையங்களிலும் மூட்டுப் பாறைகள் காணப்படும் இடங்களிலும் குகைகள் உண்டாகின்றன.
* பின்னர் கூரை இடிந்து விழுவதாலும் கற்குகை மேற்பரப்புடன் தொடர்புள்ளதாக அமையும். இவ்வாறு குகைகளையும் மேற்பரப்பையும் இணைக்கும் நிலைக்குத்தான பள்ளத்தை ஊதுழை எனக் குறிப்பிடுவர்.

  உதாரணம்:- ஒகனித் தீவில் இவ்வாறான குகைகளைக் காணலாம்.
* ஒரு நீட்டுநிலத்தின் இரு பக்கங்களில் இருந்தும் குகைகள் உண்டாகி ஒன்றுடனொன்று இணையும்போது பாறை வளைவுகள் ஏற்படுகின்றன.

  உதாரணம்:- இஸ் கொட்லாந்தில் இத்தகையவில் வளைவுகளைக் காணலாம்.
* இவ்வகை வளைவுகளின் கூரை (மேற் பாகம்) இடிந்து விழுவதால் சிறு பாறைத்தீவு உண்டாகின்றது.
* தென்னிலங்கை கரையோரத்தில் காணப்படும் சிறிய பாசி, பெரிய பாசி எனப்படும் இராவணன் பாறைகள் இத்தகையதாகும். இவை தேய்ந்து உயரத்தில் குறைந்து அடிக் கட்டை என்னும் பெயர் பெறுகின்றன.

படிதல் நிலவுருவங்கள்

கடல் அலையால் தின்னப்பட்ட பருப்பொருட்கள் அலைகளின் செயலுக்குட்பட்டு இறுதியில் அலையின் தாக்குதலுக்குள்ளாகி கடல்மட்டங்களில் போய்ப் படிகின்றன. மணற் கூழாங்கல், சிப்பி போன்றன படிகின்றன. இவ்வாறு படிதலின் விளைவாகப் பின் வரும் நில உருவங்கள் உருவாகின்றன. அவையாவன:
* ஆக்கும் அலையானது கடலிலிருந்து மணலைப் பெரும் அளவில் கரையோரங்களில் சேர்ப்பதால் கடற்கரை நில உருவகங்கள் உருவாகின்றன.
* தின்னப்பட்ட மணல், சிப்பி முதலியன படிவதால் மணற்றடைகள் உருவாகின்றன. கரையோரங்களில் மணற்றடைகள் அமைந்திருக்கும். மணற்றடைகள் பெரும்பாலும் பெருக்கு மட்டத்திற்கேற்ப அமைந்திருக்கும்.
* கூழாங்கற்கள், சிப்பி முதலியன படிதலின் விளைவாக உருவானவை கூழாங்கன்னாக்குகள் ஆகும். இவை பெரிதும் பெருக்கு மட்டத்துக்கும், வற்று மட்டத்துக்கும் இடையே தொடராகக் காணப்படுகின்றன.
* மணற்றடைகளின் படிதலினால் குடாக்கள் கடல்நீர் ஏரிகள், சேற்று நிலங்கள் என்பன உருவாகின்றன.

04. 1)
* புவியின் மேற்பரப்பில் காணப்படும் மிக நுண்ணிய பருப்பொருட்கள் யாவும் மண் எனப்படும்.
* மண் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் ஒவ்வொரு காரணிகளுக்குமிடையிலும் பூரண இடைத்தொடர்புண்டு.
* மண் உருவாக்க காரணிகள் பின்வருமாறு:-
  1) காலநிலை (Climate) 2) காலம்
  3) உயிரியல் நடவடிக்கை (Biological Activity) 4) தரைத்தோற்றம்.
  5) நிலவுருங்களின் வளர்ச்சி (தின்னல் காரணிகள்)

காலநிலை:-
* மண்ணின் உருவாக்கத்தில் காலநிலை மூலகங்களான வெப்பநிலை, படிவு வீழ்ச்சி, ஆவியாக்கம் என்பவற்றின் தாக்கம் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.
* பாறைகளின் பௌதிக முறைத்தின்னல் (Physical Wethering), இரசாயனத்தின்னல் (Chemical Wertherig), இடம் பெறுவதுடன் நுண்ணங்கிகளின் செயற்பாடு, வேர்களின் தலையீடு, மண்புழுக்களின் தொழிற்பாடு அத்தோடு சிறிய விலங்குகளின் குழிவான தின்னல் போன்ற உயிரினம் செயற்பாடுகளோடு இணைந்து காணப்படும்.இவை அனைத்தும் காலநிலையை பொறுத்தே அமையும்.
* எனவே காலநிலையே மண்ணின் உருவாக்கத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணி ஆகும்.

காலம்:-

மண் வேறுபடுகின்ற விகிதத்தில் குறிப்பிட்ட
* காலத்திற்கு படிப்படியாக உருவாகி முதிர்ச்சி பெறுதலாகும்.
* இங்கு ஆற்று வண்டல் மண் படிவுகள் இளம் படிவுகாகக் காணப்படுகின்றமையால் குறுக்குப் பார்வையில் இது குறைந்தளவினதாகக் காணப்படும். இதனால் ஈரலிப்பான காலநிலை பகுதிகளில் மண் தொகுதி விருத்தியுறுவதற்கு 100 முதல் 200 வருடம் வரை ஏற்படுகின்றது.
* எனவே கால அடிப்படையில் மண்ணின் உருவாக்கமானது 1000 வருடங்களைக் கொண்டது எனக் கருதவேண்டியுள்ளது.
* ஒன்று முதல் 6 மில்லியன் வருடத்திற்குரியதாக அயன மத்திய கோட்டுப் பகுதிகளில் உள்ள மண் பிரிவுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

உயிரியல் நடவடிக்கை (Biological Acfivity)

விலங்கினங்கள், தாவரங்களின் வளர்ச்சி மாற்ற மிகவேண்டுமென்றால் அது தனிப்பட்ட ஒரு மாறிலியாக இயங்கக்கூடியதே தாவரப்போர்வை மாற்றமடைய வேண்டும் எனில், சேதனப்பொருட்களின் மாற்றப்படவும் குறுக்கிடவும் கூடும். நுண்ணுயிர்களின் நடவடிக்கையினை எடுத்துக்கொண்டால் பற்றீரியா, மண்புழுக்கள், கறையான், எலிகள் என்பன மண் உருவாக்கத்தில் குறிப்பாக மண் கலப்பிற்கும் சேதனப்பொருட்கள் ஒன்றுடன் ஒன்று சேர்வதற்கும் மண் உருவாக்கக் காரணியாகக் கொள்ளப்படுகிறது.

தரைத்தோற்றம்:-
* குத்துயரம் காலநிலையையும் வெப்பமடைதலையும் பாதிக்கும்.
* அவ்வாறே தரையின் சாய்வுக்கோணம் மேற்பரப்பு நீரோட்டத்தையும், மண்ணரிப்பையும் பாதிக்கும்.
* தரைத்தோற்றத்தை தெளிவாக நோக்கின் பாறைகளில் சாய்வு இடம்பெறுமிடத்து கழுவு நீரோட்டம் அதிகரிப்பதால் தின்னற் தொழிற்பாடும் அதிகரித்த முறையில் இடம்பெறும்.
* தட்டையான தரைகளில் மண்படை ஆழமுடையதாகக் காணப்படும்.
* தரைத்தோற்றம் கூடியளவு சாய்வைக் கொண்டுள்ள இடத்து தின்னல் சக்தி கூடியும் மண்ணின் விருத்தி கூடுதலாகவும் காணப்படும். இதுவும் பிரதான பங்களிப்பை மண் உருவாக்கத்துக்கு ஆற்றுகின்றது.

நிலவுருவங்களின் வளர்ச்சி:-
* தரைத்தோற்ற அமைப்பிற்கமைய நிலவுருவங்கள் வளர்ச்சியடையும்.
* அவ்நிலவுருங்கள் கொண்டுள்ள அமைப்பினைப்பொறுத்து தின்னல் கருவிகள் மூலம் பாறைகள் அரிக்கப்பட்டு நிலவுருவ வளர்ச்சியிலும் மாற்றங்கள் ஏற்படுகிறது.
* இதனால் நிலவுருவ வளர்ச்சி பெறும் பகுதிகளில் மண் உருவாக்கம் அடைகின்றது.

2)
  1. செங்கபில நிற லட்ரசோலிக் மண் (Latasolic)
  2. சிவப்பு - மஞ்சள் பொருட் சோலிக்மண் (Podzolic)
  3. முதிர்ச்சியுறாக் கபில நிறமண் (Loams)
  4. சதுப்பு நில, ஓரளவு சதுப்பு நில மண் (Bog And Half Bog Soils)

3) செங்கபில நிற லட்ரசோலிக்மண்:-
* இது பூரணம் முதல் மத்திமம் வரையான வடிதலுக்குட்பட்ட செங்கபில நிறமான இழைகளைக் கொண்ட அமிலச்செறிவுகொண்ட மண்.
* பள்ளத்தாக்கின் அடிமட்டம் முதல் குன்றுகள் (நிலத்தோற்றம்) வரைபரந்துள்ளது.
* இம்மண் பகுதிகளில் பல்வேறுபட்ட பயிர் வகைகள் வளர்கின்றன. அவற்றுக்குப் பொருத்தமாக இம்மண்வகை விளங்குகிறது.

சதுப்பு நில, ஓரளவு சதுப்பு நிலமண்:-
* குறைந்தளவு வடிதலுக்குட்பட்ட மண் மேற்பரப்புப் படையானது கடும் கபில நிறம் முதல் கறுப்பு சேதனப்பொருட்களைக் கொண்டமைந்து காணப்படும்.
* கரையோரம் சார்ந்த சமதரையான நிலப்பகுதிகளில் குறைந்தளவு வடிதலுக்குட்பட்ட இம்மண் பரந்து காணப்படுகிறது.
* இம்மண் நெல் மற்றும் நாணற்புல் உற்பத்திக்கும் வளர்ச்சிக்கும் சிறந்து விளங்குகிறது.

05. 1)
* புவியானது கண்ட ஓடு சமுத்திர ஓடு என்ற இரு ஓடுகளாலும் ஆக்கப்பட்டுள்ளது.
* புவியில் இடம்பெறும் இரு வகைச் சக்திகளின் செயற்பாட்டினால் பல்வேறுபட்ட நிலவுருவங்கள் உருவாகின்றன.
* அவை அகவிசை, புறவிசைச் செயற்பாடுகளாகும்.
* அகவிசைச் செயற்பாடுகள் புவியின் உட்பாகப் படைகளில் தொழிற்பட புறவிசைச் செயற்பாடு மேற்பகுதியில் இடம்பெறுகின்றன.
* இவ்அகவிசைச் செயற்பாடுகள் சில சமயம் திடீரென எரிமலைச் செயற்பாடுகளாகவும் புவி நடுக்கங்களாகவும் உணரப்பட்டு அடையாளப் படுத்தப்படுகின்றன.
* அகவிசைச் செயற்பாடுகளை எல்லா நேரங்களிலும் வெளிப்படையாக உணரமுடியாவிட்டாலும் புவி மேற்பரப்பில் தோற்றுவிக்கப்படும் நிலவுருவங்களைக்கொண்டு இனம் காணமுடியும்.
* எனவே, புவியின் அகவிசைச் செயற்பாடுகளினால் புவியின் மேற்பரப்பில் ஏற்படுகின்ற அசைவுகளையே புவியோட்டு அசைவு ஏன அழைக்கப்படுகிறது.
* புவியோட்சை வினை இரு பிரதான பிரிவுகளாக வகுப்பர்.
  1. நிலைக்குத்தசைவு. 2. கிடையசைவு.
* நிலைக்குத்தசைவுகளை கண்டவாக்க விசைகள் என்றும் கிடையசைவுகளைமலையாக்க விசைகள் என்றும் அழைப்பர்.
* இங்கு புவியின் உட்கட்டமைப்பின் அடிப்படையிலும் அது ஆக்கப்பட்டுள்ள தகட்டு அமைவிலும் புவியோட்டு விசையாக அடையாளப்படுத்தப்பட்ட நிலைக்குத்தசைவு, கிடையசைவின் மூலம் உருவாக்கப்படுகின்ற அசைவினையே புவியோட்டசைவு எனப்படுகிறது.

2) இதற்கு அமுக்கவிசை, இழுவிசையினால் ஏற்படும் நிலவுருவங்களைக் குறிப்பிடலாம்.
* அமுக்க விசை:- மலைகள் அமையப்பெறும் அமைப்பில் மேல் மடிப்பு, கீழ்நோக்கிய மடிப்பு, தலைகீழ் மடிப்பு, நீலமிட்சி, சாய்ந்த மடிப்புகள் போன்ற நிலவுரு அமைப்புக்களைக் காட்டலாம்.
* இழுவிசை:- இச்செயற்பாடு காரணமாக ஏற்படுகின்ற சாதாரண குறை, நிலைக்குத்துக் குறை, சாய்வுக்குறை, நேர்மாறான குறைகளைக் குறிப்பிடலாம்.

**தொடர்ச்சி அடுத்தவாரம் வெளிவரும்......**

இப் பகுதி தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் 0714325006 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் காலை 9.30 தொடக்கம் மாலை 4.30 வரை தொடர்புகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌதிகவியல் - 01

ஆசிரியர்:-
சி.சிந்தனைச்செல்வன் (B.Sc) Dip in Edu, Dip in IT
கொ/ விவேகானந்தா கல்லூரி.

## பொறியியல் MECHANICS

கடந்த வாரத் தொடர்ச்சி(12.05.2009)......


135. உயரமான பலகை ஒன்றிலிருந்து குதிக்கும் ஒரு மெய்வல்லுனன் ஒருவன் நீரை அடைவதற்குள் வெவ்வேறு அசைவுகளை மேற்கொள்ள முடியும். விழும்போது அவனின் எக்கணியம் மாறாது?
1) ஏகபரிமாணவேகம். 2) ஏகபரிமாண உந்தம். 3) சடத்துவத்திருப்பம்.
4) கோணவேகம். 5) கோண உந்தம்.

136. 1m ஆரையுடையதும் 5kg திணிவுடையதுமான சீரான வட்டத்தட்டு ஒன்றின் மையத்தினூடகச் செல்லும் அதன் தளத்திற்குச் செங்குத்தான அச்சு பற்றி அதன் சடத்துவத்திருப்பம்,
1) $10kgm^2$ 2) $5kgm^2$ 3) $2.5kgm^2$
4) $5/3kgm^2$ 5) $2kgm^2$

137. தனது கைகளை நீட்டியபடி பனிக்கட்டியின் மீது சுழலும் ஒருவன் செக்கனுக்கு 2 தரம் என்ற வீதம் சுழல்கின்றான். அவன் தனது கைகளை மடித்ததும் சடத்துவத்திருப்பம் 50%-ஆகக் குறைகிறது. தற்போது அவனது சுழற்சி வீதம்,
1) $1\ revs^{-1}$ 2) $2\ revs^{-1}$ 3) $4\ revs^{-1}$
4) $8\ revs^{-1}$ 5) $16\ revs^{-1}$


138. ஒரு பறப்புச்சில்லு மாறாவீதத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. அதன் இயக்கசக்தி 220J அதன் மீது 7Nm மாறா எதிர்க்கும் முறுக்கம் பிரயோகிக்கப்படுகிறது. அது ஓய்விற்கு வரு முன் நிகழ்த்தும் சுழற்சிகளின் எண்ணிக்கை,
1) 2 2) 4 3) 6
4) 10 5) 20

139. 5kg திணிவுடையதும் 0.2m ஆரையுடையதுமான சில்லொன்றைச் சுற்றியுள்ள இழையில் 0.5kg திணிவு தொங்கவிடப்பட்டுள்ளது. தொகுதி இயங்கவிடப்படின் சில்லின் கோண ஆர்முடுகல்,
1) $25/3\ rads^{-2}$
2) $5/3\ rads^{-2}$
3) $5\ rads^{-2}$
4) $3/2\ rads^{-2}$
5) $8/3\ rads^{-2}$




140. மேலுள்ள வினாவின் திணிவில் ஏகபரிமாண ஆர்முடுகல்,
1) $25/3\ ms^{-2}$ 2) $5/3\ ms^{-2}$ 3) $5ms^{-2}$
4) $3/2\ ms^{-2}$ 5) $8/3\ ms^{-2}$


141. தலைகீழாக ஊஞ்சலாடும் இரு சேர்க்கஸ் (CIRCUS) வீராங்கனைகளைப் படம் காட்டுகிறது. அவர்கள் ஒத்த அவத்தையில் ஊஞ்சலாடுகின்றனர். அதாவது, இருவரும் ஒரே நேரத்தில் ஒரே பக்கத்திற்கு ஆடுகின்றனர். ஒரு வீராங்கனை தனது ஊஞ்சலிலிருந்து பாய்ந்து மற்றவரின் கைகளைப் பிடிக்கவேண்டியுள்ளது. அதற்கு அவர்கள் ஒவ்வாத அவத்தையில் ஆடவேண்டும். இதை நிகழ்த்துவதற்குப் பொருத்தமான செய்கை பின்வருவனவற்றுள் எதுவாகும்?



1) இதற்கு அவள் தனது உடலை நெளித்துத் திரும்புதல் வேண்டும்.
2) சட்டத்தை நோக்கித் தனது உடலை வளைக்கவேண்டும்.
3) ஒவ்வாத அவத்தை வரும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து ஆடவேண்டும்.
4) அவள் தனது கைகளைத் தட்டுதல் (Clap) வேண்டும்.
5) மற்றவளை நோக்கி ஆடும்போது இயலுமான காற்றை ஊதவேண்டும்.

142. கிடையான பிளாஸ்ரிக் தட்டு தனது மையம் பற்றி $\omega_0$ என்ற மாறாக் கோணக்கதியுடன் சுழன்று கொண்டிருக்கிறது. ஒரு சிறிய திணிவு m தட்டில் மெதுவாக வைக்கப்படுகிறது. தட்டின் கோணக்கதி $\omega$ ஆக மாறுகிறது. மையம் பற்றி தட்டின் சடத்துவத்திருப்பம் I எனின், $\omega$ வைக் காண்பதற்கு நாம் பிரயோகிக்கவேண்டியது,
1) $I\omega_0 = m\omega$ 2) $I = (\omega+\omega_0')\ m$ 3) $m\omega_0 = I\omega$
4) சக்திக்காப்பு. 5) கோண உந்தக்காப்பு.

* இல. 143-146 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
சீரான நிலையான சில் ஒன்றின் திணிவு 4kg ஆகும். அதன் ஆரை 0.5m. அது தனது மையத்தின் ஊடாகச் செல்லும் தனது தளத்திற்குச் செங்குத்தான அச்சு பற்றிச் சுழலக்கூடியது. சில்லின் விளிம்புக்குத் தொடலியாக 5N விசை 3sகளுக்கு பிரயோகிக்கப்படுகிறது.




143. சில்லின் கோண ஆர்முடுகல்,
1) $2rads^{-2}$ 3) $3rads^{-2}$ 3) $4rads^{-2}$
4) $5rads^{-2}$ 5) $10rads^{-2}$

144. 3s இன் பின் சில்லின் கோணவேகம்,
1) $5rads^{-1}$ 2) $10rads^{-1}$ 3) $15rads^{-1}$
4) $20rads^{-1}$ 5) $25rads^{-1}$

145. இந்நேரத்தில் நிகழ்த்தப்பட்ட சுழற்சிகளின் எண்ணிக்கை,
1) 2.56 2) 3.28 3) 3.58
4) 4.23 5) 7.46

146. இந்நேரத்தில் சில்லு பெற்ற சுழற்சி இயக்கசக்தி,
1) 25.75J 2) 36.45J 3) 52.75J
4) 56.25J 5) 32.75J

147. புறமுறுக்கம் இல்லாதபோது இரு பொருட்கள் சேருகின்றவாயின் பின்வரும் கூற்றுக்களில் எந்த ஒன்று எப்போதும் உண்மையானது?
1) ஒவ்வொரு பொருளினதும் கோண உந்தம் மாறாமல் இருக்கும்.
2) ஒவ்வொரு பொருளினதும் சுழற்சி இயக்கசக்தி மாறாமல் இருக்கும்.
3) பொருட்களின் மொத்தச்சுழற்சி இயக்கசக்தி மாறாதிருக்கும்.
4) பொருட்களின் மொத்தக்கோண உந்தம் மாறாமல் இருக்கும்.
5) ஒவ்வொரு பொருளினதும் கோண உந்தம் இரு மடங்காகும்.

148. 200Nm மாறாமுறுக்கம் ஒரு சில்லை அதன் மையம் பற்றிச் சுழற்றுகிறது. அதன் சடத்துவத்திருப்பம் $50kgm^2$ ஆகும். சில்லின் கோண ஆர்முடுகல்,
1) $2rads^{-2}$ 2) $4rads^{-2}$ 3) $6rads^{-2}$
4) $8rads^{-2}$ 5) $10rads^{-2}$

149. மேலுள்ள வினாவில் 5s இன் பின் சில்லின் கோணவேகம்,
1) $5rads^{-1}$ 2) $10rads^{-1}$ 3) $15rads^{-1}$
4) $20rads^{-1}$ 5) $30rads^{-1}$


150. $6m^3$ உட்கனவளவுடைய ஆழ்மானி (Diving Bell) ஒன்று அடைக்கப்பட்டுள்ள வளியின் கனவளவு $4m^3$ஆகும்வரை நன்னீர்க்குளமொன்றினுள் நிலைக்குத்தாக அமிழ்த்தப்படுகிறது. நீர்ப்பாரமானியின் உயரம் 10m எனின்,குளமேற்பரப்பிலிருந்து ஆழ்மானியில் உள்ள நீர்மேற்பரப்பின் ஆழம்,
1) 5m 2) 20/3m 3) 15m
4) 50/m 5) 25m

151. ஓர் உருளைவடிவான தாங்கி ஒன்று அடியில் $1cm^2$ உடைய துவாரத்தைக் கொண்டது. தாங்கியினுள் ஒரு குழாயிலிருந்து $80cm^3s^{-1}$ என்ற வீதத்தில் பாய்கிறது. தாங்கியில் அதிகூடியது எவ்வளவு உயரத்திற்கு நீர் இருக்கும்?
1) 0.25cm 2) 2.5cm 3) 5cm
4) 10cm 5) 3.2cm


152. கனவடிவக்குற்றி ஒன்றின் மீது 200g திணிவு வைக்கப்பட்டுள்ளது. அப்போது குற்றி நீரில் மட்டு மட்டாக அமிழ்ந்து மிதக்கிறது. திணிவு அகற்றப்பட்டபோது குற்றி 2cmஆல் உயர்கிறது. குற்றியினது ஒரு பக்கத்தின் நீளம்,
1) 5cm 2) 10cm 3) 20cm
4) 10 2cm 5) 30cm153.

153. $\rho_1,\rho_2(\rho_2>\rho_1)$ அடர்த்திகளையுடைய கலக்குமியல்பில்லாத இரு திரவங்கள் முகவை ஒன்றினுள் கொள்ளப்பட்டுள்ளன. $\rho$ அடர்த்தியுடைய பதார்த்தத்தாலான திண்மக் கோளம் ஒன்று இம்முகவையினுள் வைக்கப்பட்டபோது கீழுள்ள திரவத்தில் தனது கனளவின் 3/4 பங்கு அமிழ்ந்திருக்க மிதக்கிறது. பின்வருவனவற்றுள் சரியானது,
1) $\rho = \ \rho_1\rho_2$ 2) $\rho = \rho_1+\rho_2/2$ 3) $\rho = \rho_2-\rho_1/2$
4) $\rho = \rho_1+3\rho_2/4$ 5) $\rho = 3\rho_1+\rho_2/4$

154. படத்தில் காட்டியுள்ளதுபோல் $d_1,d_2$ விட்டமுடைய $(d_1>d_2)$ இரு குழாய்கள் முனைக்கு முனை இணைக்கப்பட்டு சேர்மானக் குழாயினூடு ஒரு திரவம் பாயவிடப்படுகிறது. உறுதிநிலையில் காட்டப்பட்டுள்ள நிலைகளில் திரவத்தினது வேகங்கள் $V_1,V_2$ எனின், $V_1/V_2$ என்னும் விகிதத்தைத் தருவது,
1) $d_1/d_2$ 2) $d_2/d_1$
3) $d_2/d_1$ 4) $(d_2/d_1)\ 2$
5) $(d_2/d_1)3$




155. பாத்திரம் ஒன்றினுள் H உயரத்திற்கு நீர் உள்ளது. நீர் மட்டம் மாறாது பேணப்படுகிறது. நீர்மட்டத்திற்கு h ஆழத்திலுள்ள துவாரம் ஒன்றினூடு வெளியேறும் நீர் கிடை மேற்பரப்பில் L தூரத்தில் அடிக்கிறது. பின்வருவனவற்றுள் சரியானது,
1) $L = \sqrt{h\ (H-h)/2}$ 2) $L = \sqrt{2h\ (H-h)}$
3) $L = 2\sqrt{h(H-h)}$ 4) $L = 4\sqrt{h\ (H-h)}$
5) $L = h(H-h)/2$




156. 200N நிறையையும் $20m^3$ கனவளவையும் கொண்ட சூடான வளி பலூன் ஒன்று நிலைக்குத்தாக மேல்நோக்கி இயங்குகிறது. வளியின் அடர்த்தி $1.2kgm^{-3}$ எனின், பலூனில் தாக்கும் மேல்நோக்கிய விளையுள் விசை அண்ணளவாக,
1) 24N 2) 36N 3) 40N
4) 176N 5) 240N

157. $1000kgm^{-3}$ அடர்த்தியுடைய தெளிவான நீரில் ஒரு கப்பல் மிதக்கிறது. பின்னர் அது $1050kgm^{-3}$ அடர்த்தியுடைய கடல் நீரினுள் செல்கிறது. கப்பலில் தாக்கும் மேலுதைப்பு,
1) மாறாதிருக்கும். 2) குறைவடைகிறது. 3) அதிகரிக்கிறது.
4) 0.05 மடங்கால் அதிகரிக்கிறது.
5) 0.05 மடங்கால் குறைவடைகிறது.

158. மேசைத்தராசு ஒன்றின் மீது நீரைக்கொண்ட முகவை ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதன் வாசிப்பு G ஆகும். W நிறையுடையதும் F மேலுதைப்பை அனுபவிப்பதுமான ஒரு திண்மப்பொருள் முகவையிலுள்ள நீரினுள் முழுமையாக அமிழ்ந்திருக்குமாறு தொங்கவிடப்படுகிறது. தராசின் வாசிப்பு,
1) G - F 2) G 3) G + F
4) G + W - F 5) G + W

159. 12cm நீளமான இலேசான கோல் ஒன்றின் ஒரு முனையில் ஒரு திண்மமும் மறு நுனியில் 0.05kg திணிவும் தொங்கும்போது கோல் மத்தியில் வைக்கப்படும் கத்தி ஓரத்தில் சமன் செய்கிறது. திண்மம் நீரினுள் முழுமையாக அமிழ்த்தப்பட்டபோது சமநிலைப் புள்ளியைப் பெற கத்தி ஓரத்தை 2cm நகர்த்த வேண்டியிருந்தது. திண்மம் வேறோர் திரவத்தினுள் முழுமையாக அமிழ்த்தப்பட்டபோது சமநிலைப் புள்ளிகளைப் பெற கத்தி ஓரத்தை மேலும் 2cm நகர்த்த வேண்டியிருந்தது. திரவத்தின் சாரடர்த்தி,
1) 1.2 2) 1.4 3) 1.6
4) 1.8 5) 2.0

160. $750kgm^{-3}$ அடர்த்தியுடைய பதார்த்தத்தாலான திண்ம உருளை ஒன்று 20cm உயரமுடையது. அது தனது அச்சு நிலைக்குத்தாக இருக்குமாறு நீரினுள் மிதக்கிறது. நீர்ப்பரப்பிற்கு வெளியே இருக்கும் உருளையின் உயரம்,
1) 15cm 2) 12cm 3) 10cm
4) 9cm 5) 5cm

161. விற்றராசு ஒன்றிலிருந்து ஒரு பொருள் தொங்கவிடப்பட்டுள்ளது. மலை ஒன்றின் அடிவாரத்திலும் அதன் உச்சியிலும் தராசின் வாசிப்புக்கள் எடுக்கப்படுகின்றன. அடிவாரத்திலும் பார்க்க உச்சியில் வாசிப்புக் குறைவாக உள்ளது. இதற்குக் காரணமாக இருக்கக் கூடியவை,
A - மலை உச்சியில் வளிமண்டல அமுக்கம் குறைவானது.
B - மலை உச்சியில் புவியீர்ப்புப்புல வலிமை குறைவானது.
C - மலை உச்சியில் வெப்பநிலை குறைவு.
இவற்றுள் சரியானவை,
1) A மட்டும். 2) B மட்டும். 3) C மட்டும்.
4) A,B மட்டும். 5) B,C மட்டும்.

தொடர்ச்சி VI பக்கத்தில் .....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பக்கம் V இன் தொடர்ச்சி.....

162. சீரான குறுக்குவெட்டுடைய உருளை வடிவப் பாத்திரம் ஒன்று நீரினால் நிரப்பப்பட்டுள்ளது. அதன் வளைந்த பரப்பின்மீது நீர் கொடுக்கும் உதைப்பின் விளையுள்,
1) நிலைக்குத்தாகக் கீழ்நோக்கி இருக்கும்
.2)நிலைக்குத்தாக மேல்நோக்கி இருக்கும்.
3) கிடையாக இருக்கும். 4) பூச்சியமாக இருக்கும்.
5) நிலைக்குத்தாகக் கீழ்நோக்கி அல்லது மேல்நோக்கி இருக்கும்.

163. ஒரு முனை மூடப்பட்ட ஒரு சிறிய குழாய் ஒரு திரவத்தில் மிதக்கிறது. குழாயின் அரைவாசி நீளம் திரவத்தினுள் அமிழ்ந்திருக்க குழாய் நிலைக்குத்தாக மிதக்கிறது. பின்வரும் மாற்றங் களுள் எது குழாய் மேலும் அமிழ்வதற்குக் காரணம் ஆகாதது?
1) திரவத்தின் அடர்த்தி குறைக்கப்படல்.
2) குழாயினுள் சிறிய திணிவு வைக்கப்படல்.
3) வளிமண்டல அமுக்கம் அதிகரிக்கப்பட்டமை. 4) திரவம் சூடாக்கப்பட்டமை.
5) குழாயினுள் ஒரு தக்கை இடப்படல்.

164. திரவம் ஒன்றினுள் உள்ள ஒரு புள்ளியிலுள்ள அமுக்கம் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எந்த ஒன்று உண்மையானது அல்ல?
1) எல்லாத்திசைகளிலும் சமமாகத்தாக்குகிறது. 2) ஆழத்துடன் அதிகரிக்கிறது.
3) கிடையை விட நிலைக்குத்தில் அதிகமாக உள்ளது. 4) அடர்த்தியுடன் அதிகரிக்கிறது.
5) ஈர்ப்பு ஆர்முடுகலுடன் மாறுபடுகிறது.

165. 500g நிறையுடையதும் $2000kgm^{-3}$ அடர்த்தியுடையதுமான திண்மப்பொருள் ஒன்று $1000kgm^{-3}$ அடர்த்தியுடைய நீரினுள் வைத்து விடுவிக்கப்படுகிறது. அப்பொருளினது ஆர்முடுகல் தொடக்கத்தில்,
1) $2.5ms^{-2}$ 2) $2ms^{-2}$ 3) $5ms^{-2}$
4) $4.5ms^{-2}$ 5) $5.6ms^{-2}$

166. முகவை ஒன்றிலுள்ள மண்ணெய்யினுள் ஒரு பனிக்கட்டி உருகும்போது எண்ணெய் மட்டம்,
1) ஏறும். 2) இறங்கும்.
3) மாறாதிருக்கும். 4) முதலில் ஏறிப்பின்னர் மாறாதிருக்கும்.
5) முதலில் இறங்கிப் பின் ஏறும்.

167. கண்ணாடியிலான கோளம் ஒன்றினுள் 10 சர்வசமனான வளிக்குமிழிகள் உள்ளன. அக்கோளம் வளியில் 200g நிறையுடையது. அதை நீரினுள் முற்றாக அமிழ்த்தி நிறுக்கும்போது 100g நிறை உடையதாகக் காண்பப்பட்டது. கண்ணாடியின் அடர்த்தி $2500kgm^{-3}$ எனின், ஒவ்வொரு வளிக்குமிழியினதும் கனவளவு,
1) $1cm^3$ 2) $2cm^3$ 3) $3cm^3$
4) $5cm^3$ 5) $6cm^3$

168. $800kgm^{-3}$ அடர்த்தியுடைய உருக்கினாலான திண்மக்குற்றி ஒன்று இலேசான இழை ஒன்றின் உதவியால் குற்றியானது நீரில் முற்றாக அமிழ்ந்திருக்குமாறு பிடிக்கப்பட்டுள்ளது. இழையில் உள்ள இழுவை 35N எனின், குற்றியின் நிறை,
1) 20N 2) 40N 3) 60N
4) 75N 5) 80N

169. இரு பதார்த்தங்களின் சமகனவளவுகள் கலக்கப்படும்போது கலவையின் சாரடர்த்தி 8 ஆகும். அவற்றின் சமதிணிவுகள் கலக்கப்படும்போது கலவையில் சாரடர்த்தி 6 ஆகும். அப் பதார்த்தங்களின் சாராடர்த்திகள்,
1) 12, 6 2) 12, 4 3) 6, 10
4) 4, 8 5) 8, 8

170. ஒரு பொது நீரமானியின் தண்டில் 0.5 தொடக்கம் 1.5 வரையும் சாரடர்த்தி வாசிப்புகள் உள்ளன.தண்டின் மத்தியில் உள்ள வாசிப்பு,
1) 0.6 .2) 0.75 3) 0.9
4) 1.0 5) 1.25

171. நீரமானி ஒன்று 0.9 சாரடர்த்தியுடைய ஓர் எண்ணெயில் தனது கனவளவின் 1/5 பங்கு எண்ணெய்ப் பரப்பிற்கு வெளியே இருக்கத்தக்கவாறு மிதக்கிறது. அதன் கனவளவின் 1/10 பங்கு திரவப்பரப்பிற்கு வெளியே இருக்கத்தக்கதாக மிதக்கும் திரவத்தின் சாரடர்த்தி,
1) 0.8 2) 1.1 3) 1.05
4) 1.5 5) 1.8

172. கப்பல் ஒன்று நீரில் h எனும் ஆழத்திற்கு அமிழ்ந்து மிதக்கிறது. புவியீர்ப்பு ஆர்முடு கலின் பெறுமானம் சடுதியாக அரைப்பங்காகுமாயின் தற்போது கப்பல் அமிழும் ஆழம்,
1) 2h 2) 3h 3) h/2
4) h/ 2 5) h

173. ஏயரின் ஆய்கருவி ஒன்றில் ஒரு புயத்தில் நீர் நிரலும் மறுபுறத்தில் $CuSO_4$ கரைசல் நிரலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நீர் நிரலின் உயரம் 40cm $CuSO_4$ கரைசல் நிரலின் உயரம் 32cm $CuSO_4$ கரைசலின் சாரடர்த்தி,
1) 0.8 2) 1.1 3) 1.05
4) 1.25 5) 1.35

174. $6 \times 10^{-4}m^3$ கனவளவுடைய பந்து ஒன்று நீர்-எண்ணெய் இடைமுகத்தில் அதன் ஒரு அரைப் பகுதி நீரினுள்ளும் மிகுதி அரைப்பகுதி எண்ணெயினுள்ளும் அமிழ்ந்திருக்கும் வகையில் முற்றாக அமிழ்ந்து மிதக்கிறது. நீரினதும் எண்ணெய்யினதும் அடர்த்திகள் முறையே $1000kgm^{-3}$ $800kgm^{-3}$ ஆயிருப்பின் வளியில் அப்பந்தின் நிறை,
1) 0.6kg 2) 0.54kg 3) 0.52kg
4) 0.5kg 5) 0.42kg


175. ஒரு முகவையிலே விளிம்பு வரைக்கும் நீர் நிரப்பப்பட்டுள்ளது. முகவையின் வெளிப்பக்கங்கள் துடைக்கப்பட்டு அம்முகவை ஒரு தராசிலே வைக்கப்படுகிறது. பின்னர் முகவை வெளியே எடுக்கப்பட்டு முகவையினுள் ஒரு உருக்குத்துண்டு இடப்படுகிறது. முகவையின் வெளிப்பக்கம் மீண்டும் துடைக்கப்பட்டதும் முகவை அத்தராசில் வைக்கப்படுகிறது. இரண்டாம் சந்தர்ப்பத்தில் பெறப்பட்ட தராசின் வாசிப்பானது,
1) முதலாம் சந்தர்ப்பத்தில் பெற்ற வாசிப்புக்குச் சமன்.
2) முதலாம் சந்தர்ப்பத்தில் பெற்ற வாசிப்பிலும் கூடவாகும்.
3) முதலாம் சந்தர்ப்பத்தில் பெற்ற வாசிப்பிலும் குறைவாகும்.
4) முதலாம் சந்தர்ப்பத்தில் பெற்ற வாசிப்புக்குச் சமனாகவோ அல்லது அதனிலும், குறை வாகவோ இருக்கலாம்.
5) முதலாம் சந்தர்ப்பத்தில் பெற்ற வாசிப்புக்குச் சமனாகவோ அல்லது அதனிலும், கூடவாகவோ இருக்கலாம்.

176. ஒரு திண்மம் நீரில் அமிழ்த்தப்படும்போது 60g தோற்ற நிறையும் திரவம் ஒன்றினுள் முழுவதாக அமிழ்த்தி நிறுக்கும்போது 56g தோற்ற நிறையும் உடையதாகக் காணப்பட்டது. அத்திண்மம் 80g திணிவுடையது எனின், திரவத்தின் சாரடர்த்தி,
1) 0.8 2) 1.1 3) 1.2
4) 1.4 5) 1.5

177. உயர்த்தி ஒன்றினுள் நீரைக்கொண்ட பாத்திரம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. உயர்த்தியானது மேல்நோக்கி a என்னும் ஆர்முடுகலுடன் இயங்கும்போது நீர்ப்பரப்பிற்குக்கீழ் h ஆழத்தில் உள்ள புள்ளியில் அமுக்கம்,
(நீரின் அடர்த்தி ρ எனவும், வளிமண்டல அமுக்கம் A எனவும் கொள்க)
1) A 2) $A + h\rho g$ 3) $A + h\rho(g-a)$
4) $A + h\rho (g+a)$ 5) பூச்சியம்.

178. $2m^3$ கனவளவையும் 100kg திணிவையும் உடைய தொடுக்கும் படகு ஒன்று நீரில் மிதக்கிறது. நீரின் அடர்த்தி $1000kgm^{-3}$ எனின், இப்படகின் கனவளவின் 3/4 பங்கிற்கு மேல் அமிழாதவாறு தாங்கக்கூடிய ஒவ்வொருவரும் 60kg திணிவுடைய மனிதர்களின் உயர் எண்ணிக்கை,
1) 16 2) 19 3) 23
4) 31 5) 32

179. $800kgm^{-3}$ அடர்த்தியுடைய எண்ணெயைக் கொண்டுள்ள u குழாய் ஒன்றின் ஒரு திறந்த முனைக்குச் சற்று மேலாகக் கிடைத்திசையில் ஒரு வாயுத்தாரை (அடர்த்தி $1.2kgm^{-3}$) செலுத்தப்படுகிறது. அப்போது குழாயின் இரு புயங்களிலும் உள்ள எண்ணெய் மட்டங்களுக்கிடையிலான வித்தியாசம் 1.2mm எனக் காணப்படுகிறது. எண்ணெய்த் தாரையின் கதி,




1) $2ms^{-1}$ 2) $4ms^{-1}$
3) $6ms^{-1}$ 4) $8ms^{-1}$
5) $16ms^{-1}$

180. மேல்த்தட்டுத் தராசு ஒன்றின் மீது நீர்கொண்ட முகவை வைக்கப்பட்டுள்ளபோது அதன் வாசிப்பு 10.8N ஆகும். 4.32N நிறையும், $6 \times 10^{-5}m^3$ கனவளவும் உடைய உலோகக் குற்றி ஒன்று இழை ஒன்றினால் தாங்கப்பட்டு நீரினுள் முற்றாக அமிழ்ந்திருக்குமாறு பிடிக்கப்படுகிறது. அது பாத்திரத்தின் அடியையோ பக்கங்களையோ தொடாதவாறு பிடிக்கப்படுகிறது. தற்போது தராசின் வாசிப்பு,
1) 10.2N 2) 10.8N 3) 11.4N
4) 14.52N 5) 15.12N

181. $800kgm^{-3}$அடர்த்தியுடைய பதார்த்தத்தாலான திண்ம உருளை ஒன்று 30cm உயரமுடையது. நீரினுள் தனது அச்சு நிலைக்குத்தாக இருக்குமாறு மிதக்கவிடப்பட்டுள்ளது. நீரினுள் அமிழ்ந்துள்ள உருளையின் உயரம்,
1) 24cm 2) 28cm 3) 15cm
4) 16cm 5) 20cm

நிறைவு பெற்றன.

## பௌதிகவியலின் விடைக்குறிப்புக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01 - 2 | 02 - 2 | 03 - 4 | 04 - 3 | 05 - 3 |
| 06 - 1 | 07 - 5 | 08 - 4 | 09 - 2 | 10 - 2 |
| 11 - 2 | 12 - 5 | 13 - 4 | 14 - 2 | 15 - 3 |
| 16 - 3 | 17 - 3 | 18 - 2 | 19 - 4 | 20 - 5 |
| 21 - 2 | 22 - 3 | 23 - 4 | 24 - 2 | 25 - 1 |
| 26 - 2 | 27 -5 | 28 - 2 | 29 - 4 | 30 - 3 |
| 31 - 3 | 32 - 2 | 33 - 1 | 34 - 2 | 35 - 1 |
| 36 - 2 | 37 - 1 | 38 - 2 | 39 - 3 | 40 - 4 |
| 41 - 5 | 42 - 2 | 43 - 5 | 44 - 3 | 45 - 3 |
| 46 - 4 | 47 - 5 | 48 - 2 | 49 - 3 | 50 - 3 |
| 51 - 1 | 52 - 5 | 53 - 2 | 54 - 4 | 55 - 4 |
| 56 - 4 | 57 - 1 | 58 - 5 | 59 - 4 | 60 - 4 |
| 61 - 5 | 62 - 4 | 63 - 5 | 64 - 2 | 65 - 3 |
| 66 - 1 | 67 - 4 | 68 - 2 | 69 - 3 | 70 - 4 |
| 71 - 3 | 72 - 5 | 73 - 5 | 74 - 5 | 75 - 5 |
| 76 - 4 | 77 - 3 | 78 - 2 | 79 - 5 | 80 - 1 |
| 81 - 5 | 82 - 3 | 83 - 2 | 84 - 1 | 85 - 2 |
| 86 - 3 | 87 - 3 | 88 - 3 | 89 - 2 | 90 - 4 |
| 91 - 5 | 92 - 3 | 93 - 4 | 94 - 1 | 95 - 2 |
| 96 - 2 | 97 - 3 | 98 - 2 | 99 - 1 | 100 -4 |
| 101 -4 | 102 -2 | 103 -2 | 104 -3 | 105 -3 |
| 106 -3 | 107 -1 | 108 -1 | 109 -4 | 110 -2 |
| 111 -3 | 112 -1 | 113 -5 | 114 -4 | 115 -3 |
| 116 -4 | 117 -3 | 118 -1 | 119 -1 | 120 -2 |

விடைக்குறிப்புக்களின் தொடர்ச்சி பக்கம் II இல்...

இப் பகுதி தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் 0777550332 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் காலை 9.30 தொடக்கம் மாலை 4.30 வரை தொடர்புகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org